விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
## Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 30 செவ்வாய்க்கிழமை (13.05.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 145

# யுத்தவெற்றி நிகழ்வு புதுக்குடியிருப்பில்!

(முல்லைத்தீவு)

வன்னியுத்தம் முடிவடைந்து ஐந்து வருடங்கள் ஆகின்ற நிலையில் மீண்டும் ஒரு யுத்த நிலைமை ஏற்படுவதற்கு இடமளிக்கக் கூடாது என்ற தொனியில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் நேற்றுத் திங்களன்று யுத்தவெற்றி சின்னத்திற்கு அஞ்சலி செலுத்தி வெற்றி நிகழ்ச்சி கொண்டாடப்பட்டுள்ளது.


இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வட மாகாண ஆளுனர் மற்றும் முக்கிய விருந்தினர்கள் அஞ்சலி செலுத்தினார்கள். இதனையடுத்து அங்கு உரையாற்றிய வட மாகாண ஆளுனர் சந்திரசிறி, யுத்தத்தினால் பொருளாதார சேதம் ஏற்பட்டது. உயிரிழப்புக்கள் நேர்ந்தன. உடைமைகள் நாசமாகின. அதற்கும் மேலாக பலரும் மனவேதனைக்கு உள்ளாகியிருக்கின்றார்கள். எமது தாய்நாட்டில் அத்தகையதொரு நிலைமை மீண்டும் உருவாகுவதற்கு நாங்கள் இடமளிக்கக் கூடாது என குறிப்பிட்டார்.

எதிர்கால சந்ததியினரின் நல்வாழ்க்கைக்காகவும், போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்காகவும் மேற்கொள்ளபபடுகின்ற நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

இந்த நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தலையெடுக்கக் கூடாது என்பதே ஜனாதிபதியினதும் பாதுகாப்பு

19 ஆம் பக்கம் பார்க்க..

ஸ்வாமி சோதிடர் எழுதும் அதிர்ஷ்டத்தை அள்ளித் தரும் எண் கணித பலன்கள் நாளை முதல் உங்கள் வலம்புரியில்...
**வாசிக்கத் தவறாதீர்கள்**



ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பேலியகொட நகரசபை உறுப்பினர் ஷமில சந்தருவான் தனது காரில் பயணித்துக் கொண்டிருந்தபோது சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். சம்பவ இடத்தில் பொலிஸார் சூழ்ந்துள்ளதை படத்தில் காணலாம்.

# விக்னேஸ்வரனை பதவிநீக்க த.தே.கூட்டமைப்பு சதி முயற்சி

### பொது வேட்பாளர் குறித்து பசில் கருத்து

(கொழும்பு)

வட மாகாண சபை முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக களமிறக்கப்பட்டால் அது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் அடைகின்ற பாரிய வெற்றியாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வட மாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக நிறுத்துவதற்கு முயற்சிக்கப்படுவதாக வெளிவரும் தகவல்கள் மற்றும் முதலமைச்சர் விக்னேஸ்வரனை சந்திப்பதற்கு அமைச்சர் பஷில் ராஜபக்ஷ முயற்சிகளை மேற்கொண்டுவருதல் உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து குறிப்பிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின


19 ஆம் பக்கம் பார்க்க..

# கூட்டணிக் கட்சியின் தலைவர்களை அவசரமாக சந்திக்கிறார் மகிந்த !

### வலுக்கிறதா உட்பூசல்?

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துக்குள் உட்கட்சிப்பூசல் பூதாகரமாக உரு வெடுத்து வரும் நிலையில், நெருக்கடிகளைச சமாளிக்கும் நோக்கில் பங்காளிக் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரச தலைமை தீர்மானித்துள்ளதென அரசியல் வட்டாரங்களிலிருந்து



அறியமுடிகின்றது.

இதற்கமைய இவ்வாரத்துக்குள் பங்காளிக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும், இதன்போது எதிர்கால அரசியல நகர்வுகள் பற்றி

20 ஆம் பக்கம் பார்க்க..

# இலங்கைத் தமிழர்களை கைது செய்யக் கூடாது

### மனித உரிமை ஆர்வலர்கள் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் நடக்கும் அடக்குமுறையில் இருந்து தப்பி தமிழகம் சென்ற 10 இலங்கை தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை இராமநாதபுரத்தில் உள்ள மனித உரிமை ஆர்வலர்களையும் தமிழ் ஆர்வலர்களையும் ஆத்திரமடைய செய்துள்ளதாக தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

5 சிறுபிள்ளைகள் உட்பட 10 இலங்கை தமிழர்கள் தமிழகத்தின் தனுஷ்கோடியில் கரையிறங்கினர். இவர்களை வெளிநாட்டினர் சட்டத்தின் கீழ் கைது செய்த பொலிஸார், கடந்த 5 ஆம் திகதி சென்னை புழல் சிறையில் அடைத்துள்ளனர்.

இந்த அகதிகள் இரண்டு குழுககளாக சென்றிருந்தனர். இலங்கையில் அரச படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற 3 தசாப்த போர் காரணமாக இந்தியாவில் பல தமிழர்கள் புக

20 ஆம் பக்கம் பார்க்க..

# ஜனாதிபதித் தேர்தல் பற்றி ஆராய புத்திஜீவிகள் குழு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வது சம்பந்தமாக எதிர்க்கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளுடன் கலந்துரையாடி பொது இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்காக புத்திஜீவிகளடங்கிய மத்தியஸ்த

20 ஆம் பக்கம் பார்க்க..



# ஜனாதிபதியின் செயலாளருடன் பகிரங்க விவாதத்திற்கு தயார்

### சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

போர்க்குற்றம் தொடர்பிலான சர்வதேச விசாரணை தவிர ஏனைய அனைத்துப் பரிந்துரைகளையும் அரசாங்கம் நிறை வேற்றத் தயார் என்பது உண்மையாயின், இம்மாத இறுதிக்குள் அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும். வாக்குறுதி கொடுப்பதைவிட செயலில் காட்ட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை சிறிதளவேனும் அமுல்படுத்தவில்லை. இது தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளருடன் பகிரங்க விவாதத்திற்கு



நான் தயார் எனவும் அவர் குறிப்பிட்டார். சர்வதேச விசாரணையினை தவிர அனைத்து பரிந்துரைகளை

20 ஆம் பக்கம் பார்க்க..

# இலங்கை-இந்திய மீனவர் பேச்சு இணக்கப்பாடின்றி நேற்று முடிவு

(கொழும்பு)

இலங்கை-இந்திய மீனவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில், இருநாட்டு பிரதிநிதிகளுக்கும் இடையில் கொழும்பில் நேற்றுக் காலை ஆரம்பமான இரண்டாமசுற்றுப் பேச்சுவார்த்தைகள் இணக்கப்பாடின்றி முடிவுக்கு வந்தன.

இருநாட்டு மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் இதுவரையில் எவ்வித இணக்கப்பாடுகளும் எட்டப்பட வில்லை என வினவியபோது கடற்றொழில் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் நரேந்திர ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்திய-இலங்கை மீனவர்களுக்கு இடையிலான இரண்டாம் சுற்று பேச்சுவார்த்தை கொழும்பில் நேற்று முற்பகல் 9.30 அளவில் ஆரம்பமானது.

இந்த பேச்சுவார்த்தைக்காக இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தி 19 மீனவர்களும், 8 அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

அத்துடன், புதுடில்லி வெளியுறவுத் துறை அமைச்சின் இணைச் செயலாளர்சுஜித்ரா துரை மற்றும் இந்

20 ஆம் பக்கம் பார்க்க..

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளையார் இன்

எமது உணவகத்தில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்டு தரமான சைவ, அசைவ உணவுகள் நிறைவான சேவையுடன் வழங்கப்படுகின்றன. **விசேடமான உணவுகளான**

- மசாலா தோசை - 150/=மட்டுமே.
- பேப்பர் தோசை, வெங்காய தோசை, நெய்த் தோசை - 120/= மட்டுமே.
- பூரி, சப்பாத்தி - 100/ மட்டுமே.

தினமும் மாலை 6 மணிமுதல் 10 மணிவரை விசேட உணவுகளான மரக்கறி புரியாணி, பிறைட் றைஸ், சிக்கின் புரியாணி, சிக்கின் பிறைட் றைஸ் என்பன விசேட விலைக் கழிவுடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம். (சி-7347)

இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 0212222829


# பாடசாலை மாணவி மீது இனந்தெரியாத நபர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவி மீது இனந்தெரியாத நபர் ஒருவர் தாக்குதல் மேற்கொண்ட சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை மாணவி மீது தாக்குதல் மேற்கொண்ட நபரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

இந்தத் தாக்குதல சம்பவம் நேற்று பிற்பகல் 2 மணியளவில் யாழ்.திருநெல்வேலிப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

வீதியால் சென்று கொண்டிருந்த குறித்த மாணவியை இடைமறித்த 23 வயதுடைய நபர் ஒருவரே மாணவியின் கன்னத்தில் கையால் பலமாக அடித்துள்ளார்.

இதேவேளை மாணவியின் துவிச்சக்கரவண்டியின் காற்றினையும் திறந்துவிட்டு அங்கிருந்து சென்றுள்ளார்.

இந்நிலையில் தாக்குதலுக்குள்ளான குறித்த பதின்ம வயது மாணவி தனது வீட்டுக்கு அழுதபடி சென்றுள்ளார்.

இதனையடுத்து சம்பவம் தொடர்பாக கேட்டறிந்த பெற்றோர் மாணவியுடன் சென்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை மாணவி மீது தாக்குதல் மேற்கொண்ட நபர் தொடர்பாக கேட்டறிந்து கொண்ட பொலிஸார் குறித்த நபரைக் கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டபோது அந்நபர் தலைமறைவாகியுள்ளார் என்பது தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (செ-6)

## யாழ்ப்பாணம் மாநகரசபை
## வீதிக்குப் பெயர் மாற்றம்

மக்களின் வேண்டுகோளிற்கிணங்க இலந்தைக்குளம் வீதியிலிருந்து கொழும்புத்துறை வீதி வரையான தற்போதைய **ஆரியர் வீதியினை விபுலானந்தர் வீதி** எனப் பெயர் மாற்றம் செய்யப்படவுள்ளமையால் இதற்கான பொதுமக்களின் கருத்தினை எதிர்பார்க்கின்றோம். மக்களின் கருத்துக்களை/அபிப்பிராயங்களை இன்றிலிருந்து 14 நாட்களுக்குள் ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

திருமதி யோ.பற்குணராசா,
முதல்வர், மாநகர சபை, யாழ்ப்பாணம்.

(சி-7352)

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை
## விசேட அறிவித்தல்

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குச் சொந்தமான 179 ஆம் இலக்க பி.ச - 01 பற்றுச்சீட்டு புத்தகம் (8901 - 8950) தொலைந்து விட்டது. இப்பற்றுச்சீட்டு புத்தகத்தில் 8939 தொடக்கம் 8950 வரையான 12 பற்றுச்சீட்டுகள் மூலம் கொடுக்கல் வாங்கல்கள் செய்வது இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன் 12 பற்றுச்சீட்டுகள் தொடர்பிலான கொடுக்கல் வாங்கல்களுக்கு எமது சபை பொறுப்பேற்கமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
பச்சிலைப்பள்ளி
பிரதேச சபை,
பளை.

(சி-7353)

## கஞ்சாவுடன் கைதான பெண்ணிற்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

கேரள கஞ்சாவுடன் கைது செய்ப்பட்ட நபரை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

வேலணை நாலாம் வட்டாரப் பகுதியில் ஒரு கிலோ 750 கிராம் நிறையுடைய கஞ்சாப் பொதியினை வைத்திருந்த பெண் ஒருவர் பொலிஸாருக்கு கிடைக்க பெற்ற இரகசிய தகவலை அடுத்து நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டார்.

பெண்ணின் வீட்டை சோதனையிட்ட போது ஒரு கிலோ 750 கிராம் நிறையுடைய கேரள கஞ்சாவினை கைப்பற்றியதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் குறித்த பெண்ணை பொலிஸார் ஆஜர்ப்படுத்திய போதே நீதவான் செ.லெனின் குமார் மேற்கண்டவாறு உத்தரவிட்டார். (செ-6)

## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை)
வட்டாரம் :- 15
**ஆதன இலக்கம் :- 76 (புதிய பதிவு)**
**கீரிமலை வீதி, சண்டிலிப்பாய்.**

வட்டாரம் 15 கீரிமலை வீதி, சண்டிலிப்பாய் ஆதன இலக்கம் 76 (புதிய பதிவு) இல் அமைந்துள்ள உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவில்பற்று சண்டிலிப்பாய் இறை "குமாரசாமிப் பிள்ளை வளவு அல்லது முருகேசபிள்ளை வளவு" என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு இரண்டு (நி.பர.02) கொண்ட இவ்ஆதனமானது சண்டிலிப்பாயைச் சேர்ந்த துஷியந்தன் பெண் வைதேகி ஆகிய இவர்களால் அறுதி உறுதி மூலம் சண்டிலிப்பாயைச் சேர்ந்த வேலாயுதம் சிவசக்திவேல் என்பவருக்கு குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிஸ் திருமதி ச.இளங்கேவன் முகதாவில் நிறைவேறிய 5940 ஆம் இலக்க 2010.12.05 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்குச் சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். இவ் "குமாரசாமிப்பிள்ளை வளவு அல்லது முருகேசபிள்ளை வளவு" நிலப்பரப்பு இரண்டு (நி.பர.02) இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு யாராவது எவ்வித உரிமையும் 14 நாட்களுக்குள் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் வேலாயுதம் சிவசக்திவேல் என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

தவிசாளர்,
வலி.தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

(6370)


## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(C-7348)



## மணிவிழா நாயகனை பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு. அழகரத்தினம் பத்மநாதன் SLTS I**
(உப அதிபர், யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்)

41 வருடங்களுக்கும் மேலாக ஆசிரியராக அரும் பணியாற்றி 13.05.2014 தனது 60-வது வயது பூர்த்தியடையும்வேளை ஆசிரிய சேவையிலிருந்தும் ஓய்வுபெறும் மணிவிழா நாயகனைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

| சேவை விபரம் | தொடக்கம் | | வரை |
|---|---|---|---|
| 1. யா/வரணி ம.வி.வரணி | 04.12.1972 | - | 07.01.1975 |
| 2. யா/பலாலி ஆசிரிய கலாசாலை | 08.01.1975 | - | 31.12.1976 |
| 3. குளி/மதீனா.ம.வி.பஹமுனே | 01.01.1977 | - | 28.02.1977 |
| 4. குளி/கெக்குண கொல்ல முஸ்லிம் ம.வி கட்டுப்பொத்த | 01.03.1977 | - | 31.12.1981 |
| 5. யா/வரணி ம.வி வரணி | 01.01.1982 | - | 14.05.1989 |
| 6. யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் சாவகச்சேரி | 15.05.1989 | - | 10.05.1992 |
| 7. யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் நீர்வேலி | 11.05.1992 | - | 12.05.2014 |

13.05.2014

பாராட்டி வாழ்த்துவோர் :
அ.பர்குணநாதன் குடும்பத்தினர்
கல்வயல், சாவகச்சேரி.

(சி-7350)



## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



**வைத்திய கலாநிதி வை.தியாகராசா**

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்டம் B 1க்கான மகாநாடு கொழும்பு சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற போது உப ஆளுநரை தெரிவு செய்வதற்கான தேர்தலில் போட்டியிட்ட தேசபந்து, தேசமாணிய, கருமத்திரி **வைத்திய கலாநிதி வை.தியாகராசா** (MJF J.P) அவர்கள் 56 அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற்று சாதனை படைத்தமைக்கு அவரது சேவை தொடர அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்

பாரதி லேன்,
நாயன்மார்கட்டு.

இ.மயில்வாகனம்
(அகில இலங்கை சமாதான நீதிவான்)

(6370)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்டெம்பர் முதல் வாரத்தில் நீர்வள அபிவிருத்தி ஆய்வரங்கு

வடக்கு மாகாணத்தின் நீர் வளத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பான இரண்டு நாள் ஆய்வரங்கு ஒன்றை வடமாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு எதிர்வரும் செப்ரெம்பர் முதல் வாரத்தில் நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக வடமாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்திருக்கும் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு மாகாணத்தின் எல்லைக்கு உட்பட்ட ஐந்து மாவட்டங்களிலும் குடிநீர் மற்றும் விவசாயத் தேவைகளுக்கான நன்னீரின் பயன்பாடு அதிகரித்துச் செல்லும் அதேசமயம் நன்னீருக்கான பற்றாக்குறையும் அதிகரித்துச் செல்கிறது. மேலும், சூழல் விரோதச் செயற்பாடுகளினால் இருக்கின்ற நீரிலும் மாசுக்கள் கலந்து வருகின்றன. பூமி வெப்பமடைவதால் ஏற்படும் காலநிலை மாற்றங்களினால் வருங்காலங்களில் அதிக வரட்சியை எதிர்கொள்ள நேரிடும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

எமது மக்களின் உயிர் ஆதாரமும், விவசாயப் பொருளாதாரத்தின் மூலாதாரமுமான நன்னீர் வளத்தைக் காப்புச் செய்து அதனை நிலைபேறான அபிவிருத்தி அடையச் செய்யவேண்டிய பாரிய பொறுப்பு வடக்கு மாகாணசபையினராகிய எங்களுக்கு உண்டு. அதற்கு ஏற்ற கொள்கைகளை வகுத்துத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முன்னோடியாக எதிர்வரும் செப்டெம்பர் முதல் வாரத்தில் வடமாகாண நீர்வள அபிவிருத்தி தொடர்பான இரண்டு நாள் ஆய்வரங்கு ஒன்றை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தின் நீரியலுடன் தொடர்புடைய நிபுணர்களை இந்த ஆய்வரங்கில் கலந்துகொண்டு ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்குமாறு வேண்டுகிறோம். கலந்துகொள்ள விரும்பும் ஆய்வறிஞர்கள் எதிர்வரும் ஜூன் மாதம் 05 ஆம் திகதிக்கு முன்பாக விவசாய அமைச்சு, இல. 295, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்குத் தபால் மூலமாகவோ அல்லது npagrimini@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கோ தங்கள் பெயர் விபரங்களையும் சமர்ப்பிக்க விரும்பும் ஆய்வுக்கட்டுரையின் உத்தேச தலைப்பையும் அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம்.

வடக்கின் இருப்பு நன்னீர் வளத்தின் கையிருப்பிலேயே தங்கியிருப்பதால் இம் முயற்சியில் ஆய்வாளர்கள் அனைவரையும் தவறாது பங்கேற்குமாறு கோருகிறோம் என்று அந்த செய்திக்குறிப்பில மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-6)

# வாக்காளர் இடாப்பு திருத்தம் 16 ஆம் திகதி

## தேர்தல் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

வாக்காளர் இடாப்பு திருத்தப் பணிகள் எதிர்வரும் 16 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் வாக்காளர் இடாப்பு திருத்தம் டிசம்பர் 31 ஆம் திகதியே நிறைவு செய்யப்படுகின்ற போதும் இம்முறை இரண்டு மாதங்களுக்கு முன்னரே நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வருடம் வாக்காளர் இடாப்பு திருத்தம் 5 மாதங்கள் இடம்பெறவுள்ள நிலையில் ஒக்டோபர் 31 ஆம் திகதி நிறைவு செய்யப்படவுள்ளது.

எதிர்வரும் காலங்களில் ஜனாதிபதி அல்லது பொதுத் தேர்தல் நடத்தப்படலாம் என பரவலாக பேசப்படுகிறது.

இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் அல்லது பொதுத் தேர்தல் நடத்தப்படலாம் என்று அரசியல் களத்தில் பேசப்பட்டு வரும் நிலையில ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என மற்றுமொரு தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து அரசாங்கத்திற்குள் பேச்சுவார்த்தை இடம்பெற்று வருவதாக தெரியவருகிறது. (2)



பாலர் கல்விக் கழக ஞானக் குழந்தையின் வருடாந்த பேச்சுத்திறன் விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா, கழகத் தலைவர் எஸ்.பி. காசிநாதன் உட்பட கழக உறுப்பினர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டுள் ளதை படத்தில் காணலாம்.

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

# பாட விதான ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக் கழக யாழ்.பிராந்திய நிலையத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படும் தாதியியல் விஞ்ஞானமானிப் பட்டக் கற்கை நெறிக்கான பாட விதான ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

விண்ணப்பதாரி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தாதியியல் விஞ்ஞான மானிப்பட்டம் பெற்றவராக இருப்பதுடன் அத் துறையில் பட்டப்பின் தகைமை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக தங்கள் சுயவிபரக் கோவையினைப் பூர்த்தி செய்து உதவிப் பணிப்பாளர், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம், யாழ்.பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவில் யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்குமாறு யாழ்.பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (2)

# உ/த மாணவர்களுக்கான பாடத்தெரிவு செயலமர்வு

யாழ்.மாவட்ட பாடசாலைகளில் க.பொ.த உயர்தர 2006 ஆம் ஆண்டு பிரிவிற்கு தெரிவான மாணவர்களுக்கான பாடத்தெரிவு தொடர்பான செயலமர்வானது யாழ். கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் நடைபெற்று வருகிறது.

இதற்கமைய இன்று செவ்வாய்க் கிழமை யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இடம் பெறவுள்ளது. அதனைத்தொடர்ந்து எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியிலும் இடம்பெறவுள்ளது.

அதன்பின்னர் 19 ஆம் திகதி திங்கட் கிழமை யாழ்.கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்திலும் மறுநாள் செவ்வாய்க்கிழமை யாழ் கனகரட்னம் மத்திய மகா வித்தியாலயத்திலும் நடைபெறும்.

எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக் கிழமை யாழ்.உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும், மறுநாள் வெள்ளிக் கழமை யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரியிலும் நடைபெறும்.

எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட் கிழமை யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும், மறுநாள் செவ்வாய்க்கிழமை யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் இடம்பெறும்.

எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக் கிழமை யாழ். இடைக்காடு மகா வித்தியாலயத்திலும் இடம்பெறவுள்ளது.

மேற்படி கருத்தரங்கிற்கு சகல மாணவர்களும் தமது பெற்றோர்களுடன் தவறாது கலந்து கொண்டு பயன் பெறுமாறு யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார்.

இச்செயலமர்வு இடம்பெறும் பாடசாலைகளில் செயலமர்வுக்கான பொருத்தமான இடம் பல்லூடக வசதி எறியி கணனி திரை மற்றும் ஒலிவாங்கி போன்ற உதவிகளை ஒவ்வொரு பாடசாலையினாலும் ஒழுங்கமைக்கப்படவேண்டும்.

அத்துடன் செயலமர்விற்கான பொறுப்பாசிரியர்களை கலந்து கொள்ள ஒழுங்கமைப்பு செய்யப்பட வேண்டும் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (2)

# இன்றைய இராசி பலன்

**13/05/2014**
**(சித்திரை 30, செவ்வாய்க்கிழமை)**
**சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு**
**சதுர்த்தசி பின்னிரவு 1.59 மணிவரை**
**சித்திரை முற்பகல் 7.23 மணிவரை**
**இராகுகாலம்-2.54-4.24 மணிவரை**
**சுபநேரம் 10.24-11.54 மணிவரை**
வளவன்

**மேடம்:** உறவினர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், மறக்க முடியாத இனிய சம்பவமொன்று நடைபெறும், நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர்.

**இடபம்:** தொழில் வியாபாரம் சம்பந்த மாக எடுத்த முயற்சிகள் கைகூடும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், உடல் நலம் சீராகும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மிதுனம்:** நன்மைகள் நாடி வரும் நாள், பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள் ,வெளியூர்த் தொடர்புகளால் நன்மையுண்டு ,சான்றோர்களின் சந்திப்புண்டு.

**கடகம்:** தேவைகள் பூர்த்தியாகும் நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறியுண்டு ,வாகன சுகமுண்டு ,பெற்றோர் மீது பிரியம் கூடும்.

**சிம்மம்:** உறவு பகைபாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள் ,உடன் பிறப்புக்கள் வழியில் உற்சாகம் தரும் செய்திகள் வந்து சேரலாம், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**கன்னி:** சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், தொழில் ரீதியான புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள் ,உடல் நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.

**துலாம்:** திட்டமிட்ட காரியமொன்று நடைபெறா விட்டாலும் திட்டமிடாத காரியமொன்று நடைபெறலாம், திடீர் பயணங்களால் பணவரவு ஏற்படலாம் ,சிந்தனை [illegible]குதியான நாள்.

**விருச்சிகம்:** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு ,பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், குடும்பத்தில் [illegible] பூர்த்தியாகும்.

**தனுசு:** நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள் , பொது வாழ்வில் புகழ் கூடும் ,உறவினர் வருகையில் உள்ளம் மகிழ்வீர்கள் புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மகரம்:** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள் ,சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம் ,தொழில் ரீதியான முன்னேற்றம் காண்பீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்:** அலுவலகப் பணிகள் துரிதமாக நடைபெறும், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், பேச்சைக் குறைத்து செயலில் வேகம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மீனம்:** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்களில் கூடுதல் கவனம் தேவை, சேமிப்பில் சிறிது கரையலாம், திடீர் மனஸ்தாபங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆலயத்திலிருந்து திருடப்பட்ட குத்து விளக்கின் ஒரு பகுதி மீட்பு

(மானிப்பாய்)


யாழ்.சுன்னாகம் ஐயனார் ஆலயத்திலிருந்து கடந்த வாரம் திருடப்பட்ட குத்துவிளக்குகளின் ஒரு பகுதி கோவிலின் அருகிலிருந்த தாழம் பற்றைக்குள் இருந்து கடந்த சனிக்கிழமை கண்டெடுக்கப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் நேற்று தெரிவித்துள்ளனர்.

மேற்படி ஆலயத்தில் கடந்த வாரம் இரண்டு தடவைகள் திருட்டு நடவடிக்கைகள் இடம்பெற்றதுடன், அத்திருட்டுக்களின் குத்துவிளக்குகள் உள்ளிட்ட பித்தளைப் பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை ஆலயத்திற்கு வந்த அடியவர்கள் ஆலயத்தின் பின்புறத்திலுள்ள பற்றைக்குள் இருந்து களவாடப்பட்ட குத்துவிளக்கின் மேல் மற்றும் அடிப்பகுதிகளையும் கண்டெடுத்துள்ளனர்.

இதேவேளை, மேற்படி ஆலயத்தின் அருகிலுள்ள சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்திலும் இதேமாதிரியாக குத்துவிளக்குகள் கடந்த வாரத்தில் திருடப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனால், கோயிலுடன் தொடர்புடையவர்களையும் சந்தேகத்திற்கிடமானவர்களையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து விசாரணை செய்து வருவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (2-23)




# யாழ்.இந்துக்கல்லூரி ஆறு போட்டிகளில் முதலிடம்

யாழ். வலய தமிழ்மொழித்தின போட்டிகள் அண்மையில் நடைபெற்றது. இதில் 2014 ஆம் ஆண்டுக்கான அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியின் ஓர் அங்கமாகிய யாழ். வலயப் போட்டிகளில் யாழ். இந்துக்கல்லூரி பங்குபற்றிய ஏழு போட்டிகளில் ஆறு போட்டிகளில் முதலாம் இடத்தையும் ஒரு போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளது.

அத்துடன் வில்லுப்பாட்டில் யாழ்.இந்துக் கல்லூரி வெற்றி கொண்டுள்ள அதேசமயம் தொடர்ந்து ஆறாவது வருடமாக விவாதப்போட்டியின் வலய மட்ட சம்பியனாக தெரிவாகியுள்ளது.

மேலும் தனி இசை பிரிவு நான்கு போட்டியில் வி.வத்சாங்கித சர்மா இவ்வருடமும் முதலிடம பெற்றுள்ளதுடன் ம.கஜகிருஷ்ணா பிரிவு நான்கு பாவோதல் போட்டியில் முதலிடத்தை வென்றுள்ளார்,

அத்துடன் பிரிவு இரண்டு பேச்சுப்போட்டியில் உ.சுகிதன், பிரிவு மூன்று பேச்சுப்போட்டியில் உ.விதுஷன் ஆகியோரும் முதலிடத்தை பெற்றுள்ளனர்.

பிரிவு இரண்டு வாசிப்பு போட்டியில் த. கீர்த்திகன் இரண்டாம் இடத்தை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (2-23)


## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாக கொண்டவரும் தற்போது சாவகச்சேரியை வசிப்பிட மாகக் கொண்ட வருமாகிய பரஞ்சோதி யசோதரன் அண்மையில் சாவகச்சேரி நீதிபதி ஸ்ரீ நந்தசேகரன் முன்னிலையில் சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

இவர் யாழ்.மாநகர சபையின் முன்னாள் ஊழியர் நலன்புரி சங்கத்தின் செயலாளர் ஆவார்.

# மாடுகளை திருடுவதற்கு வயல்களில் பொறி



சாவகச்சேரி தனங்கிளப்பு பிரதேச வயல்வெளியில் மேய்ந்த இரு மாடுகள் அப்பிரதேசத்தில் உள்ள குறித்த விசமிகளால் பொருத்தப்பட்ட கேபிள் கம்பி பொறியினுள் சிக்கி காயமடைந்துள்ளதாக பொது மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மாடுகள் கடந்த வியாழக்கிழமை குறித்த வயல் வெளியில் மேய்ந்து கொண்டிருந்த வேளையே அக்கேபிள் கம்பி பொறியினுள்சிக்கி காயமடைந்துள்ளன.

இதேவேளை அவ்வீதியால்சென்ற மானிப்பாய் மக்கள் சக்தி அமைப்பின் தலைவர் மு. குமாரவேல்அம்மாடுகளை பொதுமக்கள் உதவியுடன் மீட்டு உரியவர்களிடம் ஒப்படைத்துள்ளார்.

ஆயினும் மாடு களின் கால்கள் எலும்பு வரைக்கும் காயப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மாடுகளை களவாடி இறைச்சியாக்கும் நோக்குடன் சிலவிசமிகளால் வயல்வெளியில மேற்படி பொறியை வைத்துள்ளனர் என பொதுமக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். - (அ)

# வெசாக்தினத்தில் கடைகள் பூட்டு

வெசாக் தினத்தை முன்னிட்டு நாளையும் நாளை மறுதின மும் அனைத்து மதுபானக் கடைகளை மூடுவதற்கும் சிறப்பு அங்காடிகளில் மதுபான விற்பனையை நிறுத்துவதற்கும் இறைச்சி வெட்டும் நிலையங்கள், பந்தய நிலையங்கள், சூதாட்டக் கூடங்கள், இறைச்சிக்கடைகள் மற்றும் கழகங்கள் அனைத்தினையும் மூடுவதற்கும் சிறப்பு அங்காடிகளில் இறைச்சி விற்பனையை நிறுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அனைவரையும் அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் கேட்டுள்ளதாக யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம்அறிவித்துள்ளார். (அ)




# மண்டலாபிஷேக பூர்த்தி விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தெற்கு பத்தனாச்சி அம் மன் ஆலயத்தின் மண்டலாபிஷேக பூர்த்தி விழா இன்று செவ்வாய்க் கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதற்கமைய அன்றையதினம் காலை 8 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகி கோ.கேதீஸ் வரசர்மா குருக்கள் தலைமையில் கிரியைகளும் இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து 1008 சகஸ்ர சங்காபிஷேகமும் விசேட 1008 இளநீர் அபிஷேகமும் இடம் பெறவுள்ளது.

எனவே அடியார்கள் அனைவ ரும் ஆசார சீலர்களாக கலந்து கொண்டு அபிஷேகத்திற்கு தேவையான இளநீர் கொண்டு அம்மனைப் பூசித்து அனைத்து இஷ்ட சித்திகளையும்பெற்றுக் கொள்ளுமாறு ஆலய சபையினர் அறிவித்துள்ளனர். (2-23)

# இலங்கை வேந்தன் கலை கல்லூரியில் இயல் இசை நாடக விழா

இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி நடத்தும் இயல் இசை நாடகம் விழா இன்று தொடக்கம் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை பிற்பகல் 4 மணிக்கு இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி கலையரங்கில் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வட மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இராஜேஸ்வரி குழுவினர் வழங்கும் மங்கல இசையுடன் இந் நிகழ்வு ஆரம்பமாகும்.

அதனைத் தொடர்ந்து யாழ். சின்மயா மிஷன் ஜாக்கிரத் சைதன்ய சுவாமிகளின் ஆசியுரையும் புலவர் முத்து இராசரத்தினத்தின் வாழ்த்துரையும் இடம்பெறும்.

சைவ வித்தியா விருத்திச் சங்க சைவச் சிறுவர் இல்ல மாணவிகளின் வரவேற்பு நடனம் நடைபெறும்.

தொடர்ந்து **யோகர் சுவாமி** நற்சிந்தனை இசைப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் முதற்பரிசு பெற்ற மாணவர்களின் இசை அரங்கமும் நா.மதியழகன் குழுவினர் வழங்கும் வில்லிசைப் புலவர் சின்னமணியின் மாணவர்களினால் **இசையும் மனிதனும்** எனும் வில்லிசையும் ஏழிசை மிருதங்க நர்த்தனாலய மாணவிகள் வழங்கும் நாட்டிய அர்ப்பணமும் நடைபெறும்.

அத்துடன் கலைஞர்கள் கௌரவிப்பும் இறுதி நிகழ்வாக நாட்டார் வழக்கியல் கழகம் வழங்கும் பூதத்தம்பி எனும் இசை நாடகமும் இடம் பெறும். (2)




நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகம் நடத்திய சிவஸ்ரீ.சோமஸ்கந்தராஜ குருக்கள் அவர்களின் பொன்விழாவும் சோமஸ்கந்தராஜ தரிசனம், மலர் வெளியீடு நிகழ்வும் அண்மையில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பேராசிரியர் அ.சண்முகதாஸ் வாழ்த்துரை வழங்குவதையும் கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் , விழாநாயகன் சிவஸ்ரீ.தியாக சோமஸ்கந்தராஜ குருக்களுக்கு நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புத்தரின் போதனை காலத்தால் அழியாதவை

## வாழ்த்துச் செய்தியில் பான் கீ மூன்



உலகம் முழுவதும் இந்த வாரம் அனுஷ்டிக்கப்படும் வெசாக் பண்டிகையை முன்னிட்டு ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில், பௌத்தர்கள், உலகின் பொது நன்மைக்காகவும் மனித குலத்தின் சகல நன்மைகளுக்காகவும் உறுதிப்பூண வேண்டும் எனவும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் வலியுறுத்தியுள்ளார்.

வெசாக் பண்டிகை நாளில் பௌத்தர்கள் புத்த பகவானின் பிறப்பை நினைகூருகின்றனர். பல மில்லியன் பௌத்தர்களுடனும் பௌத்தர்கள் அல்லாதவர்களுடன் புத்தரின் வாழ்க்கை அவரது போதனைகளை பிரதிபலிப்பதில் ஐ.நா இணைந்து கொள்கிறது.

சகல உயிர்களுக்கும் அமைதி, கருணை, அன்பு என்ற புத்தரின் போதனையானது தமது மனங்களை திறப்பதுடன் சகல மனித குடும்பங்களுக்கு இது தேவையானது.

காலத்தால் அழியாத இந்த போதனைகள் நாடுகளின் அரசாங்கங்களுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் வழிகாட்ட உதவ முடியும்.

இதன் மூலம் அவர்கள் உலகில் நாம் எதிர்கொள்ளும் பரந்த சவால்களான அமைதி, பாதுகாப்பு, நமது சூழல் பாதுகாப்பு என்பவற்றுக்கு தீர்வு காணும் முயற்சிகளை ஊக்குவிக்க முடியும்.

மக்கள் சுயநலன்களுக்காக அல்லாமல் உலக சமூகத்தின் உறுப்பினர்களாக செயற்பட வேண்டும் எனவும் பான் கீ மூன் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். (2)

**வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு: 021 321 0815, 021 567 1532**

# பால்மா விலையைக் குறைக்க நடவடிக்கை எடுங்கள்- விமல்

பால்மா விலையைக் குறைக்குமாறு வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச அரசாங்கத்திடம் கோரியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளவை வருமாறு.

உலக சந்தையில் பால்மாவின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விலை வீழ்ச்சியின் பயன் களை நுகர்வோர் அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். கடந்த ஆறாம் திகதி ஒரு தொன் பால்மாவின் விலை 5200 அமெரிக்க டொலர்களாக காணப்பட்டது. தற்போது ஒரு தொன் பால்மாவின் விலை 3873 அமெரிக்க டொலர்களாகும்.

உலக சந்தையில் பால்மாவின் விலை அதிகரிக்கப்பட்ட போது விலையை உயர்த்தியதனைப் போன்றே விலை குறைந்த போதிலும் அந்த நன்மைகளை நுகர்வோர் அனுபவிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

உலக சந்தையில் பால்மா விலை உயர்வடைந்துள்ளதாக போலியாகத் தெரிவித்து அரசாங்கத்தின் அனுமதியுடன் ஒரு கிலோ பால்மாவின் விலை 152 ரூபாவினால் உயர்த்தப்பட்டது.

உலக சந்தையில் பால்மாவின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்த நன்மைகளை பொதுமக்கள் அனுபவிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் கோருகின்றேன். அத்துடன் உலக சந்தையில் சொற்பளவு விலை உயர்த்தப்பட்டால் உள்நாட்டில் பால் விலையை உயர்த்தும் பல்தேசிய நிறுவனங்கள் விலை வீழ்ச்சியின் போது மௌனம் காப்பது ஏன் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (2)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



தெல்லிப்பழை கிழக்கைப் பிறப்பிடமாகவும் தற்போது மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தைவேலு சோமசுந்தரம் யாழ்ப்பாணம் நீதிமன்ற வலயத்துக்கான சமாதான நீதவானாக நீதி அமைச்சினால் பதவி வழங்கப்பட்டு 02.05.2014 அன்று மல்லாகம் நீதிமன்றத்தினால் மாவட்ட நீதிபதி எஸ்.சதீஸ்வரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மற்றும் கொழும்பு இந்துக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவன் ஆவார். மினுவங்கொடை சிறிலங்கா இன்டர்ஸ்றீஸ் லிமிட்டட், கொழும்பு சிலோன் றேடிங் கொம்பனி லிமிட்டட், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, காங்கேசன்துறை லங்கா சீமெந்து லிமிடட், மற்றும் யாழ்.பல்கலைக்கழகம் ஆகிய இடங்களில் கணக்குப்பதிவாளராக இருந்த இவர் தற்போது யாழ்.மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமை யாளராகவும் பகுதிநேர ஆங்கில, சிங்கள ஆசிரியராகவும் கடமையாற்றி வருகிறார்.

இளமைக்காலத்திலேயே பொது சேவைகளில் ஈடுபட்ட இவர் 1970-1983 வரை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கொழும்பு கிளையில் துடிப்பான அங்கத்தவராக பணியாற்றியதுடன் நிழல் நிறுவனத்தின் ஸ்தாபகராகவும் அதன் செயலாளராகவும் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். (ந)


## இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி நடத்தும் இயல் இசை நாடக விழா-2014

தலைவர்
செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன்

**13.05.2014 முதலாம் நாள்**

(63, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்)

நேரம்:- பி.ப. 4 மணி

**பிரதம விருந்தினர்**

திரு.சீ.வி.கே.சிவஞானம் (அவைத்தலைவர் வடமாகாணம்)

+நாச்சிமார் கோவிலடி "இராஜேஸ்வரி" குழுவினர் வழங்கும்

### மங்கல இசை

*நாதஸ்வரம்*
★திருமதி இராஜேஸ்வரி சுந்தரலிங்கம்
★திருமதி தையல்நாயகி சுப்பிரமணியம்

*தவில்*
★திருமதி புஸ்பராணி திருச்செல்வம்
★திருமதி செல்வநாயகி உதயகுமார்

+மங்கல விளக்கேற்றல்
+தேவாரம்: செல்வன் வசந்தகுமார் கஜானன்
+ஆசியுரை: ஜாக்கிரத் சைதன்ய சுவாமிகள் (சின்மயா மிஷன் -யாழ்ப்பாணம்)
+வாழ்த்துரை:- புலவர் முத்து இராசரத்தினம்
+சைவ வித்தியா விருத்திச் சங்க "சைவச் சிறுவர் இல்ல மாணவிகள்" வழங்கும்

### வரவேற்பு நடனம்

*நட்டுவாங்கம்:* திருமதி. யாழினி ரவீந்திரன், *பாட்டு:*திருமதி.பா.சியாமளா, *மிருதங்கம்:* திரு.K. சிவகுமார்

+ 'யோகர் சுவாமி நற்சிந்தனை' இசைப்போட்டியில் அகில இலங்கை ரீதியில் முதற் பரிசு பெற்ற

### இசை அரங்கம்

*பாட்டு:* செல்வி பவனுஜா தெய்வேந்திரன், *வயலின்:* திரு.அம்பலவாணர் ஜெயராமன், *மிருதங்கம்:* திரு.கந்தசாமி நந்தகுமார், *கடம்:* திரு.கு.ரவிசங்கர், *முகர்சிங்:* திரு. பெ. ஜெயகாந்

+நா. மதியழகன் குழுவினர் வழங்கும் (வில்லிசைப் புலவர் சின்னமணியின் மாணவர்கள்)

### "இசையும் மனிதனும்"

வில்லிசை

+"ஏழிசை" மிருதங்க நர்த்தனாலய மாணவிகள் வழங்கும்

**நாட்டிய அர்ப்பணம்**

*நட்டுவாங்கம்:-* திருமதி. பாலினி கண்ணதாஸ்
*பாட்டு:-* திரு. தவநாதன் றொபேட்
*வயலின் :-* திரு. அ.ஜெயராமன்
*மிருதங்கம்:-* திரு.G. கண்ணதாஸ்

+கலைஞர்கள் கௌரவிப்பு +பிரதம விருந்தினர் உரை +நாட்டார் வழக்கியல் கழகம் வழங்கும்

**பூதத்தம்பி**

இசை நாடகம்

+நன்றியுரை

அனுசரணை:- கணேஷன் ஸ்ரோர்ஸ், 201, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

(ந-7350)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 4<br>கி.பா: 31 செவ் 12 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L / நிரந்தர தனியார் வேலை<br>தொ.இ: B/1235 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>கி.பா: 71 செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L, Dip. in Cake decorating / Cake Making<br>தொ.இ: G/1808 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 43.75 செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, தொழில் நுட்ப கல்லூரி / தொழில்நுட்ப உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/1237 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 1<br>கி.பா: 5.5 சூரி செவ் 10 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1809 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 3<br>கி.பா: 36 செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L / பொறி தொழில் (பிரான்ஸ் PR)<br>தொ.இ: B/1240 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 85 சூரி செவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: வைத்தியர்<br>தொ.இ: G/1813 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 1<br>கி.பா: 8 உயரம்: 6'<br>தகைமை/தொழில்: International Marketing Course - Following (UK - Student Visa)<br>எதிர்பார்ப்பு: PR உள்ள பெண்<br>தொ.இ: B/1243 | பிறப்பு: 1972 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: கேட்டை 2<br>கி.பா: 27 ¾ செவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: O/L / நிரந்தர அரச உத்தியோகம்<br>தொ.இ: G/1814 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண ஆளுநர் பதவி சிவில் அதிகாரிக்கு உரியது

## சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு மாகாண ஆளுநர் பதவிக்கு படை அதிகாரிகளை நியமிப்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண ஆளுநரின் பதவிக்காலம் எதிர்வரும் ஜூன் மாதம் முடிவடைகிறது. அந்த பதவிக்கு மீண்டும் படை அதிகாரிகளை நியமிப்பதை கூட்டமைப்பு எதிர்க்கின்றது.

ஆளுநர் பதவி என்பது சிவில் அதிகாரிக்கு உரியதாக இருக்க வேண்டும் என்பதே கூட்டமைப்பின் நிலைப்பாடு. இது தொடர்பில் வடக்கு மாகாண சபை யோசனை ஒன்றையும் நிறைவேற்றியுள்ளது.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனாநாயக்க நியமிக்கப்பட்டாலோ, மேஜர் ஜெனரல் சந்திரசிறி ஆளுநராக இருப்பதோ எமக்கு பிரச்சினையில்லை.

அரச சேவையின் நிர்வாகத் துறையின் அதிகாரி ஒருவரே ஆளுநராக நியமிக்கப்பட வேண்டும். இதன் காரணமாகவே கொள்கையளவில் படை அதிகாரிகளை ஆளுநராக நியமிப்பதை நாங்கள் எதிர்த்து வருகின்றோம்.

தற்போதைய ஆளுநரின் பதவிக்காலம் முடிந்த பின்னர் என்ன நடக்க போகிறது என்பதை கூட்டமைப்பு அவதானித்து வருகின்றது எனவும் சுமந்திரன் கூறியுள்ளார். (2)

## பட்டம் பெற்ற மாணவர்களில் 55 வீதமானவர்களுக்கே தொழில் தகுதி

### உயர்கல்வியமைச்சு தகவல்

இலங்கை பல்கலைக்கழுங்களில் பட்டம் பெற்ற மாணவர்கள், தொழில் வாய்ப்புகளில் ஈடுபட 55 வீதமான தகுதியை மாத்திரமே கொண்டிருப்பதாக உயர்கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்த வருடத்தில் 70 வீதமாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரட்ண தெரிவித்துள்ளார்.

கலைத்துறையில் பட்டம் பெற்றவர்கள் தொழில் வாய்ப்புகளில் ஈடுபடும் 28 வீதம் என்ற குறைந்தளவான தகுதியையே பெற்றுள்ளனர்.

விஞ்ஞானத்துறையில் பட்டதாரிகள் 68 வீதத்தையும் முகாமைத்துவப் பட்டதாரிகள் 63 வீதமான தகுதியையும் கொண்டுள்ளனர்.

அத்துடன் பொறியியற்றுறை பட்டதாரிகள் தொழில் வாய்ப்புகளில் ஈடுபடும் 93 வீதமான உயர்ந்த சதவீதத்தை கொண்டுள்ளனர்.

இதனை தவிர மருத்துவப் பட்டதாரிகள் 90 வீதமான தகுதியை கொண்டுள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை அடுத்த வருடம் பல்கலைக்கழுங்களுக்கு 25 ஆயிரத்து 500 மாணவர்கள் சேர்த்து கொள்ளப்படவுள்ளதாகவும் உயர் கல்வி அமைச்சு கூறியுள்ளது. (2)



கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்கள் மூவர் நல்லூர் கோட்ட மட்ட சித்திரப்போட்டியில் முதல்மூன்று இடங்களையும் பெற்றுக் கொண் டனர். இவர் கள் பாடசாலையால் கௌரவிக்கப்பட்ட பின்பு பாடசாலை அதிபர் பே.தனபாலசிங்கத்துடன் நிற்பதை படத்தில் காணலாம். (படம்:-என்.குமார்)

## நகரசபை உறுப்பினர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பேலியகொட நகர சபை உறுப்பினர் ஷமில சந்தருவான் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அவர் தனது காரில் பயணித்து கொண்டிருந்த போது, களனி டயர் சந்திப் பகுதியில் வைத்து இனந்தெரியாத துப்பாக்கிதாரி அவரை சுட்டுக்கொன்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சடலம் அவரது காரில் இருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

23 வயதான இந்த நகர சபை உறுப்பினர் அமைச்சர் மேர்வின் சில்வாவின் தீவிர ஆதரவாளர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# வடக்கின் சுதந்திரமான நடவடிக்கையை தோற்கடிக்க வேண்டும் - குணதாஸ

எதிர்வரும் ஜூன் மாதம் ஐ.நா மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் சர்வதேச விசாரணை ஆணைக்குழு வருவதற்குள் வடக்கை சுதந்திரமாக்கும் நடவடிக்கைகளை தோற்கடிக்க வேண்டும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கின் தற்போதைய ஆளுநரை நீக்கி விட்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவான ஒருவரை நியமிக்க அரசாங்கம் தயாராகி வருகின்றது.

அதிகார பரவலாக்கம் மற்றும் அரசாங்கத்தை ஆட்சியில் இருந்து அகற்றுவது ஆகியன முக்கிய கட்டத்திற்கு வந்துள்ளது. இதன் முதற் கட்டமாக வடக்கு மாகாண ஆளுநர் பதவியில் இருந்து சந்திரசிறி நீக்கப்படவுள்ளார்.

கூட்டமைப்புக்கு அடிபணிந்த ஒருவரை அந்த பதவிக்கு நியமிக்கவே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்குலக நாடுகளின் போர்க் குற்றச்சாட்டுக்களே இந்த நடவடிக்கைக்கு காரணம்.

எதிர்வரும் ஜூன் மாதம் நவநீதம்பிள்ளை போர்க்குற்றம் தொடர்பில் விசாரணை நடத்த சர்வதேச ஆணைக்குழுவை நியமிக்கவுள்ளார்.

அரசாங்கம் அதற்கு இடமளிக்க போகிறதா?. அரசாங்கம் அதற்கு இடமளிக்க வேண்டும் என இந்தியா கூறியுள்ளது. அந்த விசாரணைகளுக்கு இடமளிக்க கூடாது. ஐ.நா பாதுகாப்புச் சபையின் தீர்மானம் இன்றி அவர்களால் எதனையும் செய்ய முடியாது.

பொருளாதார தடைவிதித்தால் மேற்கொள்ள போகும் நடவடிக்கைகள் என்ன? விக்னேஸ்வரனை ஆட வைக்கவே சந்திரசிறியை ஆளுநர் பதவியில் இருந்து நீக்க தயாராகியுள்ளனர்.

வடக்கு மாகாண சபை 23 யோசனைகளை நிறைவேற்றியுள்ளது. அதில் ஒன்று ஆளுநரை நீக்க வேண்டும் என்பது.


13ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துமாறு கோரியுள்ளனர். இதன் அர்த்தம் ஈழத்தை ஏற்படுத்துவது. இந்த நிலைமை பாரதூரமாக மாறும் எனவும் அவர் கூறியுள்ளார். (2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 90 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 80 | 100 |
| தக்காளி | 120 | 120 | 70 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 | 40 |
| கோவா | 50 | 40 | 50 | 60 |
| கரட் | 80 | 60 | 80 | 120 |
| பூசணி | 30 | 40 | 30 | 60 |
| புடோல் | 60 | 60 | 50 | 60 |
| வாழைக்காய் | 20 | 30 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 110 | 120 | 80-90 | 100-120 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 150 | 140 | 90 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | 20 | 40 | 40 | 60 |
| பயற்றங்காய் | 60 | 100 | 90 | 80 |
| லீக்ஸ் | 60 | 80 | 70 | 80 |
| பீற்றூட் | 50 | 50 | 50 | 60 |
| கறிமிளகாய் | 80 | 80 | 60 | 100 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 100 | 120 |
| போஞ்சி | 160 | 160 | 150 | 200 |
| கத்தரிதம்புள்ள | 30 | 50 | — | — |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 25 |
| தேசிக்காய் | 90-140 | 130 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 15-45 | 40 | 40 | 25-30 |
| இராசவள்ளி | 70 | 80 | 100 | 80 |

## facebook (f) பேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 12


திபாகரன் பாலசுப்பிரமணியம்




பின்துருசன் பின்து




றுபீனா திலக்




Like.Comment... Like

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவுசெய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தின் குடித்தொகை

## ஒரு பார்வை

ஒரு நாட்டினது அல்லது ஒரு மாகாணத்தின் மக்கள் தொகை அதன் வளர்ச்சிப் போக்கு மற்றும் அதன் குடித்தொகை கூட்டின் பண்புகள் குறிப்பாக பால்விகிதாசாரம், வயதமைப்பு, குடியியல் அந்தஸ்து, (Civil status) இனம், சமயம், மொழி, கிராம/ நகரவிகிதம் கல்வி நிலை போன்றன முக்கிய இடம்பெறும்.

மேலும் குடித்தொகை இயக்க விடயங்களான கருவளம், மரண விகிதங்கள், இடம்பெயர்வுப் பண்புகள் ஒரு நாட்டினது அல்லது ஒரு மாகாணத்தின் அரசியல், சமூக, பொருளாதார நிலைமைகளைப் பெரிதும் செல்வாக்குச் செலுத்தும். இப்பின்புலத்தில் வடமாகாணத்தின் குடித்தொகை மற்றும் அதனது பண்புகள், இம் மாகாணத்தின் அரசியல் மற்றும் சமூக பொருளாதார செயற்பாடுகள் எத்தகைய செல்வாக்கு செலுத்துகின்றது தெனப் பார்ப்போம்.

வடமாகாணம் 8884 சதுர கிலோ மீற்றர் பரப்பளவானது. இது ஐந்து நிர்வாக மாவட்டங்களின் 2012 குடித்தொகையும் நிலப்பரப்பும் பின்வருமாறு,

யாழ்ப்பாணம்- (1025. ச.கி.மீ-583,378), கிளிநொச்சி (1029 ச.கி.மீ-102,875), மன்னார் (1996 ச.கி.மீ-99,051) வவுனியா (1967 ச.கி.மீ-171,511), முல்லைத்தீவு (2617 ச.கி.மீ-91947)

மேலும் இம் மாகாணம் பொதுவில் அபிவிருத்தி குன்றிய மாகாணமாக இருந்து வருவதுடன் நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் தற்பொழுது 4 வீதத்தையே அளிக்கின்றது. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் முன்னெடுத்த பெருந்தோட்ட பயிர்செய்கை மூலமாகவோ, அல்லது சுதந்திரத்திற்கு பின்னர் முன்னெடுக்கப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்கள், பெரியளவான குடியானவர் குடியேற்றத்திட்டங்களாலோ அல்லது கைத்தொழில் நடவடிக்கைகளாலோ இம்மாகாணம் பெரிய பலனைப் பெறவில்லை. வன்னிப் பிரதேசம் சிறிய, நடுத்தர குளங்கள் புனரமைப்பாலும் அதனுடன் இணைந்த குடியாளர்கள் குடியேற்றத்திட்டங்களால் சிறிதளவு வளர்ச்சி பெற்றது.

முதல் குடிக்கணிப்பு எடுக்கப்பட் 1871 ஆம் ஆண்டில் இருந்து கடைசிக் குடிக்கணிப்பு எடுக்கப்பட்ட 2012 ஆம் ஆண்டு வரை இம் மாகாணத்தின் குடித்தொகை, குடிக் கணிப்பு இடைக்கால மாற்றங்கள் எண்ணிலும் விகிதத்திலும் தரப்பட்டுள்ளன. மேலும் நாட்டின் குடித்தொகையில் இம் மாகாணத்தின் பங்கும் அட்டவணை I இல் இடம் பெற்றுள்ளன.

| ஆண்டு | குடித்தொகை | மாற்றம் எண்ணில் | மாற்றம் % | தேசியப் பங்கு |
|---|---|---|---|---|
| 1871 | 281,666 | -- | -- | 11.7% |
| 1881 | 292,300 | +10,634 | +3.8 | 10.6% |
| 1891 | 319,296 | +26,996 | +9.2 | 10.6% |
| 1901 | 340,942 | +21,646 | +6.8 | 9.6% |
| 1911 | 369,954 | +29,012 | +8.5 | 9.0% |
| 1921 | 375,129 | +5,175 | +1.4 | 8.3% |
| 1931 | 398,874 | +23,745 | +6.3 | 7.5% |
| 1946 | 478,835 | +80,961 | +20.3 | 7.2% |
| 1953 | 569,904 | +90,069 | +18.3 | 7.0% |
| 1963 | 741,341 | +171,437 | +30.1 | 7.0% |
| 1971 | 877,968 | +136,627 | +18.4 | 6.9% |
| 1981 | 1,111,968 | +233,500 | +26.6 | 7.5% |
| 2012 | 1,058,762 | -52,700 | -4.7 | 5.2% |

தரவு -குடித்தொகை கணிப்புகள்

மேலே தரப்பட்டுள்ள புள்ளி விபரங்களை நோக்குமிடத்து சில முக்கிய ஒழுங்குகளையும் போக்குகளையும் அவதானிக்கலாம்.

### 1871-1946

1871-1946 இற்கு இடைப்பட்ட காலத்தில் இதன் குடித்தொகை வளர்ச்சி மிகவும் குறைவாக இருக்கின்றது. இவ்விரு கணிப்புகளுக்கு இடைப்பட்ட 75 வருடங்களில் இம் மாகாணத்தின் குடித்தொகை 198169 பேரால் அல்லது 70 வீதத்தால் மாத்திரமே அதிகரித்துள்ளது. 1940 களுக்கு முன்னர் மலேரியா, வாந்திபேதி, காய்ச்சல் மற்றும் தொற்று நோய்களின் தாக்கம் அதிகமாக இருந்தது. 1911- 1921 இற்கும் இடைப்பட்ட காலத்தில் சர்வதேச ரீதியாக ஏற்பட்ட காய்ச்சல் காரணமாக பெருமளவு மக்கள் இறந்தனர். யாழ்ப்பாணத்தில் 1830-1870 களுக்கும் இடைப்பட்ட காலத்தில் வாந்திபேதி நோயினால் பெருமளவு மக்கள் இறந்தனர்.

மேலும் இம்மாகாணத்தில் பொருளாதார அபிவிருத்தி ஏற்படவில்லை. இதனால் குடிஉள் வரவு நிகழவில்லை. பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலையில் சிறுதொகையான மக்கள் கொழும்புக்கும் மற்றும் 1920-1930 சிங்கப்பூர், மலேசியா, பர்மா போன்ற பகுதிகளுக்கு இடம்பெயர்ந் தனர். உயர்வான பிறப்பும் இருந்த பொழுதும் உயர்வான இறப்பால் குடித்தொகை அதிகரிப்பு குறைவாக இருந்தது.

### 1946-1971

1946-1971 இற்கும் இடைப்பட் 25 வருடங்களில் மாகாணத்தின் குடித்தொகை 398, 133 பேரால் அல்லது 83 வீதத்தால் அதிகரித்தது உயர்வான பிறப்பு விகிதமும் குறைந்து சென்ற இறப்பு விகிதம் இவ்வதிகரிப்புக்குப் பங்களித்தன.

1940 களில் மலேரியா மற்றும் தொற்று நோய்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டமையும் அரசால் முன்னெடுக்கப் பட்ட உணவுப் பொது விநியோகத்தின் மூலம் ஏற்பட்ட உணவுப் பாதுகாப்பும், ஊட்டச்சத்து அதிகரித்தமையும், மருந்து, மருத்துவ மற்றும் சுகாதாரத் துறைகளில் ஏற்பட்ட முன்னேற்றங்களாலும் பொது மரண விகிதம், சிறப்பாக சிசு மற்றும் பிரசவத் தாய் மரண விகிதங்கள் வெகுவாகக் குறைந்தன.

மேலும் கல்வி மற்றும் துறைகளில் ஏற்பட்ட முன்னேற்றங்களால் மக்களின் வாழும் காலம் அதிகரிக்கலாயிற்று. மேலும் இக் காலப் பகுதியில் வன்னியில் குடியானவர் குடியேற்றங்கள் மூலம் சிறு அபிவிருத்தி இடம் பெறலாயிற்று. யாழ்ப்பாணக் குடா நாட்டில் நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் உழவு இயந்திரம் பாவனைக்கு வந்ததால் விவசாயத்துறையில் பெரியளவு உற்பத்தி அதிகரிக்கலாயிற்று.

### 1971- 1981

1971- 1981 இற்கு இடைப்பட்ட காலத்தில் இம் மாகாணத்தின் குடித்தொகை 2 ,34 ,000 பேரால் அல்லது 26.65 வீதத்தால் அதிகரித்தது. பிறப்பு விகிதம் உயர்வாக இருந்ததும் இறப்பு விகிதம் மேலும் குறைவடைந்தது. அதிகரிப்பு முக்கிய காரணங்களில் ஒன்றாகும். முதல் முறையாக வடமாகாணத்திற்குள் குடியுள்வரவு இடம்பெறலாயிற்று. 1970 களில் இந்திய வம்சாவழித்தமிழர்கள் எதிர்கொண்ட உணவு பஞ்சத்தாலும் மற்றும் பெருந்தோட்டத் துறையில் மேற்கொண்ட நிலச் சீர்திருத்தத்தால் இவர்கள் குடிபெயர்த்தப்பட்டமையாலும் இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டதாலும் பெரும் எண்ணிக்கையில் தென்னிலங்கையில் இருந்து வடமாகாணத்துக்கு குறிப்பாக வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் வருகை தந்தனர்.

### 1981-2012

1981-2012க்கு இடைப்பட்ட காலத்தில் மாகாணத்தின் குடித்தொகை 52700 ஆல் குறைந்துள்ளது. இது 4.7% மாகும். 1981 இல் , 1983 இல் ஏற்பட்ட இனக்கலவரங்களால் தென்னி லங்கையில் வாழ்ந்த இலங்கைத் தமிழர்கள், இந்திய வம்சாவழித் தமிழர்கள் அடைக்கலம் தேடி பெரும் எண்ணிக்கையில் மாகாணத் துக்குள் வந்தனர். இதனால் இம் மாகாண த்தின் குடித்தொகை 1981-1984 க்கு இடைப்ப ட்ட காலத்தில் அதிகரிக்கலாயிற்று. அரசு சார்பற்ற நிறுவனங்களால் பல குடியிருப்புக் கள் வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் உரு வாக்கப்பட்டன. இம் மாகாணத்தில் ஏற்பட்ட போர் சூழ்நிலையால் இவ் வளர்ச்சிப் போக்கு நிலை க்கவில்லை.

1984 ஏப்ரலில் இருந்து வட பகுதியில் போராட்டங்களும் யுத்த நடவடிக்கைகளும் இடம்பெறலாயிற்று. இதனால் ஸ்திரத்தன்மை குலைந்து பொருளாதாரம் சுருங்கத் தொடங்கியது. உட்கட்டமைப்புகள் சீர்குலைந்தன.

இதனால் தென்னிலங்கையில் இருந்து இடம்பெயர்ந்து இங்கு வந்த மக்கள் திரும்பச் செல்லத் தொடங்கினர். மேலும் பல்வேறு நாடுகளுக்கு குறிப்பாக இளைஞர்கள் இடம் பெறலாயினர்.

1977 இல் ஆட்சிக்குவந்த UNP அரசாங்கம் சிறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகம் செய்ததால் வெளிநாட்டுப் பயணம் இலகுவானது. திறந்த பொருளாதாரக் கொள்கையால் உள்ளூர் பொருளாதாரம் குறிப்பாக விவசாயம் பாதிப்படை ந்தது. வெங்காயம், மீளகாய் செய்கையில் ஈடுபட்டிருந்தவர்கள் அதனைவிட்டு வெளி நாடு செல்ல முற்பட்டனர். மேலும் யுத்த சூழ்நிலைகள் மற்றும் மாகாணத்தில் நிலவிய பல்வேறு செயற்பாடுகளால் மக்கள் குறிப்பாக இளைஞர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதில் பெற்றோர் கரிசனை காட்டினர். இச் சூழ்நிலையுடன் வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்பும் பிரயாண முகவர்கள் செயற்பாடுகள் பெரியளவில் ஆரம்பமாயின.

ஐரோப்பிய நாடுகளில் அரசியல் தஞ்சம் கோருவோருக்கிருந்த வாய்ப்புக்களையும் அவர்களது மனிதவுரிமைகளை மதிக்கும் பண்புகளைப் பயன்படுத்தி பெரும் எண்ணிக்கையான இளைஞர்களை பிரயாண முகவர்கள் இங்கிலாந்து , பிரான்ஸ் , ஜேர்மனிக்கு அனுப்பி வைத்தனர்.

ஐரோப்பிய நாடுகளின் சட்டங்களிலும் நடைமுறையில் இருந்த ஒவ்வொரு வசதி வாய்ப்புக்களை பயன்படுத்த பிரயாண முகவர்கள் பின் நிற்கவில்லை. மேலும் மேற்கத்தேய நாடுகள் , 1983 கலவரத்துக்கு பின்னர் விசா வழங்கல் முறையில் முன்னிருந்த கடின தன்மையை சில காலம் தளர்த்தியும் இருந்தன. இதனை பயன்படுத்தி பலர் மேற்கு நாடுகளுக்கு மேலும் மாகாணத்துக்குள் கட்டம் கட்டமாக மக்கள் பலாலிப் பகுதியில் இடம்பெயர்த்தப்பட்டதாலும் 1991 இல் தீவுப்பகுதியில் இருந்தும் , 1995 இல் யாழ். நகரம் உட்பட வலிகாமப் பகுதியில் ஏற்பட்ட இடம்பெயர்வுகளாலும் மற்றும் பல இடப்பெயர்வுகளால் பாதிக்கப்பட்ட மக்கள் மாகாணத்துக்கு வெளியிலும் பிறநாடுகளுக்கும் இடம்பெயர்ந்தனர்.

சர்வதேச இடப்பெயர்வில் முதலில் இளைஞர்கள் இடம்பெயர்ந்து பின்னர் அவர்கள் தங்கள் சகோதரர்கள் , ஆண் உறவினர்களை தாங்கள் சென்ற நாடுகளுக்கு பல வழிகளில் வரவழைத்தனர். காலம் செல்ல இளைஞர்களுக்கு மணப் பெண்கள் அனுப்பும் படலம் தொடங்கியது. இன்று வரை வெளிநாட்டில் வாழும் இளைஞர்களுக்கு மணப் பெண் அனுப்பும் செயற்பாடு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

வெளிநாடுகளில் சென்ற இளைஞர்கள் குடும்பமாக வாழத் தொடங்கியதும் பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு தங்கள் பெற்றோர்களை தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாக அழைக்கும் போக்கும் அதிகரித்தது. இவர்களுள் குறிப்பிட்ட தொகையினர் வெளிநாடுகளில் குடும்பமாக குடியேறலாயினர். மேலும் குடும்பங்கள் ஒன்றிணைத்தல் திட்டங்களின் மூலம் பெருமளவு குடும்பங்கள் குறிப்பாக கனடாவுக்குச் சென்றன.


1977, 1981, 1983 இனக் கலவரங்களின் தாக்கத்தால் வடமாகாணத்தில் வவுனியா தெற்குப் பிரிவில் வாழ்ந்த சிங்கள மக்க ளைத்தவிர ஏனையோர் மாகாணத்துக்கு வெளியில் இடம்பெயர்ந்தனர். சிங்கள மக்கள் வடமாகாணத்தில் யுத்தம் பெரியளவு இடம்பெற முன்னரே இடம்பெயர்ந்து சென்று விட்டனர்.

முஸ்லிம்கள் 1990 களில் சிறியளவு சுயமாக இடம்பெயர்ந்து வெளியேறிக் கொண்டிருந்த பொழுதும் 1991 இல் வடமாகாணத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் இயக்கத்தால் கட்டா யப்படுத்தி முழுமையாக வெளியேற்றப்பட்டனர்.

1984ஆம் ஆண்டு காலத்திலிருந்து தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் எனப் பலரும் யுத்தத்தின் தாக்கத்தால் வடமாகாணத்துக்கு வெளியில் வெளியேறியதால் இம்மாகாணத்தின் சனத்தொகை குறைவடையலா யிற்று.

இக்காலப்பகுதியில் 1983 இற்குப் பின்பு வெலி ஓயா (மணலாறுப் பகுதியில்) மாத்திரம் 7 ஆயிரம் சிங்கள மக்கள் வெளியில் இருந்து கொண்டு வரப்பட்டு வெளியில் குடியேற்றப்பட்டனர் என்பது கவனிக்கத்தக்கது.

வடமாகாணம் 1871 இல் நாட்டின் மொத்தக் குடித்தொகையில் 11.7% ஆகக் கொண்டிருந்து நிலை படிப்படியாகக் குறைந்து சென்று இன்று 5.2வீதமாக இருக்கின்றது.



பேராசிரியர்
பொ.பாலசுந்தரம்பிள்ளை
PhD. Durham
முன்னாள் துணைவேந்தர்

இம்மாகாணத்தில் யாழ்ப்பாணக் குடாநாடு (1172 ச.கி.மீ), வன்னி (7712 ச.கி.மீ) பரப்பைக் கொண்டுள்ளன. 1946 இற்கு முன்னர் 13.19 வீத நிலப்பரப்பைக் கொண்ட குடாநாடு சராசரியாக 85 வீதமான மக்களை கொண்டிருக்க 86.81% நிலப்பரப்பைக் கொண்ட வன்னி மாகாணத்தின் மக்கள் தொகையில் 15 வீதத்திற்கு குறைந்த மக்கள் தொகையை கொண்டிருந்தது. இன்று மாகாணத்தின் மக்கள் தொகையில் யாழ்ப்பாணக் குடாநாடு 56 வீதத்தையும் , வன்னி 44 வீதத்தையும் முறையே கொண்டுள்ளன.

மேலும் இம்மாகாணத்தின் குடித்தொகையில் பெண்களின் விகிதாசாரம் உயர்வாக இருக்கின்றது. குறிப்பாக யாழ்.மாவட்டத்தின் குடித்தொகை பெண்கள் விகிதாசாரம் 52.8 ஆக இருக்கின்றது. இதுபோல விதவைகள், இளம் விதவைகள் இம்மாகாணத்தில் அதிகமாக உள்ளனர். 2012 கணிப்பின் அடிப்படையில் இம்மாகாணத்தின் இனப் பரம்பல் எண்ணிலும் வீதத்திலும் பின்வருமாறு,

சிங்களவர்- 32331 (3.05), இலங்கைத் தமிழர் -987692 (93.29), இந்திய தமிழர் -6249 (0.59), முஸ்லீம்கள் -32364 (3.06), ஏனையவர்கள்-161 (0.01)

சமய அடிப்படையில் பௌத்தர்கள்- 30 390 (2.87), இந்துக்கள் - 789362 (74.56), இஸ்லாமியர்- 34105 (3.22), உரோமன் கத்தோலிக்கம் - 162849( 15.38), கிறிஸ்த வர்கள்- 41156( 3.89), ஏனையவர்கள்-968(0.09)

34 பிரதேச செயலகப் பிரிவுகளில் வவுனியா தெற்கு, வெலி ஓயா ஆகிய பிரிவுகளில் சிங்களவர்கள் முழுமையாக வாழ்கின்றார்கள். இங்கு மிகப்பெரும்பான்மையினர் பௌத்த மதத்தினராகும். முசலிப் பிரிவில் முஸ்லிம்கள் மூன்றில் இரண்டுபிரிவாகவும் தமிழர் மூன்றில் ஒரு பிரிவாகவும் உள்ளனர். ஏனைய 31 பிரதேச செயலகப் பிரிவுகளில் தமிழர் மிகப் பெரும் பான்மையினராக உள்ளனர்.

குடித்தொகை எண்ணிக்கையில் வடமாகாணம் இன்று 9 ஆவது இடத்தில் இருக்கின்றது. 1981 இல் இம் மாகாணம் 5 ஆவது இடத்தில் இருந்தது. குடித்தொகை குறைந்ததால் அதன் வழியாக வாக்காளர் எண்ணிக்கை குறைந்ததால் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம் 11 பாராளுமன்ற அங்கத்தவரை அனுப்பிய நிலையில் இருந்து படிப்படியாக குறைந்து இன்று 6 அங்கத்தவரை அனுப்பும் நிலையைப் பெற்றுள்ளது. இதனால் வடமாகாணத்தின் அரசியல் பேரம் பேசும் பலம் குறைவுற்றுள்ளது எனலாம்.

2009 இல் யுத்தம் முடிவுற்றதும் மீள் குடியேற்றம் மூலம் மக்கள் தொகை துரிதமாக அதிகரித்து வருகின்றது. மாகாணத்துக்கு வெளியில் இருந்தவர்கள் மாகாணத்துக்குத் திரும்பி வந்து கொண்டு இருக்கின்றனர். மேலும் பிற நாடுகளுக்கு இடம்பெயர்ந்தவர்களுள் சிறு எண்ணிக்கையில் தாயகம் திரும்பியுள்ளனர். வடமாகாணத்தில் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் முன்னெடுப்புகளுக்கு சாதகமான குடித்தொகை அளவும் சிறப்பான குடித்தொகை கூட்டும் குடித்தொகை இயக்கமும் இன்றியமையாதது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

802



# அந்தப்புர ரகசியம்!

...அதன்பின் அவள் எப்படிப்பட்டவள் என்று அறிந்து கொள்வதே மேல் என்று கருதிய மன்னர் சந்திரிகாவின் குணங் களை ஆராய ஒற்றர்களை நியமித்தார்.

ஒற்றர்கள் அவளைப் பற்றிய முழு விபரங் களைக் கூறியதைக் கேட்டதும், மன்னரு க்கு அதிர்ச்சி ஏற்பட்டது.

சந்திரிகா தன் தாயின் குணத்திற்கு நேர் மாறானவள் என்று தெரிந்தது.

சில விடயம் தன் காதில் விழுந்தாலும், அதை ஊர் முழுக்க டமாரம் அடிப்பவள் அவள என்ற உண்மை தெரிந்தது.

"கடவுளே! நான் ராணியிடம் பகிர்ந்து கொண்ட ரகசியங்களை இந்தப் பெண் ஊர றிய டமாரம் அடித்து விட்டாளோ" என்று பயந்து போன மன்னர், உடனே ராணியி டம் வந்து "புதிய பெண் சந்திரிகாவிடம் நான் உனக்குக் கூறிய ரகசியங்களில் ஏதாவது சொல்லிவிட்டாயா?" என்று கேட்க, மணி மாலா, "சொன்னேனே! விஜயபுரி மன்னர் நம் மீது போர் தொடுக்கத் திட்டமிட்டு உள் ளார் என்று நீங்கள் கூறிய ரகசியத்தை அவளிடம் சொன்னேன்!" என்றாள்.

மன்னரின் தலையில் இடி விழுந்தது போல் ஆயிற்று.

உடனே தன் ஒற்றர்களை அழைத்து சந்திரிகா அரண்மனையை விட்டு எங்காவது வெளியே சென்றாளா, யாருடனாவது பேசினாளா என்று அறிந்து வரப் பணித்தார்.


அரண்மனைக் காவலர் கள் வாயிலாக சந்திரிகா அன்று காலையிலேயே எங்கோ வெளியே சென்று விட்டாள் என்றும் இதுவரை வரவி ல்லை என்றும் கூறினர்.


ஒற்றர்கள் சந்திரிகா மயா னத்தில் சுற்றித் திரிந்தாள் என்றும், பிறகு கோயிலுக்குச் சென்றாள் என்றும் கூறினர்.

மன்னருக்கு இருப்புக் கொள்ளவில்லை.

சந்திரிகாவைத் தேடி இழு த்து வரச் சொன்னார்.

அந்த சமயம் அவளே உள்ளே நுழைந்தாள்.





அவளைக் கண்டதும் மன்னர் பரபரப்புடன், "அந் தப்புரத்தை விட்டு நீ ஏன் வெளியே சென்றாய்?" என்று கேட்க, அவள் "மகாராஜா! எனக்கு எந்த விடயம் காதில பட்டாலும் உடனே அதை யாரிடமாவது கூறி விட வேண்டும்.

ஆனால், என் தாய் இங்கு எத்தகைய பணி புரிந்தாள் என்றும் தெரியும்.

மகாராணி நேற்று என் னிடம் விஜயபுரி மன்ன ரின் படை எடுப்பைப் பற்றி கூறியவுடன், என்னால் சும்மாயிருக்க முடியவில்லை.

யாரிடமாவது கூறாவிட் டால் தலைவெடித்து விடும் போல் இருந்தது.

ஆனால் அந்தப்புர ரகசியத்தை வெளி யிட்டாலும் ஆபத்து! அதனால், நேராக மயா னம் சென்று, என் தாயை அடக்கம் செய்த இடத்தில் அந்த ரகசியத்தை என் தாயின் ஆத்மாவிடம் கூறினேன். "இந்த யுத்தம் நடைபெறக் கூடாது!" என்று மனதிற்குள் வேண்டிக் கொண்டேன்" என்றாள்.

தான் நினைத்தவாறு இல்லாமல் மிகவும விவேகத்துடன் நடந்து கொண்ட சந்திரிகா வின் சொற்களைக் கேட்டு மகிழ்ந்து போன மன்னர். தன் விரலிலிருந்த மோதிரத்தை அவளுககுப் பரிசாக கொடுத்தார்.

கொடுத்த பின், "சந்திரிகா! நான் மோதிரம் தந்தது ஓர் அந்தப்புர ரகசியம். உன்னை யாராவது மோதிரத்தைப் பற்றிக் கேட்டால் நீ உண்மை சொல்லக் கூடாது!" என்று சொல்ல, சந்திரிகா, சிரித்துக் கொண்டே தலை யாட்டினாள். (முற்றும்)

05.2014
13

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1619 - டச்சு அரசியல்வாதி ஜொகான் வன் ஓல்டென் பார்னவெல்ட் ஹேக் நகரில் நாட்டுத்துரோகக் குற்றச்சாட்டின் பேரில் தூக்கிலிடப்பட்டார்.
- 1648 - டில்லியில் செங்கோட்டை கட்டி முடிக்கப்பட்டது.
- 1787 - ஆஸ்திரேலியாவில் குடியேற்றத்தை ஆரம் பிப்பதற்கென 11 கப்பல்களில் 772 சிறைக் கைதி களையும் குற்றவாளிகளையும் ஏற்றிக்கொண்டு கப்டன் ஆர்தர் பிலிப் இங்கிலாந்தை விட்டுப் புறப்பட்டார்.
- 1830 - எக்குவாடோர் விடுதலை அடைந்தது.
- 1861 - பெரும் வால்வெள்ளி ஒன்று ஆஸ்திரேலியா வில் அவதானிக்கப்பட்டது.
- 1880 - நியூ ஜேர்சியில் மென்லோ பூங்காவில் எடிசன் மின்சாரத்தில் இயங்கும் தனது முதலாவது தொடரூந்தை சோதித்தார்.
- 1888 - பிரேசில் அடிமைமுறையை இல்லாதொழித்தது.
- 1913 - நான்கு இயந்திரங்களினால் ஆன முதலாவது விமானத்தை ஈகர் சிபோர்ஸ்கி என்ற ரஷ்யர் இயக்கினார்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: நெதர்லாந்தினுள் நாசி ஜேர்மனியர் புகுந்ததை அடுத்து அதன் அரசி வில்ஹெல்மேனியா பிரித்தானியாவுக் கும் இளவரசி ஜூலியானா தனது குழந்தை களுடன் கனடாவுக்கும் தப்பி ஓடினர்.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: வட ஆபிரிக்காவில ஜேர்மனிய மற்றும் இத்தாலியப் படையினர் கூட்டுப் படைகளிடம் சரணடைந்தனர்.
- 1952 - இந்தியப் பாராளுமன்றத்தின் மேலவையான மாநிலங்களவையின் முதலாவது அமர்வு இடம்பெற்றது.
- 1954 - சிங்கப்பூரில் தேசியத்துக்கு எதிராக சீனப் பாட சாலை மாணவர்களின் போராட்டம் இடம் பெற்றது.
- 1960 - உலகின் ஏழாவது உயர மலையான தவுள கிரியின் உச்சியை சுவிட்சர்லாந்து மலை யேறிகள் இருவர் முதன் முதலில் அடைந்த னர்.
- 1967 - சாகிர் உசேன் இந்தியாவின் முதலாவது முஸ்லிம் குடியரசுத் தலைவர் ஆனார்.
- 1981 - ரோமில் திருத்தந்தை இரண்டாவது ஜோன் போலைக் கொலை செய்ய எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியடைந்தது.
- 1989 - சீனாவில் தியனன்மென் சதுக்கத்தில் நூற் றுக்கணக்கான மாணவர்கள் உண்ணா நோன்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.
- 1998 - இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் சீனர் களுக் கெதிராக இனக்கலவரம் ஆரம்பமானது.
- 1998 - இந்தியா மேலும் இரண்டு அணுகுண்டுச் சோதனைகளை மேற்கொண்டது. இந்தியா மீது ஐக்கிய அமெரிக்கா, மற்றும் ஜப்பான் பொருளாதாரத் தடையைக் கொணர்ந்தன.

### பிறப்புக்கள்

- 1882 - ஜோர்ஜெஸ் பிராக், பிரெஞ்சு ஓவியர் (இ. 1963)
- 1905 - பக்ருதின் அலி அகமது, இந்தியக் குடியரசுத் தலைவர், (இ. 1977)
- 1918 - பாலசரஸ்வதி, பரத நாட்டிய மேதை (இ. 1984)
- **1956 - ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர், இந்திய குரு**

### இறப்புகள்

- 1898 - பி. ஆர். ராஜமய்யர், தமிழ் எழுத்தாளர் (பி. 1872)
- 1978 - வி. தெட்சணாமூர்த்தி, தவில் மேதை (பி. 1933)
- 2000 - தாராபாரதி தமிழ்க்கவிஞர் (பி.1947)
- 20[illegible] - ஆர். கே. நாராயணன், இந்திய நாவலாசிரியர் (பி. 1906)

### ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்



ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் 1956 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி தமிழ்நாட்டில் உள்ள பாப நாசத்தில், தமிழ் வேங்கட ரத்னம் என்ற மொழி வல்லுனருக்கும் விசாலாட்சி என்பவருக்கும் மகனாக பிராமணக் குடும்பத்தில் பிறந்தார்.

தனது சீடர்களால் ஸ்ரீஸ்ரீ என்று மரியாதை யுடன் அழைக்கப்படும் இவர், ஒரு புகழ்பெற்ற இந்திய குரு ஆவார். வாழும் கலை என்ற நிறுவன த்தை தோற்றுவித்தவர். இந்நிறுவனம் பண்டைய இந்திய அறிவுச் செல்வத்தை நிகழ்காலத்திற்கு ஏற்ப மாற்றியளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இவர் ஆதி சங்கரர் பிறந்த நாளில் பிறந்ததால் அவருக்கு சங்கர் என்று பெற்றோர் பெயரிட்டனர். நான்கு வயதிலேயே பகவத் கீதை என்கிற இந்து புனித நூலை ஒப்பிக்கத் தெரிந்து வைத்திருந்தார்.

இவர் மூச்சை உடம்பையும் மனதையும் ஆரோக்கியமாகவும் அமைதி யாகவும் வைத்துக் கொள்ள ஒரு சாதனமாகக் கருதுகிறார். இவர் தியானம் செய்வதுடன் மற்றவர்களுக்கு சேவை செய்ய வேண்டியதன் அவசியத் தையும் வலியுறுத்துகிறார். இவருடைய நோக்கம் அறிவின் மூலம், மன உளைச்சலும் விரோதமும் இல்லாத ஒரு சமுதாயத்தை உருவாக்குவது. அவர் கருத்தின்படி "உண்மை என்பது நேரானதல்ல, உருண்டை யானது, எனவே அது இரு எதிர் மாறான துருவங்களைக் கொண்டுள்ளது. எந்த உருண்டையான பொருளும் இரு துருவங்களை கொண்டிருக்கும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்

**39**

இளையராஜனே!

உன்னோடு பேசத் தொடங்குவதற்கு முன்னால் இதை அச்சுக் கோப்பவர்களுக்கு ஒரு வார்த்தை.

அச்சுக் கோப்பவர்களே! அடியிற் காணும் வரிகளை அடிக் கோடிடுக.

இசைஞானியே!

என்னோடு சேர்ந்துதான் வெற்றி பெற முடியும் என்ற நிலையில் நீயும் இல்லை.

உன்னோடு சேர்ந்துதான் வெற்றி பெற முடியும் என்ற நிலையில் நானும் இல்லை.

எனவே இந்த என் எழுத்துக்கு- பிறழ உணர்ந்து கொள்ளப்படும் பிழை நேராதிருக்க- இந்தப் பீடிகை போதுமானது என்று நம்புகிறேன்.

இப்போது வருகிறேன்.

இளையராஜனே!

என் இலக்கிய வாழ்க்கையின் இரண்டாம் பாகத்தைத் தொடங்கி வைத்தவனே! தூக்கி நிறுத்தியவனே!

உன்னை நினைக்கும் போதெல்லாம் என் மனசின் ஈரமான பக்கங்களே படபடக்கின்றன.

கொட்டையை எறிந்த விட்டு, பேரீச்சம்பழத்தை மட்டுமே சுவைக்கும் குழந்தையைப் போல் என் இதயத்தில் உன்னைப் பற்றிய இனிப்பான நினைவுகளுக்கு மட்டுமே இடம் தந்திருக்கிறேன்.

மனைவியின் பிரிவுக்குப் பிறகு அவள் புடவையைத் தலைக்கு வைத்துப் படுத்திருக்கும் காதலுள்ள கணவனைப் போல அவ்வப்போது உன் நினைவுகளோடு நான் நித்திரை கொள்கிறேன்.

நான் மனிதன்.

இறக்கும் வரை ஈரமானவன்; ஆனாலும் இறுக்கமானவன்.

சூரியகாந்தியும் நானே! தொட்டாற் சுருங்கியும் நானே!




எனவேதான் அவ்வவ்போது உணர்வுகளின் முடிச்சவிழ்த்து உதறி விடுகிறேன்.

திரை உலகில் நான் அதிக நேரம் செலவிட்டது உன்னிடம்தான்.

மனசில் மிச்சமில்லாமல் பேசிச் சிரித்தது உன்னோடுதான்.

பெண்களைத் தவிர என் கனவில் வரும் ஒரே ஆண் நீதான்.

நமக்குள் விளைந்த பேதம் ஏதோ நகம் கிழித்த கோடுதான்.

ஆனால் நான் கண்ணினும் மெல்லியவன்; நகத்தின் கிழிப்பை என் விழிப்பை தாங்காது.

பரணில் கிடக்கும் ஆர்மோனியம் எடுத்து, தூசு தட்டி, வாசிப்பது போல் உன் தூசுகளைத் துடைத்து விட்டு உன்னை நான் ஆர்மோனியமாகவே நேசிக்கிறேன்.

நீளமான வருடங்களின் நீண்ட இடைவெளிக்குப் பிறகு ராஜாஜி ஹாலில் எம்.ஜி.ஆர் இரங்கல் கூட்டத்தில் இருவரும் சந்தித்துக் கொள்கிறோம்.

என்னை நீ குறுகுறுவென்று பார்க்கிறாய்.



உன்னை நானும் பார்க்கிறேன்.

தூண்டிலில் சிக்கிய மீனாய்த் தொண்டையில் ஏதோ தவிக்கிறது.

வார்த்தை துடிக்கிறது;

வைராக்கியம் தடுக்கிறது;

வந்துவிட்டேன்.

அன்று.... இரவெல்லாம் உன் ஞாபகக் கொசுக்கள் என்னைத் தூங்க விடவில்லை.

உன்னோடு சேர்ந்த பின்தான் எத்தனை எத்தனை மாற்றங்கள் என்னில்.

ஒரே வருஷத்தில் சூரியனை என் பக்கம் திருப்பிச் சுள்ளென்று அடிக்க வைத்தாய்.

இந்த விதைக்குள் இருந்த விருட்சத்தை வெளியே கொண்டு வந்தாய்.

என் பெயரைக் காற்றுக்குச் சொல்லிக் கொடுத்தாய்.

நீதான்... அந்த நீதான் ஒரு நாள் எனக்கு வக்கீல் நோட்டீசும் அனுப்பினாய். *(தொடரும்)*


**-வைரமுத்து-**

# வேவு வாசலுக்கு விசாரணை உண்டா?

வேவு வாசல்(ஸ்னூப்கேட்) என்று தினமும் நாளிதழ்களில் அடிபடுகிறதே அது என்ன வாசல்? மதுரையில் .உள்ளதுபோல் வடக்கு வாசல். காளவாசல் மாதிரி இன்னொரு கேட் வாசலா?

குஜராத். முதல்வர் (பிரதமருக்கான வேட்பாளர்) உத்தரவின் பேரில். பெங்களூரைச் சேர்ந்த ஒரு பெண்ணைக் காவல் துறை வேவு பார்த்ததைத்தான் அவ்வாறு பெயரிட்டுள்ளார்கள்.

ஒரு மோசடியோ ஊழலோ எங்கேனும் நடைபெற்றால், அந்தச் சம்பவத்துடன் வாசல் என்று சேர்த்துக் குறிப்பிடுவதுதான் தற்போதைய நடைமுறை. எப்படி 'கேட்' என்ற சொல் இந்தப் பிரச்சினைகளில் தொற்றிக்கொண்டது?



### வாசலின் வரலாறு

அமெரிக்க அதிபர் நிக்சன் இரண்டாம் முறையாகப் பதவிப் போட்டிக்குத் தயாரானபோது அதற்கொரு குழுவை அமைத்தார். பிரசாரம் செய்ததுபோக, அக்குழுவினர் போட்டி வேட்பாளரைப் பற்றிய தகவல்களைத் தோண்டித் துருவ ஆரம்பித்தனர்.

போட்டி வேட்பாளருடைய மனநிலையைக் கண்டுபிடிக்க அவரது மனநல மருத்துவரிடமிருந்த அவரது மருத்துவ ஆவணங்களைத் திருட முற்பட்டனர். மருத்துவரின் கிளினிக் இருந்த கட்டடத்தின் பெயர் தான் 'வாட்டர்கேட்'. குழாய் ரிப்பேர் செய்ய வந்துள்ளோம் என்று உளவுத் துறைக் காவலர்கள் இருவர், அந்தக் கட்டடத்துக்குள் நுழைந்து, மனநல மருத்துவரின் ஆவணங்களைத் திருடி, அதன்மூலம் எதிரி வேட்பாளர் மனநிலை குன்றியவர் என்ற பிரசாரத்தை முடுக்கிவிடலாம் என்று திட்டமிடப்பட்டது.

சம்பவம் வெளியே தெரிந்த பின்னர், அந்தத் திருட்டுக்கும் [illegible] மாளிகைக்கும் இடையேயிருந்த உறவு ஆராயப்பட்டது. அங்கிருந்த தொலைபேசியில் நடைபெற்ற உரையாடல்கள் சம்பந்தமான ஒலிப்பதிவு நாடாக்களை (நிக்சன் டேப்ஸ்) நீதிமன்றம் கோரியபோது, நிக்சன் தரப்பில் சட்ட விலக்களிப்பு கோரப்பட்டது.

அமெரிக்க உச்ச நீதிமன்றம் அதை மறுத்து ஒலி நாடாக்களை வெளியிட உத்தரவிட்டது. அந்த நீதிமன்றத்திலிருந்த ஒன்பது நீதிபதிகளில் நான்கு பேர் நிக்சன் சிபாரிசில் நியமிக்கப்பட்டவர்கள். அவர்களே நிக்சனுக்கு எதிராகத் தீர்ப்பளித்தனர என்பது கூடுதல் செய்தி. இந்தச் சம்பவம்தான் பின்னர் ஊடகங்களால் 'வாட்டர்கேட் ஊழல்' என்று அழைக்கப்பட்டது.

அதையொட்டி, உலகெங்கிலும் நடைபெற்ற ஊழல் சம்பவங்களுடன 'கேட்' என்ற வார்த்தையைச் சேர்த்து அந்த ஊழல்களுக்குப் புதுப் பெயர் சூட்டப்பட்டது. இந்தியாவிலும் நிலக்கரி ஊழலை 'கோல் கேட்' என்றும், சவப்பெட்டி ஊழலை 'காஃபின் கேட்' என்றும், அவ்வரிசையில் சேர்ந்துள்ளதுதான் ஸ்னூப் கேட். அதை வேவு வாசல் என்றும் சொல்லலாம்.

### ஜேட்லி மிரட்டல

பெங்களூரைச் சேர்ந்த பெண் ஒருவர் அகமதாபாதுக்கு வந்து ஒரு விடுதியில் தங்கியிருந்தார். அவரை குஜராத் உளவுத் துறையினர் வேவுபார்த்து, மேலதிகாரிகளுக்குத் தொடர்ந்து தகவல் அளித்தனர். அந்தப் பெண்ணின் கைபேசியும் ஒட்டுக் கேட்கப்பட்டது. அந்தத் தகவல்கள் உடனடியாக மாநில உள்துறை அமைச்சரால் முதல்வருக்குத் தொடர்ந்து தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பெண் யார்? அரசு உயரதிகாரிகள் அவரை ஏன் வேவுபார்த்தனர்? அதில் முதல்வருக்கு இருந்த ஆர்வம் என்ன? என்ற பல கேள்விகள் பொதுவெளியில் எழுப்பப்பட்ட போது, அதற்கு முறையாக குஜராத் அரசிடமிருந்து பதில் இல்லை. அநதச் சம்பவம் குறித்து விசாரணை கமிஷன் வைக்க வேண்டுமென்ற கோரிக்கை வலுப்பெற்றது.

மத்திய அரசும் விசாரணை கமிஷன் வைக்க முடிவெடுத்தது. அதை எதிர்கொள்ளும் விதமாக குஜராத் மாநில அரசே அதிகாரிகள் மட்ட விசாரணைக்கு உத்தரவிட்டது. நாடாளுமன்றத் தேர்தலில், நரேந்திர மோடி பிரதமர் வேட்பாளராக பா.ஜ.க-வால் அறிவிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நடைபெற்றுச் சில மாதங்களாகிவிட்ட பின்னரும், மத்திய அரசால் விசாரணை கமிஷனை அமைக்க முடியவில்லை.


விசாரணை கமிஷன் தேர்தல் முடிவுக்கு முன்னரே நியமிக்கப்படும் என்று உள்துறை அமைச்சர் ஷிண்டே ஒருபுறம் கூறிவரவும், கமிஷன் அமைக்கத் துடிப்பது ஏன் என்ற கேள்வியுடன் நிறுத்திக் கொள்ளாமல், எந்த நீதிபதியும் அந்த கமிஷனில் பங்குபெற விரும்ப மாட்டார்கள், அப்படியே கமிஷன் அமைத்தாலும் பா.ஜ.க. அரசு விசாரணை கமிஷனைக் கலைத்துவிடுமென்று மறுபுறம் பா.ஜ.க. தலைவர் அருண ஜேட்லி மிரட்டல் விடுத்தார்.

இதற்கிடையில், கூட்டணிக் கட்சிகளே தேர்தல் முடிவுகளுக்கு முன் கமிஷன் அமைப்பது அநாவசியம் என்று அறிக்கைகள் விட்டபின் அந்த முயற்சியைக் கைவிட்டு விட்டதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. (தொடரும்)

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளைப் பாதுகாக்க 10 கட்டளைகள்!



தனிக்குடித்தன இளசுகள் பெற்றோர் அவதாரம் எடுக்கும் தருணம், படு அவஸ்தையானது. பச்சிளங் குழந்தையைப் பராமரிப்பது எப்படி என்ற மூத்தோர்களின் ஆலோசனைக்கு வழியின்றித் தடுமாறுவார்கள். அதிலும் வேலைக்குச் செல்லும் இளம் தாயின் நிலை இன்னும் பரிதாபம்!

தனிக்குடித்தனத் தம்பதிகள், குழந்தை பிறந்ததும் இப்படித் தடுமாறாமல் இருக்க, பச்சிளம் குழந்தையின் படிப்படியான வளர்ச்சியையும் ஒரு வயது வரையில் அந்தப் குழந்தையை எப்படிப் பாதுகாக்க வேண்டும் என்ற வழிமுறைகளையும் விளக்குகிறார், சென்னை சூர்யா மருத்துவமனையின் பச்சிளம் குழந்தைப் பிரிவின் தலைமை மருத்துவர் தீபா ஹரிஹரன்.

**01 மாதம்:**

குழந்தையைக் கதகதப்பாக வைத்துக்கொள்ள வேண்டும். அதிகமாகப் போர்த்தவும் கூடாது. எடை குறைவாகப் பிறந்த குழந்தை என்றால், குளிர் காலம் இல்லை என்றாலும்கூட சொக்ஸ், கிளவுஸ் போட்டு வைப்பது நல்லது. குழந்தை பிறந்ததும், அதன முதல் உணவு சீம்பாலாகத்தான் இருக்க வேண்டும். அதுவும், பிறந்த அரை மணி நேரத்துக்குள் கொடுக்க ஆரம்பிக்க வேண்டும். சிஸேரியன் என்றால், தாய்க்கு மயக்கம் சிறிது தெளிந்ததும், 3 அல்லது 4 மணி நேரத்தில் கொடுக்க ஆரம்பிக்கலாம். அறுவைச்சிகிச்சை நடந்திருக்கிறது. அதனால் இரண்டு நாட்கள் கழித்து கொடுக்கலாம் என்று சிலர் தள்ளிப் போடுவார்கள். அது தவறு. "கொலோஸ்ட்ரம் எனப்படும் சீம்பாலில் தான், நோய் எதிர்ப்பு சக்திக்குத் தேவையான விடயங்கள் அதிகம் இருக்கின்றன. இன்குபேட்டரில் வைக்கப்படும் குழந்தைக்குக்கூட, தாயிடமிருந்து பெறப்படும் சீம்பால் டியூப் வழியாகக் கொடுக்கப்படுகிறது.

**பாசப் பிணைப்பு:**

முதல் நான்கு மாதங்களுக்குள் தான் குழந்தைக்கும் தாய்க்குமான பாசப் பிணைப்பு இறுகும். குழந்தையைக் கட்டி அணைத்து முத்தமிடுதல், மடியில் வைத்துக் கொண்டு கொஞ்சுதல், மார்போடு அரவணைத்துப் பாலூட்டும்போது அதன் முகம் பார்த்துப் பேசுதல் போன்றவை குழந்தையுடனான பிணைப்பை அதிகரிக்கும். ஆரம்பத்தில், இந்தப் பாசப் பிணைப்பு கிடைக்கும் குழந்தைகளுக்கு, பிற்காலத்தில் "உளவியல் ரீதியான வலிமை' அதிகமாக இருக்கும். சிலருக்கு வீட்டில் போதிய உதவி இருக்காது... வழிகாட்ட யாரும் இல்லாமல், ஒருவித மன அழுத்தத்தில் இருப்பார்களா. இன்னும் சில தாய்மார்கள், விளம்பரங்களில் வருவதுபோல அல்லது தான் எதிர்பார்த்ததுபோல பிள்ளை பிறக்கவில்லையே என்ற ஏமாற்றத்தில் இருப்பார்கள். அதனால் குழந்தையிடம் கொஞ்சுவதோ, பேசுவதோ செய்யாமல், இயந்திரகதியில் குழந்தைக்குப் பால் கொடுப்பார்கள். பிணைப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து, குழந்தையுடன் தாய் நெருக்கமாக இருக்க வேண்டும்.

**குளியல்:**

பிறந்து, முதல் சில வாரங்களுக்குக் குளிப்பாட்டவில்லை என்றால் கூடப் பரவாயில்லை.

இளம் சூடான நீரில் நனைத்துப் பிழிந்த துண்டால் துடைக்கலாம். குளிப்பாட்டுவதற்கு முன், மிதமான 'பேபி பாடி லோஷனை' இலேசாக உடலில் தேய்த்து, மெதுவாக மஸாஜ் செய்யலாம்.

இது குழந்தையின் வளர்ச்சிக்கு உதவும். சூடான நீரில் குளிப்பாட்டத் தேவையில்லை. வெதுவெதுப்பான நீர் போதும. குளிப்பாட்டிய பிறகு, மிருது வான துணியினால் ஒத்தித் துடைக்க வேண்டும். கண்டிப்பாக பவுடர் போடக் கூடாது. இதனால் நுரை யீரல் தொற்று ஏற்படலாம்.

**உடை:**

அழகை விட, குழந்தைக்கு சௌகரியமாக இருக்க வேண்டும் என்பதே முக்கியம். பட்டன்கள், லேஸ், ஜரிகை, ஜிகினா போன்றவை இருக்கும் உடைகளைத் தவிர்த்து விடலாம். ஏனெனில் லேஸ் போன்றவை கண்களில் குத்தலாம். ஜரிகைகள் மெல்லிய சருமத்தைக் கிழித்துவிடும். பட்டன்கள் வாய்க்குள் போக வாய்ப்பு உண்டு. குழந்தையின் உடலை உறுத்தாத, மிருதுவான, சுகமான பருத்தி ஆடைகள் சிறந்தவை. தாய்மார்களும், பச்சைக் குழந்தையைத் தூக்கிச் செல்லும்போது, ஜரிகை, ஜிகினா போன்ற வேலைபாடுகொண்ட புடைவைகள் கட்டியிருந்தால், கவனமாக இருக்க வேண்டும்.

**அதிகமோ குறைவோ வேண்டாம்:**

குழந்தையை எப்போதும் யாராவது தூக்கி வைத்துக்கொண்டே இருப்பதைத் தவிர்க்கவேண்டும்.






இதை, "ஓவர் ஸ்டிமுலேஷன்' என்போம். எப்போதும் 10 பேர் மாற்றி மாற்றித் தூக்கிக் கொஞ்சுவதும், பேசுவதும் கூடாது.

அதற்காக, குழந்தையைத் தூக்கிக் கொஞ்சாமல் தொட்டிலிலேயே போட்டுவைப்பதும்கூடாது (அண்டர் ஸ்டிமுலேஷன்). இதனால், குழநதை சோர்ந்துவிடும் அல்லது பிடிபடாமல அழும். கைக்குழந்தைகள் தொடர்ந்து அழுது கொண்டே இருப்பதற்கு, பெரும்பாலும் இது தான் காரணம்.


ஜீரணப் பிரச்சினை என்று நினைத்து, பல தாய்மார்கள் தங்களுடைய உணவை மாற்றுவார்கள்.

சிலர், மாற்றுப் பால் கொடுக்க முயற்சிப்பார்கள். அது தேவையல்ல.

(தொடரும்)

# ஆளும் கட்சி உறுப்பினர்கள் சபை அமர்வுகளில் பங்கேற்பதில்லை

## அமைச்சர் தினேஷ் கவலை



பாராளுமன்ற அமர்வுகளில் ஆளும் கட்சியின் உறுப்பினர்கள் பங்கேற்காமை வருத்தமளிப்பதாக அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். அமைச்சர் தினேஷ் குணவர்தன ஆளும் கட்சியின் பிரதம கொறடாவாக செயற்பட்டு வருகின்றார். எதிர்க்கட்சியினர் எழுப்பும் வாய் மொழி மூல கேள்விகளுக்கு பதிலளிக்க ஆளும் கட்சியின் அமைச்சர்களோ பிரதி அமைச்சர்களோ பிரசன்னமாவதில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். மாதத்தில் எட்டு நாட்களே பாராளுமன்ற அமர்வுகள் நடைபெறுவதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும், ஆளும் கட்சியின் சில அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த அமர்வுகளுக்கும் உரிய முறையில் பிரசன்னமாவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதனால் எதிர்க்கட்சியினரால் எழுப்பப்படும் சகல கேள்விகளுக்கும் தாமே பதில் சொல்ல வேண்டியேற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி நேரடியாகவே இது குறித்து ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ள போதிலும், தொடர்ந்தும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரசன்னம் வரையறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். ஆளும் கட்சியினர் மட்டுமன்றி ஒட்டுமொத்தமாக பாராளுமன்ற அமர்வுகளில் பங்கேற்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (2)

# தென்னாபிரிக்க மத்தியஸ்தம் அரசாங்கத்தின் முட்டாள்தனம்

## ஹெல உறுமய தெரிவிப்பு

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்த தென்னாபிரிக்க மத்தியஸ்தரை ஏற்றுக் கொண்டமை அரசாங்கத்தின் மற்றும் ஒரு முட்டாள்தனமான செயல் என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் நிசாந்தஸ்ரீ வர்ணசிங்க இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்

இரண்டு தரப்புக்கும் இடையில் பேச்சுவார்த்தையை முன்னெடுக்கும் முகமாக தென்னாபிரிக்காவின் விசேட பிரதிநிதி சிறில் ரமபோஸா விரைவில் இலங்கை வரவுள்ளார்.

இந்த சிறில் ரமபோஸா விடுதலைப் புலிகளுக்கு சார்பானவர்.

எனவே மூன்றாம் தரப்பு மத்தியஸ்தமானது ஏற்புடையதல்ல என்று நிசாந்தஸ்ரீ குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த தென்னாபிரிக்காவின் உண்மையை கண்டறியும் ஆணைக்குழு முறையை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதும் ஏற்புடையதல்ல என்று நிசாந்தஸ்ரீ தெரிவித்துள்ளார். (2)

# புகைத்தலால் ஏற்படும் சீர்கேடுகள்; சிகரெட் பெட்டிகளில் விளம்பரம்

(கொழும்பு)

சிகரெட் பெட்டியொன்றில் 50 தொடக்கம் 60 சதவீதமான பகுதியில் புகைத்தலால் ஏற்படும் சுகாதார சீர்கேடுகள் குறித்து விளம்பரம் செய்ய மேன்முறையீட்டு நீதிமன்றம் சுகாதார அமைச்சுக்கு அனுமதி அளித்துள்ளது.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த அனுமதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

புகைத்தல் சௌக்கியத்திற்கு கேடுவிளைவிக்கும் என்பதனை எடுத்துக்காட்டுகின்ற படங்களை சிகரெட் பெட்டிகளில் பிரசுரிப்பதற்கான ஒழுங்குவிதிகள் பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சிகரெட் பெட்டிகளில் 80வீதம் சுகாதார எச்சரிக்கை விளம்பரம் பிரசுரிக்கப்பட வேண்டும் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன யோசனை முன்வைத்தார்.

எனினும் புகையிலை நிறுவனங்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தன.

இந்நிலையில் சிகரெட் பெட்டியொன்றில் 50 தொடக்கம் 60 சதவீதமான பகுதியில் புகைத்தலால் ஏற்படும் சுகாதார சீர்கேடுகள் குறித்து விளம்பரம் செய்ய மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது. (2)

# விபத்து, கொள்ளைகளுக்கு அரசியல்வாதிகளே பொறுப்பு

## அமைச்சர் எஸ்.பி குற்றச்சாட்டு

கொள்ளை மற்றும் புகையிரத விபத்துச் சம்பவங்களுடன் அரசியல சக்திகளுக்கு தொடர்பு இருப்பதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக நாட்டில் பாரியளவில் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதுடன் சில புகையிரத விபத்துக்களும் இடம்பெற்றுள்ளன.

கொள்ளை மற்றும் புகையிரத விபத்துச் சம்பவங்களுக்கு சில அரசியல்வாதிகளே பொறுப்பு என அமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசாங்கத்தை கவிழ்க்கும் நோக்கில் எதிர்க்கட்சிகள் இவ்வாறான சதித்திட்டங்களை கட்டவிழ்த்து விடுவதாகத் தெரிவித்துள்ளார்.

சூழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்வோர் தொடர்பில் அரச புலனாய்வுப் பிரிவினர் கண்காணிப்புச் செய்யத் தொடங்கியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதான இலங்கை மீனவர்கள் புழல் சிறையில் தடுத்து வைப்பு

(கொழும்பு)

இந்திய கடல் பகுதியில் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் புழல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழக கடலோர காவற்படையினர் அண்மையில் அபிக் கப்பலில், கப்டன் ஜேஜ தலைமையில் தமிழக-ஆந்திர கடல் எல்லை பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

அப்போது இந்திய கடல் பகுதியில் மீன்பிடித்து கொண்டிருந்த இலங்கை மீனவர்கள் 11 பேரை கைது செய்தனர். அவர்களிடம் இருந்து 2 படகுகளையும் கைப்பற்றினர்.

கைதான இலங்கை மீனவர்கள் 11 பேரும் நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணியளவில் காசிமேடு பகுதிக்கு கொண்டு வரப்பட்டு சென்னை துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

துறைமுக பொலிஸார் அவர்களிடம் நடத்திய விசாரணையில் அவர்கள், படகுகளில் இந்திய கடல் பகுதியில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்ததும் தெரியவந்தது.

பின்னர் அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்த பொலிஸார், நேற்று முன்தினம் மாலை 11 பேரையும் எழும்பூரில் உள்ள சென்னை பெருநகர நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைத்தனர். (2)


# இந்தியாவில் புதிதாக தெரிவாகும் அரசுடன் பேச்சு நடத்தத் தயார்

## தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தெரிவிப்பு

இந்தியாவில் புதிதாக தெரிவாகவுள்ள அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா உள்நாட்டு ஊடகம் ஒன்றுக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் பொதுத் தேர்தல் இடம்பெற்று வரும் நிலையில்,



எதிர்வரும் 16ஆம் திகதிக்கு பின்னர் புதிய அரசாங்கம் பதவி ஏற்கவுள்ளது.

இந்த நிலையில் புதிய அரசாங்கத்துக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து தெளிவுபடுத்தி, வரைவான அரசியல் தீர்வொன்றை பெற்றுக் கொள்வதற்காக பேச்சுவார்த்தையில் ஈடுபட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு விருப்பத்துடனும், தயாராகவும் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த தினம் ஒன்றில் இந்திய வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதிகளை யாழ்ப்பாணத்தில் வைத்து சந்தித்த போது இந்த விடயத்தை தெரிவித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# கடந்தகால யுத்த வடுக்கள் மறக்கக் கூடியவை அல்ல

## பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவிப்பு

**கடந்தகால யுத்த வடுக்கள் உண்மையில் மறக்கக்கூடியவை அல்ல என்பதுடன், அதை தங்களால் நினைத்துப் பார்க்காமலிருக்கவும் முடியாதென மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பல தாய்மார்கள் தங்களது குழந்தைகளை இழந்துள்ளார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான போராளிகளை இழந்துள்ளோம் எனக் கூறினார்.

வருடாந்த கலாசார பாரம்பரிய விளையாட்டு விழா தேற்றாத்தீவிலுள்ள மைதானத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்றது.

இதில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், கடந்த 30 வருடங்களாக யுத்த மேகம் சூழ்ந்திருந்தது எமது மக்கள் அனைவருக்கும் தெரியும். அக்கொடிய யுத்தத்தால் பல்லாயிரக்கணக்கான உயிர்களை இழந்து, பின்னர் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து தற்போது எமது மக்கள் நிம்மதியான வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர்.

ஒரு யுத்தத்தின் வெற்றியின் பின்பு எவ்வளவு வேதனையான விடயங்கள் இருக்கும் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஆனால், அந்த வெற்றியின் பின்னாலுள்ள துன்பதுயரங்களையோ, சோகங்களையோ, இழப்புக்களையோ பற்றிச் சிந்திப்பதில்லை.

ஒரு யுத்த களத்தை எடுத்துக் கொண்டால், அங்கு ஆயிரம் சடலங்கள் கிடக்கும். இரண்டாயிரம் போராளிகள் காயப்பட்டிருப்பார்கள். பலர் அங்கவீனமாக்கப்பட்டிருப்பார்கள். இரத்த ஆறு ஓடும். இதுபோன்ற நிலைமை தான் அங்கு இடம்பெற்றன.

ஆனால், கடந்தகால யுத்த வடுக்கள் உண்மையில் மறக்கக் கூடியவை அல்ல என்பதுடன், அதை எங்களால் நினைத்துப் பார்க்காமலிருக்கவும் முடியாது.

ஆகவே, இந்த இழப்புக்கள் தொடரக் கூடாது. இந்தப் பாதையிலிருந்து நிலைமையை மாற்றி எங்களுடைய மக்களின் உரிமைகளை வென்று, கௌரவமிக்க மக்களாக படித்த கல்விச் சமூகமாக, முறையான அபிவிருத்தியுடைய மக்களாக எமது மக்களை வாழ்விக்க வேண்டும் என்பதற்காகத் தான் தற்போது உங்கள் மத்தியில் நாங்கள் இருக்கின்றோம்

இன்று கல்வியில் நாங்கள் உயர்ந்திருந்தாலும் பல மைல் கற்களை எட்ட வேண்டிய தேவை இருந்து கொண்டிருக்கின்றது. பல தடைகளைத் தாண்ட வேண்டிய தேவை இருந்து கொண்டிருக்கின்றது என்பதை எமது மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே எதிர்காலத்தில் நாங்கள் அனைவரும் எந்த அரசு வருகின்றதோ, அந்த அரசாங்கத்தின் பக்கமிருந்து வளங்களைக் கொண்டு வருகின்ற சமூகமாக நாங்கள் அனைவரும் மாற வேண்டும். தொடர்ந்து நாங்கள் எதிர்ப்பு அரசியலில் இருந்து கொண்டு மிகவும் தேய்ந்து போகின்ற சமூகமாக மாற்றமடைந்திருக்கின்றோம். அதிலிருந்து எமது மக்கள் விழிப்படைய வேண்டும் என்றார். (2)



அளவெட்டி மத்தி அமரர் வேலாயுதம் நினைவாக அமைக்கப்பட்ட பேருந்து தரிப்பு நிலையத்தின் திறப்புவிழா நிகழ்வில் கலந்து கொண்டவர்களை படத்தில் காணலாம்.

# முன்னாயத்த கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவ முன்னாயத்த ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதற்கான முன்னாயத்த ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப.11 மணிக்குமுதல்வர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என மாநகர சபை முதல்வர் யோ.பற்குணராசா கேட்டுள்ளார். (அ)

# பாப்பாண்டவர் அடுத்தாண்டு இலங்கைக்கு விஜயம் செய்வார்

பாப்பாண்டவர் முதலாம் பிரான்ஸிஸ் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெரும்பாலும் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 13ஆம் திகதியளவில் பாப்பாண்டவர் இலங்கைக்கு விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மையில் இலங்கைப் பேராயர்கள் வத்திக்கானுக்கு விஜயம் செய்து, பாப்பாண்டவரை சந்தித்திருந்தனர். இந்த விஜயத்தின் போது இலங்கை விஜயம் குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் மடு தேவாலயத்திற்கு பாப்பாண்டவர் விஜயம் செய்வாரா என்பது குறித்து இன்னமும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை. மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பாப்பாண்டவரின் இலங்கை விஜயம் குறித்து விரைவில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என கொழும்பு பேராயர் காரியாலய பேச்சாளர் வணக்கத்திற்குரிய பெனடிக் ஜோசப் அருட்தந்தை தெரிவித்துள்ளார். (2)

# பொலிஸ் அதிகாரிகள் ஏழு பேருக்கு விளக்கமறியல்

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட புதுளை, கன்தெகெய பொலிஸ் நிலையத்தின் அதிகாரிகள் 7 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் 7 பேரும் பதுளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கடந்த 7ஆம் திகதி புதுளை அகமும் தோரணையில் காட்டுப் பிரதேசத்துக்குள் நுழைந்த ஐவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் சுற்றுலா நீதவான் நீதிமன்றின் முன் ஆஜர்படுத்தப்பட்ட போது விளக்கமறியலில் வைக்கு மாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபர்களில் 18 வயதான இளைஞன் திடீர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலின் காரணமாக இவ் இளைஞன் உயிரிழந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சடலம் மீதான பிரேத பரிசோதனையின் போது, தாக்குதல் காரணமாகவே குறித்த சந்தேகநபர் உயிரிழந்ததாக தெரியவந்துள்ளது.

இதன் பின்னதாக குறித்த சம்பவம் தொடர்பில் உப பொலிஸ் பரிசோதகர், கான்ஸ்டபிள் இருவர், சிவில் அதிகாரி ஒருவர் உட்பட ஏழு பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். (2)

# மாணிக்கக்கல் அகழ்வு; நான்கு பேர் கைது

சட்டவிரோதமான முறையில் மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட நால்வர் அம்பலாந்தொட பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குட்டிகல, பதலங்கல, தல்கஸ் ஆர பிரதேசத்தில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதன்போது இவர்களுக்கு பத்தாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (2)

# மஹோற்சவம்

கைதடி அருள்மிகு ஸ்ரீகற்பக விநாயக கர் தேவஸ்தான மஹோற்சவம் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாட்கள் நடைபெறும்.

எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறமும் 27 ஆம் செவ்வாய்க் கிழமை தேர் திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தோற்சவம் நடை பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எப்போது தொடங்கும் ஐ.நா. விசாரணை?

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 25 ஆவது அமர்வில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒன்றரை மாதங்கள் ஆகிவிட்டன.

23 நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானத்துக்கு அமைவாக, இலங்கையில் போரின்போது இடம்பெற்ற மீறல்கள் குறித்து விசாரணை நடத்துவதற்கான விசாரணைப் பொறிமுறையை இன்னமும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் உருவாக்கவில்லை.

இது ஜெனிவாவில் தீர்மானம் கொண்டு வந்த நாடுகள் மத்தியில் கவலைகளை ஏற்படுத்தியிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தக் கவலை தமிழர் தரப்பிடமும் இருப்பதை மறுக்கவியலாது.

இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டதும், அடுத்த சில நாட்களிலோ, ஒரு வாரத்திலோ, இந்த விசாரணைப் பொறிமுறை உருவாக்கப்பட்டுவிடும் என்றே முதலில் ஊடகங்களில் செய்திகள் வெளியாகின.

கிட்டத்தட்ட, ஐ.நா. விசாரணைப் பொறிமுறைக்கான ஏற்பாடுகளை நவநீதம்பிள்ளை மேற்கொண்டுவிட்ட பின்னரே, தீர்மானம் கொண்டு வருவது போன்ற தோற்றப்பாடு கூட இலங்கையில் ஊடகங்கள் மத்தியில் உருவாக்கப்பட்டிருந்தது.

அது ஐ.நா. விசாரணைகளின் நம்பகத்தன்மை பற்றிய கேள்விகளை எழுப்பவும் வசதியாக இருந்தது.

அதாவது, இலங்கைக்கு எதிரான சதித்திட்டம் போன்ற தோற்றப்பாட்டை உருவாக்கும் முயற்சியாகவும் அதனை எடுத்துக் கொள்ளலாம். ஆனால், ஜெனிவாவில் இந்த விசாரணைப் பொறிமுறையை உருவாக்குவதற்கான எல்லா முயற்சிகளும் கடந்த மார்ச் 27 ஆம் திகதி தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர்தான் மேற்கொள்ளப்பட்டன.

தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் இந்த விசாரணைப் பொறிமுறை குறித்து ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகம் மேற்கொண்ட ஒரே பணி, இதற்குத் தேவையான செலவு எவ்வளவு என்ற மதிப்பீட்டை மேற்கொண்டது மட்டும்தான்.

இந்தத் தீர்மானம் பேரவையில் விவாதிக்கப்படும்போதே இதற்கு ஆகும் செலவு என்ன, அதற்கான நிதி எங்கிருந்து கிடைக்கும் என்றெல்லாம் கேள்விகள் எழுப்பப்படக்கூடிய வாய்ப்புக்கள் இருந்தன. எனவேதான் அதற்கான மதிப்பீட்டை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் மேற்கொண்டிருந்தது.

எதிர்பார்க்கப்பட்டது போலவே கடந்த மார்ச் 27ஆம் திகதி இந்தத் தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இந்த விசாரணைக்கான செலவுகளை முன்வைத்தும் அதற்கு எங்கிருந்து நிதி கிடைக்கும் என்றும் கேள்வி எழுப்பி பிரச்சினையைக் கிளப்பியது பாகிஸ்தான்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் ஏற்கனவே மதிப்பீடுகளை மேற்கொண்டிருந்ததால்தான் சுமார் 14 மில்லியன் டொலர் இதற்குத் தேவைப்படுமென்றும் அதற்கான நிதியை ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கான ஐ.நாவின் வருடாந்த ஒதுக்கீட்டில் இருந்தே பெற முடியும் என்றும் பேரவைச் செயலகத்தினால் விளக்கமளிக்கப்பட்டது.

இந்த மதிப்பீடு தவிர்ந்த விசாரணைப் பொறிமுறை உருவாக்குவதற்கான வேறெந்த முன்னேற்பாட்டையும் நவநீதம்பிள்ளையின் பணியகம் மேற்கொண்டிருந்தால் இந்தப் பொறிமுறையை உருவாக்குவதற்கு இந்தளவு காலம் அவர்களுக்கு தேவைப்பட்டிருக்காது. எவ்வாறாயினும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடன் அல்லது ஓரிரு வாரங்களில் விசாரணைப் பொறிமுறையை நவநீதம்பிள்ளை அறிவிப்பார் என்றே பெரும்பாலானோர் எதிர்பார்த்தனர் என்பதில் சந்தேகமில்லை. அதனால் இந்த விசாரணைப் பொறிமுறை உருவாக்கத்தில் காணப்படும் நீண்ட தாமதம் பலரையும் சலிப்படையச் செய்துள்ளது.

தீர்மானத்தை முன்வைத்து ஆதரித்த நாடுகள் பலவும்கூட இது குறித்து கவலை கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தக் கவலைக்கு இரண்டு பிரதான காரணங்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. நவநீதம்பிள்ளை பணி ஓய்வில் செல்வதற்கு முன்னதாக விசாரணைப் பொறிமுறை செயற்படத் தொடங்கிவிட வேண்டும் என்பது முதலாவது.

விசாரணைகளை ஆரம்பிப்பதில் ஏற்படும் தாமதம் அதனை நிறைவு செய்து ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அறிக்கை இடுவதிலும் தாமதத்தை ஏற்படுத்தும் என்பது இரண்டாவது கவலை.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளராக கடந்த ஆறு ஆண்டுகளாகப் பணியில் இருந்த நவநீதம்பிள்ளை வரும் ஜூலை 31 ஆம் திகதியுடன் ஓய்வு பெறுகிறார்.

புதிதாகப் பொறுப்பேற்கின்ற ஆணையாளர் இந்த விடயத்தில் எந்தளவுக்கு கரிசனை காட்டுவார் என்ற அச்சம் ஏற்கனவே தமிழர் தரப்பிடம் உள்ள ஒன்றுதான்.

ஆனாலும் புதிய ஆணையாளர் இந்த விசாரணைப் பொறிமுறைக்கு குறுக்கே நிற்பதற்கு வாய்ப்பில்லை என்று கருதப்படுகிறது.

எவ்வாறாயினும், நவநீதம்பிள்ளை ஓய்வு பெறுவதற்கு முன்னர் விசாரணைகள் தொடங்கப்பட்டால்தான் குறிக்கப்பட்ட காலத்திற்குள் அதனை நிறைவு செய்ய முடியும். புதிய ஆணையாளர் வந்து பொறுப்பேற்றதன் பின்னர் விசாரணைப் பொறிமுறையை அமைப்பது என்றால் அதற்குள் இன்னும் கால விரயம் ஏற்பட்டுவிடும்.

எனவேதான் நவநீதம்பிள்ளை ஓய்வில் செல்வதற்கு முன்னதாக விசாரணைப் பொறிமுறை உருவாக்கப்பட்டு விட வேண்டும் என்ற கருத்து வலுவாக உள்ளது. அதைவிட வரும் ஜூலை 31 ஆம் திகதியுடன் ஓய்வு பெறுவதாக இருந்தாலும் அதற்கு முன்னரே அவர் விடுப்பில் செல்லக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

தாம் ஓய்வுக்கு முந்திய விடுப்பில் செல்ல முன்னரே விசாரணைப் பொறிமுறை செயற்படத் தொடங்கிவிட வேண்டும் என்பதில் நவநீதம்பிள்ளை உறுதியாக இருப்பதாகவும், இது குறித்து அவர் ஐ.நா. அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் கூடத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இருந்தாலும் இந்த விசாரணைப் பொறிமுறை உருவாக்கம் பற்றிய அறிவிப்பு, இம்மாத இறுதிக்கு முன்னர் வெளியாக வாய்ப்பில்லை என்றே ஐ.நா. அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இந்த நீண்ட இழுபறிக்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. இந்த விசாரணைப் பொறிமுறையை உருவாக்குவதற்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் பாகிஸ்தான் மூலமாக இலங்கைக்கு ஆதரவான ரஷ்யா, சீனா, கியூபா போன்ற நாடுகள் எத்தகைய முயற்சிகளை மேற்கொண்டன என்பது தெரிந்ததே.



இந்த விசாரணைக்கு தன்னால் இயன்றளவுக்கு இலங்கை அரசாங்கம் முட்டுக்கட்டைகளைப் போட முயன்றது.

எனவே, எந்த வகையிலும் இந்த விசாரணைகள் சிறுமைப்படுத்தப்படவோ, முடிக்கப்படவோ கூடாது என்பதில் நவநீதம்பிள்ளை உறுதியாக இருப்பதாகத் தெரிகிறது. எனவே, அவர் இரண்டு விடயங்களில் இறுக்கமாக இருப்பதாக கூறப்படுகிறது.

விசாரணைகள் வெளிப்படைத்தன்மை கொண்டவையாக இருக்கவேண்டும் என்பது அதில் முதலாவது. இலங்கை அரசின் ஒத்துழைப்பைப் பெற வேண்டும் என்பது இரண்டாவது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் நேர்மையை இலங்கை அரசு இனிமேல் இல்லை என்ற அளவுக்கு கேவலப்படுத்திவிட்டது.

அவரையும் ஒரு சீருடை அணிந்த புலி என்று கூறாதளவுக்கு அவரை இலங்கை அரசாங்கம் பக்கச்சார்பானவர் என்று சித்தரித்துவிட்டது.

இந்த நிலையில் வெளிப்படைத்தன்மை கொண்டதாக விசாரணைகள் நடத்தப்படுவது அவசியம் என்று அவர் உணர்கிறார்.

அதுவே அவரது பெயரைப் பாதுகாக்க மட்டுமின்றி ஐ.நாவினது பெயரையும் காப்பாற்றும். அதைவிட இலங்கை அரசாங்கம் ஏதாவது காரணங்களைக் கூறி விசாரணைப் பொறிமுறையையும் அதன் இறுதி அறிக்கையையும் ஏற்காமல் நழுவிக்கொள்ளாமல் தடுப்பதற்கு அதுவே உதவும்.

அடுத்து, இலங்கை அரசின் ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே முழு அளவிலான விசாரணைகளை மேற்கொள்ள முடியும் என்பதே நவநீதம்பிள்ளையின் நம்பிக்கையாகவுள்ளது.

அரசாங்கத்தின் ஒத்துழைப்புக் கிடைத்தால் மட்டுமே அரச தரப்பின் நிலையை அறிந்து கொள்ளலாம். விளக்கங்களைக் கேட்டுக்கொள்ளலாம். தேவையான சாட்சிகளை விசாரித்து விபரங்களை தெரிந்து கொள்ளலாம். இல்லாவிடின் ஒரு பக்க விளக்கங்களைக் கொண்ட விசாரணையாகவே அது அமைந்துபோகும். அதற்கு அவ்வளவு பெறுமானமும் கிடைக்காது.

எனவேதான், இலங்கை அரசின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு, அவர் முனைவதாகத் தெரிகிறது.

அந்த ஒத்துழைப்புக் கிடைக்காது போனாலும் அதற்கான முயற்சிகளில் அவர் தெளிவாக இறங்கியுள்ளது குறிப்பிடத்தக்க விடயம். அதேவேளை ஜெனிவாவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடன் விசாரணைப் பொறிமுறையை உருவாக்குவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் குறுகிய காலத்துக்குள் மேற்கொண்டுவிட முடியாது என்பதை ஐ.நா. அதிகாரிகள் தெளிவு படுத்தியுள்ளனர்.

இந்த விசாரணைப்பொறிமுறையின் செயற்பாட்டுக்கான ஒரு நெறிமுறைக்கோப்பு வரையப்பட வேண்டும். அவர்களின் விசாரணைப்பரப்புகளை உறுதியாக வரையறை செய்ய வேண்டும். தேவையான விசாரணையாளர்கள் மற்றும் அவர்களின் உதவியாளர்களை நியமிக்க வேண்டும். அவ்வாறான விசாரணைக்குப் பொருத்தமானவர்களை தேடிப்பிடிக்க வேண்டும். இந்த விசாரணைக்கான நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும் இவற்றுக்கெல்லாம் ஐ.நா. பொதுச் செயலரின் அனுமதியைப்பெற வேண்டும் என்று ஒரு நீண்ட செயன்முறைகளை இது கொண்டுள்ளது.

இதையெல்லாம் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் ஒழுங்கமைக்க வேண்டிய நிலையிலுள்ள விடயங்கள்.

கடந்த முதலாம் திகதி நியூயோர்க்கில் நடந்த பொறுப்புக்கூறல் பற்றிய மாநாட்டில் ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூனுடன் இணைந்து பங்கேற்க நவநீதம்பிள்ளை மறுநாள் இரண்டாம் திகதி அவருடன் தனியான சந்திப்பை மேற்கொண்டிருந்தார்.

இந்த சந்திப்பில் இலங்கை விசாரணைப் பொறிமுறையை உருவாக்குவதற்கான நிதி ஒதுக்கீட்டைப்பெறுவது உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து அவர் ஆராய்ந்ததாக தகவல்கள் கூறுகின்றன.

எவ்வாறாயினும் தற்போது விசாரணைப் பொறிமுறையை உருவாக்குவதற்கான பணிகள் முக்கிய கட்டத்தை அடைந்துள்ளதாகவே தெரிகிறது. விரைவில் அது இறுதிக்கட்டத்தை எட்டலாம்.

ஆனால், விசாரணைப்பொறிமுறையை உருவாக்கும் காலம் தாமதமடைவதால் விசாரணைக்கான காலம் குறுகிவிடும்.

ஒரு பெரியளவிலான பரப்பை விசாரிக்கப் போகும் விசாரணைக்குழுவுக்கு கால அவகாசம் குறைவது அந்த விசாரணைகளைப் பாதிக்கும்.

வரும் செப்ரெம்பரில் வாய்மூல அறிக்கையையும் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் இறுதி அறிக்கையையும் சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் விரைவாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டாக வேண்டும்.

இல்லையேல் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் இறுதி அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் கால நீடிப்பை கோர வேண்டிய நிலை ஏற்படலாம்.

தற்போது விசாரணைப்பொறிமுறை உருவாக்கலில் ஏற்பட்டுள்ள தாமதம் இந்தக் கால நீடிப்பை கோருவதற்கான சாத்தியங்களையே தென்படச் செய்கிறது என்பதில் ஐயமில்லை.

-ஹரிகரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாகீர் ஹுசெய்ன் விசாரணையில் இலங்கையும் இணைய வேண்டும்

(கொழும்பு)

இந்தியாவில் அண்மையில் கைது செய்யப்பட்ட சாகீர் ஹுசெய்ன் தொடர்பான விசாரணைகளில் இலங்கையும் இணைந்து கொள்ள வேண்டுமென முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எம். சுஹைர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் உளவுப் பிரிவுடனும், பாகிஸ்தான் தீவிரவாதிகளுடனும் இணைந்து செயற்பட்டதாக கண்டியைச் சேர்ந்த சாகீர் ஹுசெய்ன் மீது இந்திய அதிகாரிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்தும் இந்திய அதிகாரிகளுடன் இலங்கை அதிகாரிகளும் இணைந்து கொள்ள வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

கைது செய்யப்பட்ட இலங்கையரின் நலனை உறுதிப்படுத்துவது மட்டுமன்றி விசாரணைகளின் தன்மையை புரிந்து கொள்ள வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்திய அதிகாரிகளினால் சாகீர் ஹுசெய்ன் கைது செய்யப்பட்ட விவகாரம் வேடிக்கை பார்ப்பதற்கான தருணமல்ல என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று சாகீர் ஹுசெய்னை சந்திக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

பக்கச்சார்பற்ற முறையில் விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் பயிற்சி பெற்று வருவதாகவும் இலங்கையைப் பயன்படுத்தி இந்தியா மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் அண்மையில் சில பொய்யான தகவல்கள் இந்திய ஊடகங்களில் வெளியிடப்பட்டிருந்ததாகத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான ஓர் பின்னணியில் சாகீர் ஹுசெய்னின் கைதானது அரசியல் நோக்கங்களுடன் கூடியதல்ல என்பதனை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2)

# வடக்கு மற்றும் கிழக்கில் கடத்தல் செயற்பாடுகள் அதிகரிப்பு

## அவுஸ்திரேலிய ஊடகம் தகவல்

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களை இலக்கு வைத்து காணி அபகரிப்பு மற்றும் கடத்தல் செயற்பாடுகள் அதிகரித்திருப்பதாக அவுஸ்திரேலிய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இவ்வாறான சம்பவங்களுக்கு அந்த ஊடகம் கண்டனத்தையும் வெளியிட்டுள்ளது.

கடந்த இரண்டு மாத காலப் பகுதியில் 70 இற்கும் அதிகமானவர்கள் வடக்கு, கிழக்கில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் குறைந்த பட்ச எண்ணிக்கையானவர்களே விடுவிக்கப்பட்டுள்ளனர். பெரும்பாலானோரின் நிலை என்னவென்று தெரியவில்லை.

மேலும் கைது செய்யப்பட்டுள்ளவர்களின் உண்மையான எண்ணிக்கையும் தெரியவில்லை.

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் மக்கள் இராணுவத்தின் அச்சுறுத்தல்களுடன் வாழ்ந்து வருகின்றனர் என்று அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது. (2)

# பெயர்ப்பலகைகள் மும்மொழிகளிலும் அமையப்பெற வேண்டும்- வாசுதேவ

(கொழும்பு)

பெயர்ப் பலகையில் தமிழ் மொழியும் உள்ளடக்கப்பட வேண்டுமென வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்களுக்கு தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார உத்தரவு பிறப்பித்துள்ளார்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்களுக்கு அமைச்சர் நேற்று முன்தினம் இந்த உத்தரவினை பிறப்பித்துள்ளார்.

பொறளை, பத்தரமுல்ல ஆகிய பிரதேசங்களில் பாதை திருத்த வேலைகள் தொடர்பிலான பெயர்ப் பலகைகள் ஆங்கிலம், சிங்கள மொழிகளில் மட்டுமே எழுதப்பட்டுள்ளது.

இவ்வாறான பெயர்ப் பலகைகளில் மூன்று மொழிகளிலும் விபரங்கள் உள்ளடக்கப்பட வேண்டுமென அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வீதிகள், பாலங்கள் திருத்தப்படும் போது அது குறித்து அறிவிக்கப்பட வேண்டியது அவசியமானது.

எனினும், இந்த அறிவிப்பு அனைத்து தரப்பினரையும் திருப்தி செய்யக் கூடியவகையில் அமைய வேண்டுமென தெரிவித்துள்ளார். (2)

# யாழ். பல்கலையை மூடி; அரசு மனிதவுரிமை மீறல்

## முன்னணி சோஷலிசக் கட்சி குற்றச்சாட்டு

அரசாங்கம் மனிதவுரிமைகளை மீறிச் செயற்பட்டு வருவதாக முன்னணி சோஷலிச கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. வடக்கில் யுத்தம் காரணமாக உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்த அனுமதியளிக்காது யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தை மூடியமை ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என கட்சி சுட்டிக்காட்டியுள்ளது. இதனை மனிதவுரிமை மீறலாகவே நோக்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளது.

நீண்டகாலமாக இடம்பெற்ற யுத்தத்தில் உயிர் நீத்தவர்களை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்த சிங்கள, தமிழ், முஸ்லிம்களுக்கு உரிமை இருப்பதாகத் தெரிவித்துள்ளது. அஞ்சலி செலுத்த அனுமதியளித்தால் தமிழீழ விடுதலைப் புலிகள் மீள ஒருங்கிணையக் கூடும் என்ற அரசாங்கத்தின் நிலைப்பாடு தவறானது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மாறாக அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை பாதக விளைவுகளையே அதிகம் உண்டு பண்ணும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவே அரசாங்கம் முயற்சிக்க வேண்டுமே தவிர, முரண்பாடுகளை வளர்க்கும் வகையிலான கொள்கைகளை அமுல்படுத்தக் கூடாது என குறிப்பிட்டுள்ளது. (2)

## கஞ்சா வைத்திருந்த நால்வர் கைது

(கொழும்பு)

கேரள கஞ்சா வைத்திருந்த சந்தேக நபர்கள் நால்வர் புத்தளம் கற்பிட்டி பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கற்பிட்டி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் மேற்கொண்ட தேடுதலின்போது சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது சந்தேக நபர்களிடமிருந்து கேரள கஞ்சா 40 கிலோ கிராம் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் கற்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என தெரிய வந்துள்ளது.

இவர்கள் புத்தளம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (2)

# இன்று ஒரு தகவல்

## சனீஸ்வரன்

என்னுடைய நீண்டகால நண்பர் ஒருத்தர் இருந்தார். அவர் வருடந்தோறும் திருநள்ளாறு என்ற திருத்தலத்துக்குப் போவார். ''அங்கே என்ன விசேடம்?'' என்று கேட்டேன்.

''என்ன இது இப்படிக் கேட்கிறீர்கள்? சனி பகவான் நளனின் விருப்பப்படி அங்கே தானே எழுந்தருளியிருக்கிறார். அங்கே போய் வணங்கிவந்தால் நம்மைப் பிடித்திருக்கும் சனியெல்லாம் விலகும்'' என்றார்.

அந்த நண்பருக்கு ஆன்மீக விடயங்களில் மிகுந்த ஈடுபாடு. அவ்வப்போது சில புராணக்கதைகள் சொல்வார். மிகவும் சுவாரஸ்யமாக இருக்கும்.

எப்பொழுதும் புராண விடயங்களை அறிவியல் என்ற தராசில் வைத்து எடைபோட்டுக் கொண்டிருக்கக்கூடாது.

அப்படிப் பார்த்தால் அதெல்லாம் நம்பமுடியாத மூட நம்பிக்கைகளாகத் தோன்றும். புராணங்களை புராணங்களாகவே புரிந்து கொள்ள வேண்டும்.

அந்த வகையில் தான் இந்த நண்பரும் நிறைய செய்திகளைச் கூறுவார்.

''சனியைப் போல கொடுப்பவனுமில்லை. சனியைப் போல கெடுப்பவனும் இல்லை'' என்று சோதிடர்கள் கூறுவார்கள். நாம் ஏதாவது வம்பில் மாட்டிக் கொண்டால் பிடித்தது சனி என்கிறோம்.

இராவணன் எப்பேற்பட்டவீரன், அவனே சனியின் பார்வை பட்டதும் சங்கடப்பட ஆரம்பித்தான் என்றார் நண்பர்.

''அது எப்படி?'' என்று கேட்டேன்.

அவர் சொல்ல ஆரம்பித்தார்.

''இராவணன்,எல்லா நவக்கிரகங்களையும் பிடித்துக் கொண்டு வந்து தன்னுடைய சிம்மாசனத்தில் படிகளாக போட்டு வைத்தானாம். பாவம் அந்த ஒன்பது தேவதைகளும் ஒவ்வொரு படியாக குப்புறக் கிடந்தார்களாம். நவக்கிரகம் நம்மை ஆட்டிப் படைக்கிறது என்று நாம் சொல்கிறோம். ஆனால் அந்த நவக்கிரகங்களை இராவணன் எப்படி வைத்திருந்தான் பாருங்கள். எல்லோரையும் சிம்மாசனத்துக்குப் பக்கத்தில் படிகளாக போட்டு வைத்திருந்தான். வேறுவழியில்லாமல் எல்லோரும் குப்புற விழுந்து கிடந்தார்கள். இராவணன் ஒவ்வொரு தடவையும் இவர்களுடைய முதுகில் அடிவைத்து ஏறித்தான் அந்த சிம்மாசனத்துக்கு போவது வழக்கம்.

இப்படியே நடந்து கொண்டிருந்தது. இது நாரதரின் கண்ணில் பட்டது. நாரதர் சும்மா இருப்பாரா? யோசித்தார். என்ன செய்யலாம் என்று முடிவு செய்து கொண்டு நேராக இராவணனிடம் போனார்.

'' இராவணா? நீ நவக்கிரகங்களைப் பிடித்துக் கொண்டு வந்து உன் சிம்மாசனத்துக்கு படிகளாகப் போட்டு வைத்திருக்கிறாய். அது உன்னுடைய வீரத்தைக் காட்டுகிறது. ஒரு விடயத்தை நீ யோசித்து பார்க்க வேண்டும்.

ஒவ்வொரு தடவை நீ சிம்மானத்துக்குப் போகும் போதும் நவக்கிரகங்களின் முதுகில் அடிவைத்து ஏறிப்போகிறாய். அது உனக்குப் பெருமையில்லை. அவர்களுடைய மார்பில் அடிவைத்து ஏறிப்போகவேண்டும். அது தான் உனக்குப் பெருமை '' என்றார்:

''இவர் இப்படிச் சொல்வதும் சரிதானே'' என்று யோசித்தார் இராவணன்.

உடனே குப்புறக் கிடந்த நவக்கிரகங்களை திருப்பி மல்லாக்கப் போட்டான். அவர்களுடைய மார்பில் அடிவைத்து மேலே ஏறி சிம்மாசனத்துக்கு போனான்:

அப்படிப் போய்க் கொண்டிருக்கும் போது சனிபகவானின் பார்வை அவன் மேல் பட்டது. அவ்வளவு தான். சூர்ப்பனகை தேடிவந்தாள். சீதையின் அழகைப்பற்றி தன் அண்ணனிடம் சொல்ல ஆரம்பித்தாள். விவகாரம் ஆரம்பமாகிவிட்டது என்று இந்தக் கதையை சொல்லி முடித்தார் என்னுடைய நண்பர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கியூபாவின் சமூக போராளி ரெனே கோன்சலஸ் வெனின்சுலாவின் ஜனாதிபதி நிகோலஸ் மதுரோவை கராகஸ் நகரில் சந்தித்த போது....

# டுபாயில் வீதி விபத்து; 15 தொழிலாளர்கள் பலி

(டுபாய்)

டுபாயில் நடந்த வீதி விபத்தில், இந்திய தொழிலாளர்கள் 10 பேர் உட்பட, 15 தொழிலாளர்கள் பரிதாபமாக இறந்தனர்.

ஐக்கிய அரபு எமிரேட்டில் உள்ள டுபாயில், ஏராளமான இந்திய தொழிலாளர்கள், பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில், இந்தியா மற்றும் பங்களாதேசத்தை சேர்ந்த, 27 தொழிலாளர்கள், கட்டுமான பணி நடக்கும் இடத்துக்கு, மினி பஸ்சில் நேற்று முன்தினம் சென்றனர்.


அப்போது, வீதியோரத்தில் நின்று கொண்டிருந்த டிராக்டர் மீது, தொழிலாளர்கள் சென்ற ரேந்து மோதி யது.

இதில், 15 பேர் தொழிலாளர்கள், சம்பவ இடத்திலேயே இறந்தனர். இவர்களில், 10 பேர், இந்தியர்கள். இவர்கள் அனைவரும், பீகார் மாநிலத்தை சேர்ந்தவர்கள்.

அவர்களின் குடும்பத்தினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது" என அங்குள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

டுபாயில், இந்தாண்டு நடந்த விபத்துகளிலேயே, இதில் தான், அதிகம் பேர் இறந்துள்ளனர்" என, அங்குள்ள ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# எண்ணெயைத் திருடாதே; வியட்நாமில் ஆர்ப்பாட்டம்




கம்யூனிச அண்டை நாடுகளான சீனாவும், வியட்நாமும் பாரசல் மற்றும் ஸ்ப்ராட்லி தீவுகளின் உரிமை குறித்து நீண்ட கால மோதல்களில் உள்ளன. இந்த நிலையில் இந்த மாத ஆரம்பத்தில் பிரச்சினைக்குரிய நீர்ப்பரப்பில் சீனா ஆழ்கடல் எண்ணெய்க்குழாய் பதிக்க இருப்பதாகத் தெரிவித்தபோது மீண்டும் அங்கு பிரச்சினை வெடித்தது.


இது வியட்நாமை ஆத்திரமூட்டும் நடவடிக்கை என்று அமெரிக்காவும் விமர்சித்தது. சீனாவின் முடிவு சட்டவிரோதமானது என்று கூறிய வியட்நாம அரசும் இந்த நடவடிக்கையை திரும்பப் பெறுமாறு கூறி அந்தப் பகுதிக்கு தனது கப்பல்களை அனுப்பியதாகவும் ஆனால் அவை சீனக் கப்பல்களால் தாக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தலைநகர் ஹனோயில் ஒன்றுகூடி அங்குள்ள சீனத் தூதரகத்திற்கு வெளியே எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர. மாணவர்களில் இருந்து ஓய்வு பெற்ற போர்வீரர்கள் வரை பலதரப்பட்ட மக்கள் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

"சீனா எங்கள் எண்ணெயைத் திருடக்கூடாது", "அமைதி கோழைத்தனம் ஆகும்" போன்ற வாசகங்களை எழுதியிருந்த அட்டைகளை அவர்கள் தாங்கிய வண்ணம் தேசபக்திப் பாடல்களைப் பாடியபடி சென்றனர். தூதரகத்தின் பாதுகாப்பாளர்கள் அங்கு தடுப்புகளை ஏற்படுத்தி அவர்களை உள்ளே செல்லவிடாமல் தடுத்தனர்.

ஆயினும் பொதுவாக மிகுந்த கண்டிப்புடன் ஊர்வலங்களைத் தடை செய்யும் கம்யூனிச காவல் இந்தப் போராட்டத்தை உடைக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதுவரை ஹனோயில் தான் பார்த்ததிலேயே இதுதான் மிகப் பெரிய சீன எதிர்ப்புப் போராட்டம் என்று மூத்த போர் வீரரான டங் குவாங் தங் கூறினார்.

# லிபியாவில் படகு விபத்து; 40 பேர் உயிரிழப்பு



லிபியா கடற்பகுதி வழியே ஆபிரிக்காவின் சகாரா பகுதி மக்கள் பயணித்துக் கொண்டிருந்த படகு ஒன்று நேற்று முன்தினம் கடலில் மூழ்கியதில் குறைந்தது 40 பேர் பலியானதாகவும், 51 பேர் காப்பாற்றப்பட்டதாகவும் அந்நாட்டு அரசு தகவல்கள் தெரிவித்துள்ளன.

தலைநகர் டிரிபோலியிலிருந்து 37 மைல் கிழக்கே உள்ள ரமிகால் என்ற பகுதியில் இந்த சம்பவம் நடைபெற்றுள்ளதாக லிபியாவின் உள்துறை அமைச்சகத் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

லிபியாவின் பாதுகாப்பற்ற கடல் எல்லைகளும், மத்தியதரைக் கடலைத் தாண்டி இத்தாலி, மால்டா போன்ற நாடுகளை எளிதில் அணுகும் வண்ணம் அமைந்துள்ள அந்நாட்டின் நிலப்பரப்பும் ஐரோப்பாவை அடைய முயற்சி செய்யும் வடக்கு ஆபிரிக்க மக்களுக்கு லிபியாவை பொது வழித்தடமாக மாற்றியுள்ளது.

இந்தப் பயணத்திற்காக அவர்கள் ஒவ்வொருவரும் தலா 1000 டொலருக்கு மேல் சட்ட விரோத குழுக்களிடம பணம் செலுத்துவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2011 ஆம் ஆண்டில் லிபியாவை 40 வருடங்களுக்கும் மேலாக ஆண்டுவந்த முவம்மர் கடாபி பதவி இறக்கப்பட்டு கொல்லப்பட்டதிலிருந்து அந்நாடு இன்னமும் போராளிகளின் பிடியில் சிக்கித் திணறி வருகின்றது.

அந்நாட்டின் இராணுவம், கடற்படை, ரோந்துப்பிரிவு போன்றவை இன்னமும் பயிற்சிப் பணியிலும், முழுமையாக ஆயுத பலம் பெறாத நிலையிலும் இருப்பதால் மேற்கத்தேய நாடுகளின் உதவியை எதிர்நோக்கி லிபிய அரசு செயறபட்டு வருகின்றது.

இதனைத் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் சட்ட விரோத குழுக்கள் ஐரோப்பாவிற்கு குடியேற விரும்பும் மக்களை முறையற்ற வழியில் அனுப்ப இந்தத் தடத்தைப் பயன்படுத்துகின்றன. கடந்த மார்ச் மாதம் இவ்வாறு மத்திய தரைக் கடல் பகுதியில் வந்து ஆபத்தில் சிக்கிய 4000 அகதி களை நான்கு நாட்களில் சிசிலியின் தெற்குப் பகுதியில் இத்தாலிய அரசு காப்பாற்றியுள்ளது இங்கு குறிப்பிடப்படுகின்றது.

# ஹெரோயினுடன் சென்ற கப்பலை கூட்டுப் படையினர் கைப்பற்றினர்



குஜராத் மாநிலத்திலிருந்து, 1,600 கோடி ரூபாய் மதிப்புள்ள ஹெரோயின் போதைப் பொருளுடன சென்ற கப்பலை, வெளிநாட்டு கூட்டு போதை தடுப்பு கடலோர காவல் படையினர் பறிமுதல் செய்துள்ளனர் என காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

தேசிய பாதுகாப்புக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப் போவதாக பேசி வரும் நரேந்திர மோடி, இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார் என்றும், கேள்வி எழுப்பியுள்ளது.

காங்கிரஸ் தகவல் தொடர்பாளர் அபிஷேக் மனு சிங்வி இது தொடர்பாக நேற்று கூறியதாவது,

குஜராத் மாநிலத்திலிருந்து, கடந்த மாதம், 1,600 கோடி ரூபாய மதிப்புள்ள ஹெரோயின போதைப் பொருளுடன் கப்பல் ஒன்று சென்றுள்ளது. அந்தக் கப்பலை, கென்யா கடலோர பகுதியில்,கடலோர காவல் படையினர் பறிமுதல் செய்துள்ளனர.

இதிலிருந்தே, கடலோர பாதுகாப்பு விடயத்தில், மோடி தலைமையிலான குஜராத் மாநில அரசு, எவ்வளவு மெத்தனமாக செயற்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்ளலாம். அரசியல் ஆதாயம் பெறுவதற்காகவே, தேசிய பாதுகாப்பு பற்றி மோடி பெரியளவில் பேசி வருகிறார். அவரின் பேச்செல்லாம் வெற்றுப் பேச்சு என்பது, ஹெரோயின் கப்பல் பறிமுதல் மூலம் தெரியவந்துள்ளது.

அந்தக் கப்பல் குஜராத் மாநில பா.ஜ. தலைவர்கள் இருவருக்காக, அவர்களின் வர்த்தகத்திற்காக வாடகைக்கு அமர்த்தப்பட்டது. அத்துடன், குஜராத் கடலோர பகுதி, போதைப் பொருள் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்த பாதுகாப்பு குறைபாட்டிற்கு காரணம் யார்? முன்னர் மும்பையில் தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகளும், குஜராத் கடலோர பகுதியை பயன்படுத்தி உள்ளனர். கடத்தல்காரர்களும், பயங்கரவாதிகளும் குஜராத் கடலோர பகுதிகளில் நிலவும் பாதுகாப்பு குறைபாட்டை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தியுள்ளனர்.

கடலோர பாதுகாப்புக்கு தேவையான உதவிகளை, மத்திய அரசிடம் இருந்து, குஜராத் மாநில அரசு பெற்றும், அதை முழுமையாகப் பயன்படுத்தவில்லை என் சிங்வி கூறினார்.

# போப் 6ஆம் போலுக்கு அருளாளர் பட்டம்

(வத்திகான்)

மறைந்த போப் 2 ஆம் ஜான் போல், 23 ஆம் ஜான் ஆகியோருக்கு சமீபத்தில் புனிதர் பட்டம் வழங்கப்பட்டது.

தற்போது மேலும் ஒரு முன்னாள போப் ஆண்டவருக்கு புனிதர் நிலைக்கு முந்திய 'அருளாளர்' பட்டம் வழங்கப்படுகிறது. இதற்கான ஒப்புதலை போப் பிரான்சிஸ் வழங்கியுள்ளார். கத்தோலிக்கத் திருச்சபையில் புனிதர் பட்டத்துக்கு சிபாரிசு செய்யும் பேராயத்தின் தலைவர் ஆஞ்சலோ அமாத் தோ போப் பிரான்சிசை வத்திக்கானில் சந்தித்தார்.

அப்போது போப் ஆறாம் போல், இத்தாலியைச் சேர்ந்த பாதிரியார் லூயிஜி ஆகிய இருவரை அருளாளர்களாக உயர்த்துவதற்கான அற்புதங்கள் குறித்த ஆவணாங் களை சமர்ப்பித்தார்.

அறிவியலால் விளக்க முடியாத அதிசயங்கள் என மருத்துவர்கள் வழங்கியுள்ள சான்றை ஏற்றுக் கொண்ட போப் பிரான்சிஸ், போப்



6 ஆம் போல் உள்ளிட்ட இருவரையும் அருளாளர்கள் நிலைக்கு உயர்த்தும் ஆணையில் கையெழுத்திட்டார்.

அருளாளர் நிலைக்கு உயர்த்தப்படும் போப் 6 ஆம் போல், 1963 ஆம் ஆண்டு கத்தோலிக்கத் திருச்சபையின் 262 ஆவது போப் ஆண்டவராக பதவியேற்றார். 1964 ஆம் ஆண்டு மும்பையில் நடைபெற்ற நற்கருணை மாநாட்டில் பங்கேற்பதற்காக, இவர் இந்தியாவுக்கு சென்றார். இந்தியாவுக்கு சென்ற முதல் போப் ஆண்டவர் 6 ஆம் போல் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை பண்பாட்டு செயற்பாடுகளை மேம்படுத்தும் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் வட மாகாணத்தினுடைய கலை பண்பாட்டு செயற்பாடுகளை மேம்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 21 ஆம்திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாண கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தலைமையில் இடம் பெறவுள்ளதாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

மேற்படி கலந்துரையாடல் பங்கேற்க விரும்பும் வடமாகாண கலைஞர்கள் தங்களது வரவை பிரதேச செயலகத்திலுள்ள கலாசார உத்தியோகத்தரிடம் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

அத்துடன் மேற்படி கலந்துரையாடலில் பங்கு பற்றி கலாசாரம் சார்ந்த வேலைத் திட்டங்களை முன்னெடுத்து செல்வதற்கு தங்களது ஆக்கபூர்வமான ஆலோசனை களை வழங்குமாறு அவர் கேட்டுள்ளார். (2)

## கதிர்காமத்தில் உற்சவம்

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காம ஆலயத்தினுடைய இவ் வருட உற்சவம் தொடர்பான விபரங்களை இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ம.சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் ஜூன் மாதம் 28 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் உற்சவம் ஆரம்பமாகி எதிர்வரும் ஜூலை மாதம் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்த உற்சவத்துடன் நிறைவு பெறவுள்ளது.

எனவே கதிர்காம பாத யாத்திரை மேற்கொள்ளும் அடியவர்கள் தமது பயண ஒழுங்குகளைசெய்துகொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (2)

# இலங்கையின் உண்மை நிலைமைகளை உங்கள் நாடுகளுக்கு வெளிப்படுத்துங்கள்

## வெளிநாட்டு தூதுவர்களிடம் ஜனாதிபதி கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் பல பாகங்களுக்கு விஜயம் செய்து, இங்குள்ள உண்மையான நிலைமைகளை உங்களின் நாடுகளுக்கு தெளிவுபடுத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, புதிய வெளிநாட்டு தூதுவர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

இலங்கைக்கான கொங்கோ தூதுவர் பிலிக்ஸ் நகோமா ( வாசஸ தலம் புதுடில்லி), ஆர்ஜன்டீன தூதுவர் ராகுல் இக்னாசியோ குவாஸ்டாவினோ( வாசஸ்தலம் - புதுடில்லி), தென் கொரியா தூதுவர் சாங் வேங் சாம், பிலிப்பைன்ஸ் தூதுவர் வின்சேன்டி விவியன் சியோ டி பண்டில்லோ ( வாசஸ் தலம் டாக்கா), பாலஸ்தீன தூதுவர் சுஹைர் அஹமடல்லா சாஹிட், எல்- சல்வடோர் தூதுவர் கில்ஹெரிமோ ரூபியோ பன்நெஸ் ( வாசஸ் தலம் புதுடில்லி) ஆகியோர் இலங்கைக்கான தூதுவர் நியமனக் கடிதங்களை நேற்று ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

இலங்கைக்கான தூதுவர்கள், இரு நாடுகளின் உறவுகளை வலுப்படுத்தவும் இலங்கை மக்கள் தொடர்பிலான நற்செய்திகளை தமது நாடுகளில் மதிப்புக்குரிய தலைவர்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டும் எனவும் ஜனாதிபதி இதன் போது கேட்டுக்கொண்டுள்ளார்.

அதேவேளை கொங்கோ, ஜெனீவா மனிதவுரிமை பேரவையில் இலங்கைக்கு வழங்கி வரும் ஆதரவு தொடரும் இலங்கைக்கான அந்நாட்டின் தூதுவர் நகோமா, ஜனாதிபதியிடம் கூறியுள்ளார்.

தனது பதவிக்காலத்தில் குறிப்பாக வர்த்தக துறையில் புதிய துறைகளில் ஒத்துழைப்புகளை மேற்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என ஆர்ஜன்டீனா தூதுவர் குவாஸ்டாவினோ குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை புதிய வர்த்தக முதலீடுகள், இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என தென் கொரிய தூதுவர் வோங் சாம் கூறியுள்ளார்.

இலங்கையில் போருக்கு பின்னரான அபிவிருத்தி குறித்து தூதுவர்களுக்கு விளக்கிய ஜனாதிபதி, இலங்கையில் பல பகுதிகளுக்கு சென்று மக்களுடன் பேசி கீழ் மட்டத்தில் இருந்து உண்மை அறிந்து நிஜத்தை தமது நாடுகளுக்கு சென்று தெரியப்படுத்துமாறு ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

இந் நிகழ்வில், பிரதி வெளி விவகார அமைச்சர் நியோமல் பெரேரா, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, வெளி விவகார அமைச்சின் செயலாளர் சேனுகா செனவிரட்ன ஆகியோரும் கலந்து கொண்டனர். (2)

# பொலிஸ் உத்தியோகஸ்தரை தாக்கிய நபர் கைது

(கொழும்பு)

பாணந்துறை - பிங்வத்த பகுதியில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை போத்தலால் தாக்கி காயப்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாணந்துறை பொலிஸார் நேற்று காலை குறித்த சந்தேகநபரை கைது செய்துள்ளனர்.

குடிபோதையில் இருந்த இரு தரப்பினரிடையே ஏற்பட்ட மோதலை தடுக்கச் சென்ற பொலிஸ் குழுவில் இருந்த ஒருவர் மீதே நேற்று முன் தினம் இரவு இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் பாணந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (2)

# 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பணம் கொள்ளை

(கொழும்பு)

அங்குனுகொலபெலஸ்ஸ - அளுத்வெவ பகுதி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்து 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணம் நேற்று முன்தினம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளரின் மகன் வீட்டுக்கு பணத்தை எடுத்துச் சென்று தனது வீட்டிற்கு முன் காரை நிறுத்தி வைத்துவிட்டு உள்ளே சென்ற போது அங்கு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பணத்தை கொள்ளையிட்டுச் சென்று ள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது காயங்களுக்கு உள்ளான எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளரின் மகன் அங்குனுகொலபெலஸ்ஸ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவம் குறித்து அங்குனுகொல பெலஸ்ஸ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2)

# அமைச்சர் விமலை தேடுகிறார் ஜனாதிபதி

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸவை தொலைபேசியில் தொடர்பு கொள்ள தான் சில தினங்கள் முயற்சித்த போது அது வெற்றியளிக்கவில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அனுராதபுரம் செல்லும் வழியில் தேசிய சுதந்திர முன்னணியை சேர்ந்த பிரதியமைச்சர் வீரகுமார திஸாநாயக்கவிடம் இதனை தெரிவித்துள்ளார்.

வீரகுமார திஸாநாயக்கவிடம் மேலும் தெரிவித்த ஜனாதிபதி,

எங்கே உங்கள் தலைவர்?. மூன்று நாட்களாக நான் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயற்சித்தேன் அவரை பிடிக்க முடியவில்லையே... அவர் எங்கே இருக்கின்றார்... என ஜனாதிபதி கேட்டுள்ளார்.

இதற்கு பதிலளித்த வீரகுமார, கட்சியின் புதிய யோசனைகளுடன் அமைச்சர் வீரவன்ஸ, ஜனாதிபதியை சந்திக்க தயாராகி வருவதாக கூறியுள்ளார். (2)

# ஆசிரியை முழந்தாளிட வைத்த நபருக்கு சிறை

(கொழும்பு)

ஆசிரியை ஒருவரை முழந்தாளிட வைத்த முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினர் ஒருவருக்கு 7 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கால சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்றைய தினம் புத்தளம் மாவட்ட மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது புத்தளம் மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி பிரியந்த பெர்னாண்டோ இத் தீர்ப்பை அறிவித்தார்.

மேலும் குறித்த முன்னாள் மாகாண சபை உறுப்பினருக்கு 50ஆயிரம் ரூபா தண்டமும் பாதிக்கப்பட்ட ஆசிரியைக்கு 3 இலட்சம் ரூபா நட்டஈடும் வழங்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

நவகத்தேகம பிரதேசத்தில் பாடசாலை ஆசிரியை ஒருவரை கடந்த ஜூன் மாதம் 14ஆம் திகதி முழந்தாளிட வைத்தமை தொடர்பில் ஆனந்த சரத் குமாரவுக்கு எதிராக குற்றம்சாட்டப்பட்டது. (2)

# பொது வேட்பாளர் தொடர்பில் ஐ.தே.கவிடம் தெளிவில்லை

## இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தெரிவிப்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அதிகாரம் மாற்றம் ஏற்படலாம் என்பதால், சிலர் பேதங்களை மறந்து வேறு கூட்டணிகளை ஏற்படுத்திக் கொள்ளும் வாய்ப்பி ருப்பதாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தவிசாளர் ராஜா கொலுரே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய அரசியல் நிலைமைகளை நோக்கும் போது, பல அரசியல் சக்திகள் அடுத்த வருடத்தில் ஆரம்பத்தில் நடத்தப்பட உள்ளதாக நம்பப்படும் ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து செயற்பட்டு வருகின்றன.

அரசியல் கட்சிகள் தற்போது பல விடயங்கள் பற்றி பேசி வருகின்றன. இவ்வாறான நிலையில், ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடத்தப்படும் சந்தர்ப்பத்தில் நாட்டின் அரசியல் சக்திகள் ஒரு கூட்டணிக்கோ அல்லது தனியாக அணி திரளவோ கூடும்.

ஜனாதிபதித் தேர்தல் என்பது அதிகார மாற்றத்திற்கான சந்தர்ப்பம். இதனால் சிலர் தமது தற்போதைய கொள்கைகளை புறந்தள்ளி வைத்து விட்டு, தேர்தலில் ஏற்படும் மாற்றத்தை எதிர்ப்பார்த்து செயற் பட வாய்ப்புள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடைபெறுமாயின் அரசாங்கத்தின் சார்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே வேட்பாளராக நிறுத்தப்படுவார் என்பதை நாம் அறிவோம்.

எதிர்க்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் தெளிவான நிலையில்லை. பலர் பொது வேட்பாளர் குறித்தே பேசி வருகின்றனர்.

எனினும் அந்த கட்சியில் உள்ள பலர் அரசாங்கத்திற்கு எதிரான சக்திகள் இணைந்து பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என கருதுகின்றனர் என்றார். (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



திருமதி நடராசா
இராசம்மா

காரைநகர்,ஆயிலியைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா இராசம்மா கடந்த 10 ஆம் திகதி சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3 மணிக்கு ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



நடேசபிள்ளை
ரமேஸ்

நீர்கொழும்பைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கு இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நடேசபிள்ளை ரமேஸ் கடந்த 10 ஆம் திகதி சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.



திருமதி சின்னத்துரை
செல்லம்மா

சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை செல்லம்மா கடந்த 30 ஆம் திகதி புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு 92 Lawrence Ave,New Malden,Greater London KT3 5NB,UK என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்கு உதவிகள் வேண்டாம் சொந்த நிலங்களே வேண்டும்

## சம்பூர் மக்கள் வலியுறுத்தல்



(குருமன்காடு)

எமது கஷ்டங்களுக்கு உதவிகள் வேண்டாம். எமது சொந்த நிலத்தில் வாழ அனுமதித்தால் அனைத்து துன்பங்களும் எம்மை விட்டு அகன்று விடுமென சம்பூர் மக்கள் கூட்டமைப்பினரிடம் தெரிவித்துள்ளனர்.

சம்பூர் பகுதிக்கு கடந்த சனிக்கிழமை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் விஜயம் மேற்கொண்டு மக்கள் தங்கியுள்ள மணல்சேனை, பட்டிக்குடியிருப்பு ஆகிய முகாங்களில் அவர்களைச் சந்தித்த போதே அவர்கள் தமது ஆதங்கத்தை வெளியிட்டுள்ளனர்.

அங்குசென்ற கூட்டமைப்பினர் கருத்து தெரிவிக்கையில்,

சம்பூர் மக்கள் 4 அகதி முகாம்களில் உள்ளனர். இம்மக்கள் கடுமையான வெயிலில் தகரங்களுக்கு கீழே இருப்பதால் அந்த முகாமிலுள்ள பலருக்கு அம்மை நோய் ஏற்பட்டுள்ளது.

மூதூரிலுள்ள வைத்தியசாலைக்குச் சென்றால் சம்பூர் அகதி முகாம்களிலுள்ள பலர் இந்த நோய்க்கு ஆளாகி வைத்தியசாலைக்கு வருவதாக வைத்தியர்கள் குறிப்பிடுகின்றனர்.

700 குடும்பங்களைச் சேர்ந்த மூவாயிரம் பேர் இந்த அகதி முகாம்களில் வசித்து வருகின்றனர். இந்த முகாம்களுக்கு எந்தவொரு அரச சார்பற்ற நிறுவனமும் உதவி செய்வதற்கு போக முடியாது. பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவவோ பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கவோ முடியாத நிலை இங்குள்ளது.

அங்குள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்க சென்ற நிறுவனம் ஒன்றினை இராணுவம் திருப்பி அனுப்பியுள்ளது.

இதேபோல் மீன் வியாபாரியோ புடைவைகள் விற்பனை செய்யும் வியாபாரியோ இந்த முகாமுக்கு செல்ல முடியாத நிலையுள்ளது. இதனால் 12 கிலோமீற்றர் தூரம் சைக்கிளில் சென்று மீனவர்கள் மீன்பிடிக்க வேண்டியுள்ளது.

ஜனாதிபதி நினைத்தால் அந்த மக்களின் நிலத்தை அவர்களுக்கு உடன் வழங்க முடியும்.

தமது சொந்த குடும்ப தேவைகளுக்காக அந்த நிலத்தை வைத்துக்கொண்டு 3 ஆயிரம் மக்களின் வாழ்வை சீரழிக்காமல் அவர் களின் பரிதாப நிலையை கருத்திற்கொண்டு சம்பூர் மக்களின் நிலத்தை அவர்களுக்கு வழங்கு மாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுக்கின்றது என்றனர். (9-250)

# வாகன விபத்தில் ஒருவர் படுகாயம்



(குருமன்காடு)

வவுனியா கச்சேரியில் அமைந்துள்ள பண்டார வன்னியன்சிலைக்கு முன்பாக இடம்பெற்ற வாகனவிபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வவுனியா-மன்னார் வீதியிலிருந்து வைத்தியசாலை பக்கமாக திரும்பி சென்ற முச்சக்கர வண்டியுடன்பின்னால்வந்தபிக்கப் வாகனம் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன் போது ஆட்டோ தடம் புரண்டதோடு, சாரதி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார். கடமையில் ஈடுபட்டிருந்த போக்குவரத்து பொலிஸார் பிக்கப் வாகன சாரதியை கைது செய்ததுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (9-250)

# வவு.தேசிய கல்வியியல் கல்லூரிக்கு புதிய பீடாதிபதி நியமனம்

(பூந்தோட்டம்)

வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியின் மூன்றாவது பீடாதிபதியாக இலங்கை ஆசிரிய கல்வியியலாளர்சேவை 2:1ஐ சேர்ந்த கு. சிதம்பரநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மூன்று முறிப்பு பனங்காமத்தை பிறப்பிடமாக கொண்ட இவர் ஆரம்ப கல்வியை யோகபுரம் மகாவித்தியாலயத்திலும் இடைநிலை கல்வியை ஓமந்தை மத்திய கல்லூரியிலும் உயர் கல்வியை வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்திலும் கற்றார்.

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பட்டதாரியாகவும் முல்லை. புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் விஞ்ஞான ஆசிரியராகவும் வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியின் உதவி விரிவுரையாளராகவும் பின்னா விரி வுரை இணைப்பாளர், உப பீடாதிபதி ஆகிய கடமைகளை ஆற்றினார். (9-266)

# வீட்டிலுள்ள மரங்களை வெட்ட இலஞ்சம் கேட்கும் வன இலாகா

வவுனியா மாவட்டத்திலுள்ள வீடுகளில் மரங்களை வெட்டுவதற்கு வனஇலாகாதிணைக்களத்திடம அனுமதி பெற செல்கையில் இலஞ்சம் கேட்பதாக பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்

நீண்டகாலமாக வீட்டில் வளர்க்கப்பட்ட மரங்களை தமது பயன்பாட்டிற்கு வெட்டுவதற்கும் தமது காணிகளுக்கு செல்வதற்கான இடம் ஒதுக்கபடும் போது வீதியோரத்தில் உள்ள மரங்களை வெட்டுவதற்கும் வன இலாகாவிடம் அனுமதி கேட்கச் செல்கையிலேயே அங்குள்ள உத்தியோகத்தர்கள் இலஞ்சம் கேட்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட பெணணொருவர் தெரிவிக்கையில்,

அண்மையில் எமது காணியில் உள்ள மரம் ஒன்றினை வெட்டுவதற்கு பிரதேச செயலாளரிடம் அனுமதி பெற சென்றிருந்தேன். எனினும் பிரதேச செயலாளர் வன இலாகாவிடம அனுமதி பெறுமாறு கூறியிருந்தார்.

இதனையடுத்து வன இலாகாவிடம் சென்று அனுமதி கேட்டபொழுது அவர்கள் மரத்தை வந்து பார்ப்பதாக கூறியிருந்தார்கள்.

மூன்று நாட்கள் கழித்து மரத்தை பார்த்த வன இலாகா அலுவலர் மரம வெட்ட அனுமதி வேண்டு மெனில் தனக்கு 5ஆயிரம் ரூபாவும் அலுவலகத்தில் மேலும் இரு அலுவலர்களுக்கு 2ஆயிரம் ரூபா வீதமும் தர வேண்டுமென கூறினார் என்றாா.

அண்மைக்காலமாக வவுனியாவில் உள்ள சில அரச திணைக்களங்களில்இலஞ்சம்கொடுத்தே தமது வேலைகளை நிறைவேற்ற வேணடியுள்ளதாக பொது மக்கள் ஆதங்கததுடன் குறிப்பிட்டுள்ளனர். (9-250)




### கட்டுத்துவக்கு வெடித்ததில் இராணுவச் சிப்பாய் படுகாயம்

கிளிநொச்சி சுண்டிக்குளம் பகுதியிலுள்ள காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை கட்டுத்துவக்கு வெடித்ததில் இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி குகேனி இராணுவ பயிற்சி முகாமினூடாக காட்டுப் பகுதியில் பயிற்சி நெறி இடம்பெற்றது.

இப் பயிற்சி நெறியில் ஈடுபட்ட போதே கட்டுத்துவக்கு வெடித்துள்ளது.

இதில் யாழ்.எழுதுமட்டுவாழ் இராணுவ முகாமின் இராணுவ சிப்பாயான டபிள்யூ.ஜி.எஸ்.தர்ஷன (வயது-25) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

கட்டுத்துவக்கு திடீரென வெடித்ததில் படுகாயடைந்த குறித்த இராணுவச் சிப்பாய் முதலில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (9-6)



முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பகுதியில் அமைந்துள்ள தட்டயமலையில் சட்டவிரோதமான கருங்கல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. சுமார் 50 அடி ஆழத்திற்கு மேல் கருங்கல் அகழப்படுவதால் தட்டயமலை அழிவடைந்து செல்வதை படத்தில் காணலாம்.

# விளையாட்டில் அரசியல் தலையீடு இருக்கக்கூடாது

(பூந்தோட்டம்)

இன, மத, சாதி பேதமின்றி ஒற்றுமையை பலப்படுத்துவதே விளையாட்டின் நோக்கம். அதற்குள் அரசியல் உள்நுழையக் கூடாது என வடமாகாணபோக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

வடமாகாண மட்ட விளையாட்டுப் போட்டி கடந்த சனிக்கிழமை மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரியில் இடம்பெற்ற போது அங்கு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.


அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியானது வெகு விமரிசையாக கொண்டாடப்படுவதையிட்டு பெரு மகிழ்வு அடைகின்றேன்.

இவ் விளையாட்டுப் போட்டிகள் இன, மத, சாதி பேதமின்றி ஒற்றுமையைக் கட்டியெழுப்பும் நோக்கம் கொண்டவையாக உள்ளன.

சில சந்தர்ப்பங்களில் விளையாட்டின் போது மனக்கசப்புக்கள் ஏற்பட்டாலும் அவ்வாறான விடயங்களை மைதானத்துடன் மறந்துவிட வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் விளையாட்டில் அரசியல்தலையீடுகளை அனுமதிக்கக்கூடாது என்றார். (9-250)

# குடியிருப்புகளின் மத்தியில் மாடுகள் வெட்டப்படுவதால் மக்கள் அசௌகரியம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி அம்பாள் குளம் பழைய சந்தைக்கு பின்புறமாகவுள்ள பகுதியில் மாடு வெட்டுவதை நிறுத்துமாறு அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்குறித்த பகுதியில் வெட்டப்படுகின்ற மாடுகளின் இறைச்சிகள் கிளிநொச்சி பொதுச் சந்தைக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

போருக்கு முந்திய காலப்பகுதியில் மாடுகள் திருநகர் மயானத்திலேயே வெட்டப்பட்டன.

எனினும், தற்போது மக்கள் குடியிருப்புக்கள் உள்ள பகுதியில் மாடுகள் வெட்டப்பட்டு அதன் கழிவுகள் சீரான முறையில் அகற்றப்படாமையினால் துர்நாற்றம் வீசுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பல தரப்பட்டவர்களுக்கும் தெரியப்படுத்தியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, மக்கள் குடியிருப்பு பகுதியில் இடம்பெறும் இச் செயற்பாட்டை வேறு இடத்திற்கு மாற்றுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-271)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூஞ்சிட்டு கன்னங்கள் பொன்மணி தீபத்தில்
பால் பொங்கல் பொங்குது பன்னீரிலே
பொங்கல் பிறந்தாலும் தீபம் எரிந்தாலும்
ஏழைகள் வாழ்வது கண்ணீரிலே -*சினிமாப் பாடல்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஆரியகுளத்து தாமரைத் தீபங்களும் எங்கள் அடிவயிற்று நெருப்பும்

இலங்கை சர்வ மதங்களுக்கும் உரிய நாடு என்பது பேச்சளவிலேயே இருக்கிறது. நடைமுறையில் பௌத்த மதமே ஆட்சி மதமாக விளங்குவதை நாம் காண முடியும்.

அதிலும் வடபுலத்தில் பௌத்த மதத்தின் ஆதிக்கத்தினைச் செலுத்துவதில் பேரின வாதம் காட்டும் கருசனை அளவு கடந்தது எனலாம்.

சமயக் கொண்டாட்டங்கள், அனுஷ்டிப்புக்கள் எங்கும் நடைபெறக் கூடியவை. அது குறித்து வேற்றுக்கண் பார்வை நல்லதல்ல. எனினும் வடபுலம் போரின் பேரிழப்புக்களைக் கண்ட பூமி என்பதாலும் அது தமிழர் தாயகம் என்ற அடிப்படையிலும் நோக்கப்படுவது அவசியம்.

அவ்வாறானதொரு நிலையில் வடபகுதியில் வெசாக் பண்டிகைக் கொண்டாட்டத்தைப் படைத்தரப்பினர் எல்லை மீறி அனுஷ்டிப்பது யுத்தத்தால் நொந்து போன மக்களை மேலும் தாக்கத்திற்கு உட்படுத்தும் எனலாம்.

குந்தி இருப்பதற்கு வீடில்லை. ஒரு வேளை உணவிற்கு வழியில்லை என்ற மிகக்கொடுமையான சூழ்நிலையிலேயே வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழ் மக்களின் வாழ்வு உள்ளது. நிலைமை இதுவாக இருக்கையில் போதிமரத்து மாதவன் ஞானம் பெற்ற நாளும், வன்னிப் போரின் இறுதி நாளும் மே மாதத்தில் வந்து சந்திக்க,

ஒரு தீபம் தண்ணீரில் மிதந்து மகிழ்வைக் கொடுகிறது. இன்னொரு தீபம் கண்ணீரில் நனைந்து சோகம் தாழாது நூர்ந்து போகிறது.

அட, வெசாக் பண்டிகைக்காக யாழ்ப்பாணத்து ஆரியகுளத்தில் தாமரைத் தீபங்கள் வர்ணக் கோலமாய் வடிவு காட்டுகின்றன.

தீயில் எரித்து பல் உயிர்களை பறிகொடுத்த முள்ளிவாய்க்காலில் ஒரு தீபம் ஏற்றி "என்னுறவே! என்னுயிரே! உன் நினைவழியா நினைவோடு உன் உதிரம் சிந்திய இச் சிவந்த மண்ணில் தீபம் ஏற்றி இதயம் நொந்து கண்ணீர் சிந்திக் கலங்கும் வேளையில், உன் ஆத்மா சாந்தி பெறுக" என்று பிரார்த்திக்கவும் தடையென்றால்,

எங்கள் நந்திக் கடலில் ஒற்றைத் தீபத்தையேனும் ஏற்றி, ஓ! நந்திக் கடலே நீதான்-ஜெனிவாவுக்கு போகமுடியாத கண்கண்ட சாட்சி. அவலமாய் உயிர் பறிக்கப்பட்ட எங்கள் உறவுகளுக்காக உன் மடியில் இத் தீபத்தை வைத்துக்கொள்.

ஞானம் பெற்றதற்காக ஆரியகுளத்தில் தாமரைத் தீபம். ஞானம் பெறுவதற்காக நந்திக் கடலில் ஒரு தீபம் என்று ஏற்றிவிட முடியுமா என்ன? ஓ! கௌதம புத்த பிரானே! உன் பெயரால் ஆரியகுளத்தில் தீபங்கள் எரியும் அதேநேரம் தமிழர் அடி வயிற்றில் நெருப்பு எரிகிறதே! இது யாரால்?... யாரால்?... யாரால்?

# கொன்சலிற்றா மரண வழக்கு; அடுத்த மாதத்திற்கு ஒத்திவைப்பு

## நேற்றைய விசாரணையில் பாதிரியார் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குருநகர் பகுதியிலுள்ள கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட கொன்சலிற்றா என்ற யுவதியின் மரணம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டு அடுத்த மாதம் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த யுவதியின் மரணத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் அருட் தந்தையர்கள் இருவர் நேற்று மன்றில் சாட்சியமளித்துள்ளனர்.

கொன்சலிற்றா மறை ஆசிரியர் என்பதைத்தவிர வேறு எந்தத் தொடர்பும் எனக்கு இல்லை என கொன்சலிற்றாவின் உயிரிழப்புடன் தொடர்பு என சந்தேகிக்கப்படும் பெரியகோயில் பாதிரியாரான குயின்ஸ்ரன் பெர்னாண்டோ மன்றில் சாட்சியமளித்தார்.

கொன்சலிற்றா தொடர்பிலான வழக்கு யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் பி.சிவகுமார் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன்படி பாதிரிமார்கள் இருவரும் மன்றிற்கு சமுகமளித்திருந்ததுடன் கொன்சலிற்றாவின் சாவு குறித்தும் சாட்சியமளித்திருந்தனர். அதன்போதே பாதிரியார் குயின்ஸ்ரன் பெர்னாண்டோ மேற்கண்டவாறு மன்றில் சாட்சியமளித்தார்.

அவர் மேலும் சாட்சியமளிக்கையில், நான் பெரியகோயிலினுடைய பாதிரியாராக கடந்த 2 வருடங்களாக உள்ளேன். அங்கே மறைகல்வி கற்பிக்கப்பட்டு வருகின்றது.

சுமார் 500 மாணவர்களும் 30 தொடக்கம் 35 வரையான ஆசிரியர்களும் உள்ளனர். அதன்படி மறைக்கல்வி ஆசிரியர்களுள் ஒருவராக கடந்த நவம்பர் மாதம் முதல் கொன்சலிற்றா இருந்தவர்.

கடந்த ஒன்றரை மாதங்களாக கொன்சலிற்றா சமுகம் தரவில்லை. எனினும் ஆசிரியர்களாக பலர் வருவார்கள் போவார்கள் அதனால் அவர் சமுகம் தராதமை குறித்து நான் தேடவில்லை. அதுபற்றி எனக்குத் தெரியாது. சக ஆசிரியர்களே அவரின் வீட்டிற்கு சென்று விசாரித்தனர். மறைக்கல்வி தொடர் பான விடயங்களை தெரிவிப்பதற்கு சிலவேளைகளில் தொலைபேசியில் அழைப்பு எடுத்துள்ளேன். அத்துடன் தேவை கருதியும் குறுந்தகவல்களை அனுப்பியுள்ளேன்.

எனினும் கொன்சலிற்றா இறப்பதற்கு முன் ஒன்றரை மாதங்களாக தொடர்பு கொள்ளவில்லை.

இருப்பினும் கொன்சலிற்றா கிணற்றுக்குள் இறந்த நிலையில் இருந்தமை தொடர்பில் கடந்த 15ஆம் திகதி 3 மணிக்கு மக்கள் கூறியே தெரியும்.

எனினும் மறையாசிரியர் என்பதைத் தவிர எனக்கும் கொன்சலிற்றாவுக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை. அத்துடன் சாதாரண தொடர்பை வைத்துக்கொண்டு கொன்சலிற்றாவின் பெற்றோரும், ஊடகங்களுமே பெரிதாக்கியுள்ளன. இவர்கள் கூறுமளவிற்கு எந்தவிதமான விடயமும் இல்லை என்று மன்றில் சாட்சியமளித்தார்.

இதேவேளை மேற்படி வழக்கினை அடுத்த மாதம் 6 ஆம் திகதிக்கு ஒத்தி வைப்பதாக நீதவான் உத்தரவிட்டார். (செ-6)

# மத பொலிஸ் தேவை என்றால் காவியை அணிவித்திருக்கலாம்

## பிரதமர் ஜயரத்ன விளக்கம்

(கொழும்பு)

மத பொலிஸ் ஒன்றின் தேவை ஏற்பட்டிருந்தால், தற்போது ஏற்படுத்தியுள்ள மத விவகார பொலிஸ் பிரிவுக்கு காவியை அணிவித்திருக்கலாம் என பிரதமர் டி.எம். ஜயரத்ன தெரிவித்தார்.

வெசாக் தினத்தை முன்னிட்டு நினைவு தபால் முத்திரை ஒன்றை அவரது அலுவலகத்தில் வெளியிட்டு வைக்கும் நிகழ்வில் பேசும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புத்தசாசன அமைச்சின் ஒரு அறையில் பொலிஸ் பிரிவு இருப்பதால், மத ரீதியான பொலிஸாகி விடாது. அது வழமையான பொலிஸ் பிரிவுதான்.

பொலிஸ் சீருடை அணிந்தே அங்குள்ள பொலிஸார் கடமையாற்றுகின்றனர்.

சிலர் கூறுவது போல் அது மத பொலிஸாக இருந்தால், அவர்களுக்கு காவியை அணிவித்திருக்க வேண்டும்.

தேவையான நேரத்தில் முன் வந்து விசாரணைகளை நடத்தி விரைவான தீர்வை காண்பதற்காகவே புத்தசாசன அமைச்சில் பொலிஸ் பிரிவு ஏற்படுத்தப்பட்டது.

இவர்கள் தமது விசாரணை அறிக்கை பொலிஸ் மா அதிபரிடமே கையளிப்பார்கள் எனவும் பிரதமர் குறிப்பிட்டார். (செ-11)

# டுபாய் நீதிமன்றத்தினுள் அழுது புலம்பிய இலங்கையர்

## பரிவு காட்டினார் நீதிபதி

(கொழும்பு)

பிரான்ஸ் பெண்ணொருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தபபட்ட சம்பவம் ஒன்றில் இலங்கையை சேர்ந்த சாட்சியாளர் டுபாய் நீதிமன்றத்தில் அழுது புலம்பியுள்ளார்.

33 வயதான இந்த சாட்சியாளருக்கு சிங்களம் மட்டுமே பேசத் தெரியும.இதனால் எதற்காக அழுகின்றாய் என நீதிபதி மஹர் சல்மா அல் மாஹதி கேட்டுள்ளார்.

பல தடவைகள் சாட்சியாளர் அழுது புலமபியதுடன் அவர் கூறியது மொழிப் பெயர்ப்பாளருக்கு புரியவில்லை.

இதனையடுத்து சாட்சியாளர் மீது பரிவு கொண்ட நீதிபதி குர் ஆன் வசனம் ஒன்றை கூறி அவரை தேற்றியுள்ளார்.

தனது தந்தை இறந்து விட்டதாகவும் பிள்ளை காலில் சத்திர சிகிச்சை செய்ய வேண்டும் எனவும் சாட்சியாளர் கூறியதுடன் மீண்டும் அழுது புலம்பினார்.

சாட்சியாளரின் கடவுச்சீட்டு பொலிஸார் பொறுப்பில் இருப்பதை பின்னரே நீதிபதி அறிந்து கொண்டதுடன், இதன் காரணமாகவே அவர் அழுதார என்பதையும் புரிந்து கொண்டார்.

சாட்சியாளர் மீது பரிதாபம் கொண்ட நீதிபதி, கடவுச்சீட்டை பொலிஸ் பொறுப்பில் வைத்திருக்க வேறு காரணங்கள் இல்லை எனில் அதனை சாட்சியாளரிடம் கையளிக்குமாறு உத்தரவிட்டார்.

இந்த சாட்சியாளர் டுபாயில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் துப்புரவு தொழிலாளியாக பணிபுரிந்து வருகிறார்.

பிரான்ஸ் பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக அவர் பணியாற்றும் நிறுவனத்தை சேர்ந்த இரண்டு அரேபியர்கள் மீதே குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (செ-11)

# ஒன்றுகூடலும் கலந்துரையாடலும்

(மன்னார்)

மன்னார் மற்றும் யாழ்ப்பாண இலக்கிய படைப்பாளிகள் கலைஞர் இடையேயான ஒன்றுகூடலும் கலந்துரையாடலும் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு டேவிற வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள திருமறைக் கலா மனறம், கலைத்தூது அழகியல் கல்லூரியில் எழுத்தாளர் சட்டநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் மன்னார் தமிழ் இலக்கியம் பற்றி தமிழ்நேசன் அடிகளாரும் மன்னார் நாட்டுக் கூத்துக்கள் பற்றி எஸ். ஏ. உதயனும் யாழ்ப்பாண இலக்கியம் பற்றி சி.ரமேசும் அண்மைக்கால யாழ்ப்பாண இலக்கிய செயற்பாடுகள் பற்றி வேலணையூர் தாசும் உரைகள் நிகழ்த்துவர். (2)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

## உண்மையான இன்பம்



- ஆன்மீக வழியில் தேடும் இன்பமே உண்மையான இன்பம்.
- கடவுள் நம்மோடு எப்போதும் இருக்கிறார். ஆனால், நம் கண்ணுக்கு புலனாவதில்லை.
- குறிக்கோளுக்குரிய முக்கியத்துவத்தை, அதை அடையும் பாதைக்கும் கொடுங்கள்.
- எதையும் கைம்மாறு கருதாமல் செய்ய முயலுங்கள். பயன் கருதி செய்யும் எதுவும் உதவியாகாது.
- கண்ணில் காணும் அனைத்தையும் கடவுளின் அம்சமாகவே போற்றுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.பி.எல்.கிரிக்கெட் போட்டி

## ஜொலிஸ்ரார் வெற்றி



ஜே.பி.எல் இல் இடம்பெற்ற மூன்றாவது போட்டியில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி போராடி வெற்றி பெற்றது.

இப் போட்டியில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியும் திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணியும் மோதியது.

நாணயற்சுழற்சியில் வென்ற திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன் படி முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல் வேலி கிரிக்கெட் கழக அணி 20 ஓவர்களில் 14 உதிரிகள் அடங்கலாக 7 விக்கெட்டுக் களை இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் பிரபவன் 35, விதுன் 20, சுரேந்திரன் 19, சிவராஜ் 17 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி சார்பில் சைலேஸ்வரன் 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், மணிவண்ணன் 20 ஓட்டங்களுக்கு 2விக்கெட்டுக்களையும, மதுஷன் 26 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 132 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி ஒரு கட்டத்தில் 50 ஓட்டங்களிற்கு 5 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது.

சஜீகனின் பொறுப்பான அரைச் சதத்தின் உதவியுடன் 18.4 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கினை அடை ந்தது.

இதில் சஜீகன் 46 பந்துகளில் ஆட்டமிழக்காது 54 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார், சஜீகனால் பெறப்பட்ட இவ் அரைச்சதம் ஜே.பி.எல் பருவகாலம் 2இல் பெறப்பட்ட முதலாவது அரைச்சதமாகும்.

மதுஷன் 15, வாமனன் 14 சைலேஷ்வரன் 12 ஓட்டங்களைப் பெற்றனர். உதிரிகளாக 19 ஓட்டங்கள் கிடைத்தது. வேறு எவரும் இரட்டை இலக்க ஓட்டங்களை எட்டவில்லை.

பந்துவீச்சில் திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணியின் சுரேந்திரன் 16 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும, பிரபவன் 2, கோகுலன் மற்றும் சுரேஷ் தலா ஒரு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். இதன் மூலம் இப் போட்டியில் ஜொலிஸ் ரார் விளையாட்டுக் கழக அணி 3 விக் கெட்டுகளால் வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக துடுப்பாட்டத்தில் 54 ஓட்டங்களைப் பெற்று தொடரின் முதல் அரைச் சதத்தைப் பெற்ற ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியின் சஜீகன் தெரிவானார். (க-23)

## கொக்குவில் ஸ்ரீ காமாட்சி வெற்றி



ஜே.பி.எல்.இல்.இடம்பெற்ற நான்காவது போட்டியில் கொக்குவில் ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

இப் போட்டியில் அரியாலை ஸ்டான்லி விளையாட்டுக் கழக அணியும் கொக்குவில் ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக் கழக அணியும் மோதியது.

நாணயச்சுழற்சியில் வென்ற கொக்குவில் ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக் கழக அணி 20 ஓவர்களில் 31 உதிரிகள் அடங்கலாக 7 விக் கெட்டுக்களை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தீபன் 59, சுதர்சன் 24 அரவிந்தன் 17, ரதீசன் 16 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் சுதர்சன் 24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், வசிகரன், துசியந்தன் கஜதீபன் தலா ஒவ்வொரு விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 177 என்னும் வெற்றி இலக் கோடு துடுப்பெடுத்தாடிய அரியாலை ஸ்டான்லி விளையாட்டுக் கழக அணி 19.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 161 ஓட்டங்களையே பெற்று போட்டியில் தோல்வியைத் தழுவியது. இதில் எனோஜன் 38, கன்னராஜ் 31, ரஜனிகாந் 16 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் தர்சன் 28 ஓட்டங்களுக்கு 4. விக்கெட்டுக்களையும், கார்த்திக், பிரசன்னா, பவீந்திரன், திவாகரன் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர். இதன் மூலம் இப் போட்டியில் கொக்குவில் ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக் கழக அணி 16 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாக துடுப்பாட்டத்தில் 59 ஓட்டங்களை பெற்ற கொக்குவில் ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக் கழக அணியின் தீபன் தெரிவானார். (க-23)

## குருநகர் கார்மேல் போய்ஸ் இறுதிப்போட்டிக்கு தெரிவு

கிளிநொச்சி மாவட்ட அணிக்கெதிரான கிரிக்கெட் போட்டியில் யாழ்.மாவட்ட அணியான குருநகர்' கார்மேல் போய்ஸ் அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

வடக்கு மாகாண விளையாட்டுப் போட்டிகளில் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் அரையிறுதிப் போட்டி கடந்த சனிக்கிழமை 10ஆம் திகதி நடைபெற்றது.

யாழ்.மாவட்ட அணிக்கும் கிளிநொச்சி மாவட்ட அணிக்கும் இடையிலான இப்போட்டியில நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ். மாவட்ட அணி துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.15 பந்துப் பரிமாற்றங்களில் யாழ். மாவட்ட அணி 130 ஓட்டங்களைக் குவித்தது.

செல்டன் (குருநகர் கார்மேல்போய்ஸ் அணித்தலைவர்) 5 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 40 ஓட்டத்தையும் மோகன்ராஜ் 3 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 25 ஓட்டத்தையும் அஜன் (குருநகர் கார்மேல்போய்ஸ் அணி வீரர்) ஒரு ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 14 ஓட்டங்களையும் பெற்றுகொடுத்தனர்

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மாவட்ட அணி 10பந்து பரிமாற்றத்தின் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 27 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. பந்து வீச்சில் யாழ் மாவட்ட அணி சார்பாக றொனி 1.4 பந்து பரிமற்றத்தினை வீசி 2ஓட்டங்களை கொடுத்து அந்த 2 ஓட்டங்களுமே உதிரிகளாக கொடுக்கப்பட்ட ஓட்டங்கள் 4 இலக்குகளை கைப்பற்றினார்.

அலன்ஹுவைவையா (குருநகர் கார்மேல் போய்ஸ் அணி வீரர்) 2 இலக்குகளையும் அருண் 2 இலக்குகளையும் சுஜன் 1 இலக்கையும்கைப்பற்றினர். இதன் மூலம் யாழ் மாவட்ட அணி இறுதிபோட்டிக்கு முன்னேறியது .

இறுதிப்போட்டி மன்னார் மாவட்டத்துடன் நாளை யாழ் மாவட்ட அணி மோதவுள்ளது.

## ஊர்காவற்றுறை பிரதேச செயலக தடகள விளையாட்டுப் போட்டி

### நாரந்தனை அண்ணா வி.க.முதலிடம்



தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தால் வருடாந்தம் நடத்தப்படும் தடகள விளையாட்டுப் போட்டியில் இவ்வருடம் 2014 நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழகம் முதலாம் இடத்தினைப் பெற்று வெற்றிக் கிண்ணத்தினை தனதாக்கிக் கொண்டுள்ளது.

இதில் பெண்கள் பிரிவில் சிறந்த மெய்வல்லுநர் வீராங்கனையாக இக்கழகத்தைச் சேர்ந்த செல்வி. சி.மீரா எம்சியா தெரிவு செய்யப்பட்டுள்ளமையும் நடைபெற்ற பெரு விளையாட்டுக்களில் பெண்கள் பிரிவில் வலைப்பந்தாட்டம், துடுப்பாட்டம், கபடி, எல்லே, உதைபந்தாட்டம் ஆகிய போட்டிகளில் பெண்கள் முதலாம் இடத்தையும் மெய்வல்லுநர் விளையாட்டுக்களில் 4X100, 4X400 அஞ்சல் ஓட்டத்தில் முதலாம் இடத்தை ஆண், பெண், இருபாலார் பெற்றுக் கொண்டனர். (க)


வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## மென்பந்தாட்ட சுற்றுப் போட்டி; ஆறுகால்மடம் லோட்டஸ் சம்பியன்



யாழ் கூழாவடி இராணுவ முகாம்இராணுவத்தினர் மென்பந்தாட்டத் துடுப்பாட்டக் கழகங்களுக்கிடையில் நடத்திய 15 பந்து பரி மாற்றங்கள் கொண்ட சுற்றுப்போட்டியில் ஆறுகால்மடம் லோட்டஸ் விளையாட்டுக்கழகம் சம்பியனாகியது. மேற்படி சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி கடந்த சனிக்கிழமை மானிப்பாய் செல்லமுத்து மைதானத்தில் இடம்பெற்றது. இறுதிப் போட்டியில் ஆனைக் கோட்டை யூனியன் அணியினை எதிர்த்து லோட்டஸ் அணி மோதியது.


நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் அணி 15 பந்துபரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றது. 116 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென்ற நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய லோட்டஸ் அணி 14.1 பந்து பரி மாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் எஸ்.சர்வன் 42 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். வெற்றிபெற்ற வீரர்கள், அணிகளுக்கான கேடயங்களை கூழாவடி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி வழங்கினார். (க-23)



யாழ்.பல்கலைக்கழக பீடங்களுக்கு இடையே நடைபெற்ற தடகளப் போட்டியில் முகாமைத்துவ வணிகபீடம் வெற்றிபெற்று கிண்ணத்தைத் தனதாக்கிக்கொண்டது. வெற்றி பெற்ற முகாமைத்துவ பீட அணியினரைப் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹைதராபாத்தை வீழ்த்தி மும்பை அசத்தல் வெற்றி



ஹைதராபாத் அணிக்கு எதிரான ஐ.பி.எல் லீக் போட்டியில், மும்பை அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது.

மும்பை, ஹைதராபாத் அணிகள் மோதிய ஐ.பி.எல் லீக் போட்டி, ஹைதராபாத்தில் நேற்று நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற ஹைதராபாத் அணி அணித்தலைவர் ஷிகர் தவான், துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். மும்பை அணியில் பிரவீண் குமாருக்குப் பதில், பிரக்யான் ஓஜா இடம்பெற்றார்.

ஹைதராபாத் அணியின் ஷிகர் தவான் (11), லோகேஷ் ராகுல் (10) நிலைக்கவில்லை. பின்ச் அரைசதம் அடித்து (68) ஆட்டமிழந்தார். பொலார்டின் கடைசி ஓவரில் 18 ஓட்டங்கள் கிடைக்க, ஹைதராபாத் அணி 20 ஓவரில், 3





விக்கெட்டுக்கு 157 ஓட்டங்கள் எடுத்தது. வோர்னர் (55), நாமன் ஓஜா (7) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

சவாலான இலக்கைத் துரத்திய மும்பை அணிக்கு கவுதம் (1) ஏமாற்றினார். அடுத்து சிம்மன்ஸ், அம்பதி ராயுடு இணைந்து அசத்தல் ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இரண்டாவது விக்கெட்டுக்கு 130 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், சிம்மன்ஸ் (68), அம்பதி ராயுடு (68) அடுத்தடுத்த ஓவர்களில் அவுட்டாகினர். பின், ரோகித் சர்மா ஒரு பவுண்டரி அடிக்க,

மும்பை அணி 18.4 ஓவரில், 3 விக்கெட்டுக்கு 160 ஓட்டங்கள் எடுத்து, அசத்தல் வெற்றி பெற்றது. ரோகித் சர்மா (14), பொலார்ட் (6) ஆட்டமிழக்காமல இருந்தனர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக மும்பை அணியின் ராயுடு தெரிவானார். (க)




# சென்னையில் ஐ.பி.எல்லில் ஆடாதது மிகுந்த ஏமாற்றம் -பிளமிங்



சென்னையில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் ஆட்டத்தை காண முடியாமல் போனது தனக்கு ஏமாற்றமளிப்பதாக ஸ்டீபன் பிளமிங் கூறியுள்ளார்.

கேலரி பிரச்சினை காரணமாக மாநகராட்சி தடையில்லா சான்றிதழ் வழங்காததால் சென்னையில் ஐ.பி.எல் போட்டி நடத்தப்படவில்லை.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணி மோதும் 2 ஆட்டமும், பிளே ஆப் சுற்றின் 2 ஆட்டமுமாக மொத்தம் 4 ஆட்டம் சேப்பாக்கம் மைதானத்தில் நடத்த திட்டமிடப்பட்டது.

2 ஆட்டம் ராஞ்சிக்கும், பிளே ஆப் ஆட்டம் கொல்கத்தா மற்றும் மும்பைக்கும் மாற்றப்பட்டது. சென்னை அணி சேப்பாக்கம் மைதானத்தில் ஒரு போட்டியில் கூட ஆட முடியாமல் போனது ரசிகர்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்திருக்கிறது.

இதேபோல சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் பயிற்சியாளரும், நியூசிலாந்து அணியின் முன்னாள் அணித்தலைவருமான ஸ்டீபன் பிளமிங்கும் ஏமாற்றம் அடைந்துள்ளார்.

இது குறித்து பிளமிங் கூறுகையில், சென்னை சுப்பர் கிங்ஸின் அணியின் நகரமே சென்னைதான். அதனால் நாங்கள் சென்னையில் விளையாட முடியாமல் போனது மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது.

பிற இடங்களில் ஆட்டங்கள் நடந்தாலும், சென்னை ரசிகர்களின் ஆதரவுக்குத்தான் ஆவலுடன் இருந்தோம். ஆனால் அந்த ஆவல் ஏமாற்றத்தில்தான் முடிந்தது. தற்போது எங்கள் அணியின் சொந்த நகரமாக ராஞ்சி உள்ளது என்று கூறியுள்ளார். (க)

# இலங்கை...

கள் எதுவும் எட்டப்படாத நிலையில், அன்றைய பேச்சுவார்த்தை நிறைவுக்குவந்தது.

இலங்கை -இந்திய மீனவர்களுக்கு இடையிலான இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை மார்ச் மாதம் 13 ஆம் திகதி நடைபெறவிருந்த நிலையில், அந்த பேச்சுவார்த்தை மார்ச் மாதம் 27ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

எனினும், மார்ச் 27ஆம் திகதியும் இந்த பேச்சுவார்த்தை நடத்தப்படவில்லை.

குறித்த காலப்பகுதியில் இலங்கையில் கைதான இந்திய மீனவர்களை விடுதலை செய்யும் வரை பேச்சுவார்த்தையை நடத்துவது தொடர்பிலான இணக்கம் எட்டப்படமாட்டாதென தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஜெயராம் தெரிவித்திருந்த நிலையில், இந்த பேச்சுவார்த்தை பிற்போடப்பட்டிருந்தது.

இந்த நிலையியே நேற்று கொழும்பில் இந்த பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இந்திய -இலங்கை மீனவர்களுக்கு இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை ஏற்படுத்தி, அதன் அடிப்படையில் மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான இணக்கம் எட்டப்பட வேண்டும் என இந்திய மீனவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து, சட்டவிரோத வலைகளை பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றமை குறித்து இந்திய மீனவர்களின் கவனத்திற்கு இதன் போது கொண்டு வரப்பட்டது.

எனினும், சட்டவிரோத மீன்பிடி வலைகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடவில்லை எனவும், இந்திய அரசாங்கத்தினால் அதற்கு பல்வேறுப்பட்ட தடைகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும் இந்திய மீனவர்கள் தெரிவித்திருந்தனர்.

இலங்கைக் கடற்பரப்பிற்குள் தமிழக மீனவர்கள் பிரவேசிக்கின்றமை தொடர்பில் ஒளிபரப்பிய KATCHCHATHIVU EXPOSE என்ற செய்தி விவரணத் தொகுப்பும் நேற்றைய பேச்சுவார்த்தையின் போது காண்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (செ-11)

# யுத்தவெற்றி...

அமைச்சின் செயலாளரினதும் விருப்பமாகும். எமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு நாங்கள் இந்த நாட்டில் எங்கும் சென்ற வரக்கூடிய சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து பேணுவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என வட மாகாண ஆளுனர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

இதேவேளை இறுதிப்போரில் கொத்துக்கொத்தாக துடிதுடித்து உயிரிழந்த உறவுகளை இம் மாதம் 18-ம் திகதி பொது இடங்களில் நினைவு கூர இராணுவத்தினர் தடைவிதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# விக்னேஸ்வரனை...

தேசிய அமைப்பாளருமான பஷில் ராஜபக்ஷ இந்த விடயம் குறித்து மேலும் குறிப்பிடுகையில்,

வட மாகாண சபை முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனை முதலமைச்சர் பதவியிலிருந்து வெளியேற்றுவதற்கு புலம்பெயர் அமைப்புக்களும் நாட்டில் உள்ள தமிழ் இனவாத சக்திகளும் பாரிய சதித்திட்டம் ஒன்றை மேற்கொண்டு வருகின்றன.

விக்னேஸ்வரன் மூலம் இந்தத் தரப்பினர் எதிர்பார்த்த விடயங்கள் நிறைவேறாமையின் காரணமாக இவ்வாறு அவரை வெளியேற்றுவதற்கு சதி முயற்சிகளை முன்னெடுக்கின்றனர். ஆனால் இவ்வாறு வட மாகாண சபை முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனை பதவியிலிருந்து விலக்கிவிட்டு அந்தப் பழியை அரசாங்கத்தின் மீது சுமத்துவதற்கும் முயற்சிக்கின்றனர்.

அதாவது அரசாங்கம் அழுத்தங்களை பிரயோகிப்பதால் வட மாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பதவி விலகிவிட்டார் என்று கூறுவதற்கு இனவாத சக்திகள் முயற்சிக்கின்றன. அந்த விடயம் எங்களுக்கு தெரிந்துவிட்டது.

மத்திய அரசாங்கத்தை பொறுத்தவரை வடக்கு மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்பதே ஒரே நோக்கமாகும். அதற்காகவே அனைத்து தரப்புக்களும் இணைந்து செயற்பட வேண்டும் என்று ஆரம்பத்திலிருந்து கோரிக்கை விடுத்துவருகின்றோம்.

வடக்கு மாகாண சபை உருவாக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் வடக்கில் தேவையான அனைத்து விடயங்களையும் மத்திய அரசாங்கம் செய்திருந்தது. குறிப்பாக மக்களுக்கு இடையிலான தொடர்புகளை நாங்கள் வலுப்படுத்தினோம். வடக்கில் மாவட்டங்களை இணைக்கும் வகையில் வீதிகளை அமைத்தோம். வடக்கு ரயில் பாதைக்காக 850 மில்லியன் டொலர்கள் செலவிடப்படுகின்றன. இது மிகப்பெரிய தொகையாகும். அதாவது மத்தல விமான நிலையம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகம் ஆகியவற்றுக்கு செலவிடும் தொகைக்கு சமனாக இவ்வாறு அபிவிருத்திகள் செய்யப்படுகின்றன.

யாழ்ப்பாண மருத்துவமனை சகல வசதிகளுடனும் காணப்படுகின்றன. அத்துடன் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலும் மருத்துவமனைகளை அமைத்துள்ளோம். கல்வி, சுகாதாரம், விவசாயம், மீன்பிடி உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் வளர்ச்சியை ஏற்படுத்திவிட்டே வட மாகாண சபையை உருவாக்கினோம்.

குறிப்பாக சில வெளிநாட்டு நிதி நேரடியாக வட மாகாண சபைக்கு செல்லுமளவுக்கு அனுமதி வழங்கியுள்ளோம். இது ஒரு முறையற்ற செயற்பாடாக இருப்பினும் வட. மாகாண சபைக்காக அதற்கு அனுமதியளித்துள்ளோம். அவ்வாறு சிறப்பான நிலைமைகள் காணப்பட்டும் கூட்டமைப்பினர் அரசாங்கத்தை குறைகூறுவதிலேயே குறியாக உள்ளனர். மாறாக வடக்கு மக்களுக்கு சேவையாற்ற எதுவும் செய்யவில்லை.

இந்த விடயத்தை அரசியல் நிகழ்ச்சி நிரலுக்குள் கொண்டு வரக் கூடாது. மாறாக மக்களின் நிகழ்ச்சி நிரலாக பார்க்கவேண்டும். வாக்குகளை எதிர்பார்த்து அரசாங்கம் வடக்கு மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்று கருதவில்லை. மாறாக அந்த மக்களுக்கு சேவையாற்ற [illegible] தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடம் உள்ளூராட்சிமன்றங்களும்மாகாண சபையும் உள்ளன. எம்மிடம் பாராளுமன்ற அதிகாரமும் நிறைவேற்று அதிகாரமும் உள்ளது. எனவே இரண்டு தரப்புக்களும் ஒன்றிணைந்து அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவேண்டும் என்பதே எமது திட்டமாகும்.

வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கு அதிகமான சந்தர்ப்பங்களும் சாத்தியங்களும் காணப்படுகின்றன. ஆனால் கூட்டமைப்பினர் மத்திய அரசாங்கத்தை குறைகூறுகின்றனரே தவிர சேவையாற்ற முன்வரவில்லை.

ஒருவேளை அரச இயந்திரம் செயற்படும் விதம் தொடர்பில் வடக்கு முதல்வருக்கு அனுபவங்கள் இல்லாமல் இருக்கலாம். எங்களுக்கே அவற்றை புரிந்துகொள்ள காலம் தேவைப்படுகின்றது. எனவே அவற்றை உரிய முறையில் புரிந்து கொண்டு மத்திய அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வட மாகாண சபை அதிகாரத்தில் இருப்போர் முன்வரவேண்டும்.

இது இவ்வாறு இருக்க வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை பொது வேட்பாளராக களமிறக்கினால் அது ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் அடைகின்ற மிகப்பெரிய அரசியல் வெற்றியாக அமையும்.

காரணம் இதற்கு முன்னர் தமிழ் வேட்பாளர்கள் ஜனாதிபதி தேர்தல்களில் போட்டியிட்டுள்ளனர். ஆனால் அவர்கள் ஒரு கட்சியின் சார்பாகவே போட்டியிட்டுள்ளனர். ஆனால் வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் பொது வேட்பாளராக களமிறக்கப்படுவாராயின் அதன்மூலம் இந்த நாட்டின் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் அநீதிகளின்றி வாழ்கின்றனர் என்பது உறுதியாகும்.

அனைத்து இன மக்களும் அனைத்து உரிமைகளுடனும் இலங்கையில் வாழ்கின்றனர் என்பது இதன்மூலம் உறுதியாகும். எனவே விக்னேஸ்வரன் பொது வேட்பாளராக வந்தால் அது எமக்கு கிடைக்கின்ற வெற்றியாகும்.

ஆனால் இந்த நாட்டின் உண்மையான பொதுவேட்பாளராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே காணப்படுகின்றார். அனைத்து இன மக்களையும் சமூகங்களையும் அரவணைத்துக்கொண்டு ஜனாதிபதி பயணிக்கின்றார். அந்தவகையில் பார்க்கும்போது அவரே சிறந்த பொது வேட்பாளராக இருக்கின்றார் என்றார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டணிக் கட்சியின் தலைவர்...

கருத்தாடல்கள் இடம்பெறும் என்றும் அறியமுடிகின்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுகுள் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகளானது தற்போது பகிரங்கமாக வெளிக்கிளம்ப ஆரம்பித்துள்ளன. கஸினோ சட்டமூல விவகாரத்தில் ஆரம்பித்த சர்ச்சை படிப்படியாக விஸ்வரூபமெடுக்கத் தொடங்கியுள்ளது.

இந்நிலையில், கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அரச தரப்பு நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தில் அமைச்சர்களான சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ச ஆகியோர் பங்கேற்காமை மேலும் நெருக்கடிகளை ஏற்படுத்தியிருப்பதாக அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அத்துடன், வியாழக்கிழமை காலை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் அமைச்சர் விமல் வீரவன்ச பங்கேற்கவில்லை. அதேவேளை, முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முஸ்லிம் பங்காளிக்கட்சிகளும் அரச தலைமைக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன.

உரிய நடவடிக்கைகள் இல்லையேல அரசுடன் கூட்டணி தொடராது என்ற தொனியில் பங்காளிக் கட்சிகள் கருத்து வெளியிட்டு வருகின்றமையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கடும் எரிச்சலை உண்டு பண்ணியுள்ளது.

நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தின் போது பிரச்சினைகள் இருபபின் அவற்றை உரிய வகையில் சுட்டிக் காட்டுங்கள். அமைச்சர்கள் அமைச்சரவைக் கூட்டத்திலும், எம்.பிக்கள் நாடாளுமன்றக் குழுக்கூட்டத்திலும குறைநிறைகளைச் சுட்டிக்காட்டலாம என்று கடுந்தொனியில் ஜனாதிபதி பேசியமை அவரின் கோபத்தை வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது என்றும் விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர்.

நாட்டில் இனிவரும் காலப்பகுதியல் முக்கிய தேர்தல்கள் நடைபெறவுள்ளன. ஊவா மாகாணசபைத் தேர்தல், பொதுத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் ஆகியவற்றை முரண்பாடுகளுக்கு மத்தியில் சந்தித்தால் அரசுக்கு பாதக விளைவுகள் ஏற்படும். கூட்டாகப் பயணித்தால் மாத்திரமே எதிரணியைச் சமாளிக்க முடியும். இதனாலேயே பங்காளிக் கட்சிகளும் மனம் திறந்து பேசும் வகையில் இவ்வாரம் அரச கட்சித் தலைவர்கள் கூட்டம் அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பங்காளிக் கட்சிகளின் கோரிக்கைகள், பிரச்சினைகள் பற்றியும் இதன் போது ஜனாதிபதி கேட்டறிந்து கட்சிகளைத் திருப்திப்படுத்தும் முயற்சியில் இறங்குவார் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

மேற்படி கூட்டம் முடிவடைந்த பின்னரே ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய பிரமுகர்களை ஜனாதிபதி சந்திப்பார் என்றும், இதன் நிமித்தமே நடைபெறவிருந்த கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது என்றும் அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது. (செ-11)

# இலங்கை...

திய உயர்ஸ்தானிகர்ாலயத்தின் அதிகாரிகளும் இந்த சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இலங்கை மீனவ சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தி 20 உறுப்பினர்களும், 10 அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கை-இந்திய மீனவர்களுக்கு இடையிலான முதற்கட்ட பேச்சுவார்த்தை சென்னையில் கடந்த ஜனவரி மாதம் 27ஆம் திகதி நடைபெற்றது.

இதன்போது, உரிய தீர்மானங் 19 ஆம் பக்கம் பார்க்க..

# ஜனாதிபதித் தேர்தல்...

குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கோட்டே நாகவிகாராதிபதி மாதுலு வாவே சோபித தேரர் தலைமையிலான இந்தக் குழு விரைவில் தமது பணிகளை முன்னெடுக்கும் என்று அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

கல்வி நடவடிக்கைகளுக்காக ஒரு மாதகால பயணத்தை மேற்கொண்டு அமெரிக்கா சென்றுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 17ஆம் திகதி நாடு திரும்பவுள்ள நிலையில், இது தொடர்பிலான முதல் சந்திப்பை ரணிலுடனேயே மேற்படி குழு நடத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதன்பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி, ஜனநாயகக் கட்சி, ஜனநாயக மக்கள் முன்னணி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளையும், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் சிலவற்றையும் சந்திப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவற்றுக்குப் புறம்பாக சிவில் அமைப்புகள், தொழிற்சங்கங்களுடனும் சந்திப்புகள் இடம்பெறவுள்ளன என்று அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவசபை உறுப்பினர்கள் கோட்டே நாகவிகாராதிபதியை அண்மையில் சந்தித்து பேச்சு நடத்தினர். இதன்போது முன்வைககப்பட்ட ஆலோசனையின் பிரகாரமே மத்தியஸ்த குழு நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. இககுழுவில் இடம்பெற்றுள்ள உறுப்பினர்கள் பெயர் விவரம் இன்னும் உத்தியோகபூர்வமாக வெளியாகவில்லை.

இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழித்தல், 17வது திருத்தச் சட்டத்தை மீள அமுலாக்கல், பிரதமர் தலைமையிலான அமைச்சரவை, உப ஜனாதிபதிகளாக தமிழர் ஒருவரும், முஸ்லிம் ஒருவரும் நியமிக்கப்பட வேண்டும் என்பவை உட்பட மேலும் சில கோரிக்கைகளை முன்னிறுத்தியே மத்தியஸ்த பேச்சுகள் இடம்பெறவுள்ளன.

அதேவேளை, அடுத்த மாதம் ஊவா மாகாணசபையைக் கலைதது விட்டு அதற்கு ஒகஸ்ட் மாத இறுதி வாரத்தில் அல்லது செப்டெம்பர் முதல் வாரத்தில் தேர்தலை நடத்துவதற்கு அரசு உத்தேசித்துள்ளது எனவும் அறியமுடிகின்றது. (செ-11)

# இலங்கைத் தமிழர்....

லிடம் பெற்றுள்ளனர்.

போர் முடிவுக்கு வந்த பின்னர், அமைதியான வாழ்க்கையை எண்ணி 20 ஆயிரம் தமிழர்கள், இந்திய அரசின் வெளியேற்ற அனுமதியை பெற்று சொந்த நாடு திரும்பினர்.

இலங்கையில் அமைதி திரும்பியதால், இந்திய அரசாங்கம் 2011 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் இருந்து வரும் அகதிகளை ஏற்பதில்லை.

இந்த நிலையில், தற்போது இந்தியாவுக்கு சென்று கரையிறங்கும் இலங்கை தமிழர்கள் வெளிநாட்டவர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவதுடன் அவர்கள் சிறையில் அடைக்கப்படுகின்றனர்.

இலங்கை தமிழர்களுக்கு இந்தியாவின் புதிய விதிகள் தெரியாது என மக்கள் கண்காணிப்பு அமைபபின் இராமநாதபுரம் இணைப்பாளர் ஷேக் இப்ராஹிம் தெரிவித்தார்.

இலங்கை தமிழர்களுக்கு இந்திய அரசாங்கம் கட்டாயம் அகதி அந்தஸ்து வழங்க வேண்டும். அவர்களை அகதி முகாம்களில் வசிக்க இடமளிக்கப்பட வேண்டும்.

அவர்களை முகாம்களில் தங்க வைத்து ஏனைய அகதிகளுக்கு வழங்கும் சலுகைகளை வழங்க வேண்டும் எனவும் இப்ராஹிம் கூறியுள்ளார்.

அமைதியான வாழ்க்கையை எதிர்பார்த்தே தமிழர்கள் இலங்கையில் இருந்து வெளியேறுகின்றனர். எனினும் இந்தியா உணர்வற்ற அணுகுமுறையை கையாள்கிறது என்றும் இப்ராஹிம் குற்றம் சுமத்தியுள்ளார்.

2011 ஆம் ஆண்டுக்கு பின்னர் வரும் எந்த அகதிகளையும் தங்க அனுமதி வழங்கக் கூடாது என உத்தரவிடப்பட்டுள்ளதாக மண்டபம் முகாமில் உள்ள விசேட பிரதி ஆட்சியாளர் அலுவலகத்தின் தகவல்கள் தெரிவித்தன. (செ-11)

# ஜனாதிபதியின் செயலாளரு...

யும் நிறைவேற்றத் தயார் என்ற ஜனாதிபதியின் கருத்து தொடர்பில் வினவியபோதே அவர் மேற் கண்டவாறு கருத்துத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஐ.நா.மனித உரிமைப் பேரவையின் தீர்மானங்களின் சர்வதேச விசாரணை தவிர்த்து ஏனைய பரிந்துரைகளை நிறைவேற்றத் தயார் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். சர்வதேச விசாரணைகளைத் தவிர மிக முக்கியமான விடயங்களாக வடக்கில் இருந்து இராணுவத்தைக் குறைக்க வேண்டும்.

தனியார் காணிகளை பொதுமக்களிடம் ஒப்படைக்க வேண்டும். மீள் குடியேற்றத்தினை மேற்கொள்ள வேண்டும். வட மாகாண சபைக்கான அனைத்து அதிகாரங்களும் வழங்கப்படல் வேண்டும் ஆகியவை உள்ளடங்கலாக பல விடயங்கள் அமைந்துள்ளன. இவ்விடயங்களினால் வட மாகாண தமிழ் மக்கள் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோல் அரசாங்கம் தீர்வினை எய்துவதற்கான எந்த வொரு பேச்சுவார்த்தையினையும் எம்முடன் மேற்கொள்ள விருமபவில்லை. இது தொடர்பிலும் வலியுறுத்தப்பட்டிருந்தது. எனவே, இவை தொடரபில் யுத்தம் முடிவடைந்து ஐந்து ஆண்டுகளாக அரசாங்கம் எந்தவித முன்னெடுப்புக்களையும் மேற்கொள்ளாது இப்போது சர்வதேச விசாரணையைத் தவிர ஏனைய அனைத்தையும் மேற்கொள்ள முடியும் என்று ஜப்பான் அமைச்சரிடம் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் அரசாங்கம ஐ.நா. பரிந்துரைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு எதிராகவே அனைத்து செயற்பாடுகளையும் முன்னெடுத்தது. வடக்கில் காணி அபகரிப்பு, இராணுவ குவிப்பு, பெண்கள் மீதான அடக்கு முறைகள் மற்றும் வட மாகாண சபை தேர்தலை நடத்தினாலும் இன்னமும் அடக்கு முறைக்குள்ளேயே வைத்திருப்பது போன்ற செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

எனவே, சர்வதேசத்திடம் பொயயான வாக்குறுதிகளை கொடுத்து காலத்தைக் கடத்தியது போதும். இப்போதும் அனைத்தையும் செய்வோம் எனக்கூறி கதைத்துக் கொண்டிருக்காமல் செயலில் காட்ட வேண்டும்.

ஜனாதிபதி ஜப்பானிய அமைச்சரிடம் குறிப்பிட்டது அனைத்தும் உண்மையெனின் இம்மாத இறுதிக்குள் அனைத்தையும் செயற்படுத்திக் காட்ட வேண்டும்.

மேலும், நல்லிணக்க ஆணைககுழுவின் பரிந்துரைகளில் 70 வீதமானவை நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது என அரசாங்கம் தெரிவிக்கின்றது. ஆணைக்குழுவின் செயலணிக் குழுத்தலைவர் லலித் வீரதுங்கவே இதனை குறிப்பிட்டு வருகின்றார்.

ஆனால், உண்மையிலேயே நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் 20 வீதமேனும் செயுலாக்கப்படவில்லை. இன்றும் வடக்கில் அனைத்து செயற்பாடுகளிலும கட்டுப்பாடுகளே விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்கவுடன் பகிரங்க விவாதத்தை நடத்த நான் தயாராகவே உள்ளேன். ஆதாரமிருப்பின் செயற்படுத்திய திட்டங் களை லலித் வீரதுங்க காண்பிக்க வேண்டும் எனவும் அவர தெரிவித்தார். (செ-11)


## வேலைவாய்ப்புக்கள்

நீங்கள் இன்னும் வேலை தேடுகிறீர்களா?

எமது பல்தேசிய கம்பனியில் நிரந்தர வேலைவாய்ப்புக்கள் உள்ளன.
- Sales Executives
- Supervisors (மேற்பார்வையாளர்)
- Management Trainee

தங்குமிடம் & உணவு வசதிகள் இலவசம்
வயதெல்லை 18 – 30



மேலே உள்ள தொழில்களுக்கு விண்ணப்பிக்கலாம்.
முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி, திருகோணமலை ஆகிய வெளிமாவட்டத்தினருக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.
(C-7354) நீங்கள் O/L படித்தவராயின் இன்றே அழையுங்கள்
077 798 1471, 0778794077, 0777009820

## யாழில் டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி அன்னையாரின்

அருள் ஒளி தர்சன மாலையும் வைகாசி மாத விசேட பூஜையும்



இடம் : திவ்வியஜீவன சங்க மண்டபம்
சட்டநாதர் கோயிலடி நல்லூர்.
காலம் : 15.05.2014.
வியாழக்கிழமை பகல் 11.00 மணி



வரமருளிக் காத்தருள இராஜேஸ்வரி அம்மானாக அவதாரமெடுத்து டென்மார்க் பிரண்டாபதியில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ அபிராமி அன்னையரின் வைகாசி மாத விசேட பூஜை இடம்பெற ஸ்ரீ அபிராமி அம்பாளின் திருவருளும் ஸ்ரீ அபிராமி உபாசகியின் ஆசிகளும் கைகூடியுள்ளன.

ஏற்கனவே டென்மார்க்கிலிருந்து எடுத்துவரப்பட்ட அம்பாளின் திருவடிக்குப் பால் அபிசேக பூஜை சிறப்பாக இடம்பெறும் பால் அபிசேகம் செய்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றிக்கொள்ள விரும்புபவர்கள் மண்டபத்திலே பாலினைப்பெற்று வழங்கி அம்பாளின் திருவருளை பெற்றுயும்வண்ணம் வேண்டுகின்றோம்.

குறிப்பு : ஒவ்வொரு மாதத்தின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்திலும் மாத இறுதி ஞாயிற்றுக்கிழமையில் சாந்தச்சோலை வீதி பூந்தோட்டம் வவுனியா எனும் முகவரியில் அமைந்துள்ள ஸ்ரீ அபிராமி அம்மன் ஆலயத்தில் சிறப்புப் பூஜை இடம்பெறுகின்றது.

யாழ் தொடர்புகளுக்கு 077 6993861. 07798... டென்மார்க் தொடர்புகளுக்கு 0045 ...80192
(6366)

## ELTC ஆங்கிலப் பாடசாலையின் விசேட கட்டணக்கழிவு

கிளிநொச்சி மாணவர்களுக்கு அரியவாய்ப்பு
3-5 வயது வரையான சிறுவர்களுக்கானது
ஆங்கில மொழி மூல பாடசாலையில் எதிர்வரும் 20-05-2014 இற்கு முன்னர் அனுமதிகளைப் பெற்றுக் கொள்பவர்களுக்கு
அனுமதிக்கட்டணம் 2000/= மட்டுமே
ELTC ஆங்கிலப்பாடசாலை கிளி/மத்திய கல்லூரி முன்பாக 077 074 3131

## வீடு வாடகைக்குத் தேவை

ஆங்கிலப் பாடசாலை ஒன்றை நடாத்துவதற்கு சாவகச்சேரியை அண்மித்த பிரதேசத்தில் வீடு வாடகைக்குத்தேவை
(C-7349)
தொடர்புகளுக்கு ELTC ஆங்கிலப்பாடசாலை கிளி/மத்திய கல்லூரி முன்பாக 077 074 3131


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.8,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.